REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 18 நவம்பர்- டிசம்பர் 2011 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 139

# மக்கள் விரோத வரவு செலவுத் திட்டம்



**மகிந்த சிந்தனையால்** வழிநடாத்தப்படும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனி அரசாங்கம் அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தினை நிறைவேற்றியுள்ளது. பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருப்பதால் எத்தகைய சட்டத்தையும் நிறைவேற்றக் கூடிய நிலையில் அரசாங்கம் இருந்து வருகின்றது. தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களுக்கு எவ்வகையிலும் ஆறுதலும் ஆதரவும் வழங்காத முற்றிலும் சொத்து சுகம் பெற்ற உயர் வர்க்கத்திற்கு சார்பான ஒரு வெட்கம் கெட்ட வரவு செலவுத் திட்டத்தினை இவ் அரசாங்கம் நிறை வேற்றிக் கொண்டதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

கடந்த 21.11.2011 அன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிதியமைச்சராக நின்று மேற்படி வரவு செலவுத்திட்ட உரையை நிகழ்த்தினார். இரண்டேகால் மணிநேரம் இடம்

- அரசாங்க ஊழியருக்கு அற்ப சம்பள உயர்வு!
- தனியார் துறையினருக்கு சம்பள உயர்வு மறுப்பு!
- ஆயுதப் படைகளுக்கு அள்ளி இறைப்பு!
- 3 வீத நாணய மதிப்பிறக்கம்!
- பொருட்களின் விலை அதிகரிப்பு!
- வாழ்க்கைச் செலவு உயர்வு!
- கல்வி – சுகாதாரத்திற்கு அற்ப தொகை!
- மீள்குடியேற்றத்திற்கு கிள்ளித் தெளிப்பு!

பெற்ற மேற்படி வரவு செலவுத் திட்ட விளக்கத்தை நாட்டு மக்கள் பாராளுமன்ற அடிபிடிகள் மத்தியிலும் அவதானமாகக் கேட்டனர். பின்பு ஊடகங்களில் படித்தனர். "எங்களை வழமையாகவே முட்டாள்களாக்கி ஏமாற்றும் வரவு செலவுத் திட்டமாகவே இதுவும் அமைந்துள்ளது" எனக் கூறிக் கொண்டனர். இவ்வரவு செலவுத் திட்டம் மகிந்த சிந்தனையின் கீழான அரசாங்கத்தின் இரண்டாவது பதவிக் காலத்தில் தொடரும் ஏழாவது வரவு செலவுத் திட்டமாகும். இதனால் இலங்கையை ஆசியாவின் அதிசயமாக மாற்ற முடியும் என எந்தவொரு அடிமுட்டாளும் கூட நம்ப முடியாத அளவுக்கு இவ்வரவு செலவுத் திட்டம் அமைந்திருக்கிறது.

இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் அரசாங்க, தனியார் துறை ஊழியர்கள் தொழிலாளர்கள் தமது வாழ்க்கைச்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## மலையகத் தலைமைகள் அரசாங்க விசுவாசிகள் மக்கள் பிரச்சினைகளைப் பேசமாட்டார்கள்

அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் பற்றிய விவாதம் பல நாட்கள் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. அவற்றால் உழைக்கும் மக்கள் பெரும் திரளினருக்கு எவ்விதப் பயனும் கிடைக்காது என்பது யாவரும் அறிந்த ஒன்றே. இருப்பினும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அவற்றில் அரசாங்கம் காட்டி வரும் அக்கறையின்மை மாற்றான் தாய் மனப்பான்மை போன்றவற்றை அம்பலப்படுத்திக் கொண்டமையைக் காணமுடிந்தது. ஆனால் நமது மலையகத் தமிழ் மக்களான பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர் நோக்கும் பாரிய பிரச்சினைகள் பற்றி எந்தவொரு மலையகப் பாராளுமன்ற உறுப்பினரோ அல்லது அமைச்சரோ குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவுக்கு எதையுமே பேசவில்லை. அப்படி பேசியிருந்தால் தடியிலும் நோகாமல் பாம்பும் சாகாமல் இருப்பது போன்றே பேசியிருக்கிறார்கள்.

இன்று மலையக மக்கள் சகல நிலைகளிலும் மிகவும் தாழ்ந்த வாழ்க்கைத் தரத்தினை உடையவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். சம்பளம் முதல் வேலை வழங்கப்படுவது வரை, வீடு காணி இல்லாதது தொடக்கம் கல்வி சுகாதாரம் வரை, விலை உயர்வுகள் வாழ்க்கைச்

தொடர்ச்சி 3ம் பக்கம்

## காணாமல் போனோரைக் கண்டுபிடித்துத் தருமாறு யாழ்ப்பாணத்தில் மக்கள் ஆர்ப்பாட்டம்.

புதிய - ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி பங்கேற்பு

**சர்வதேச மனித உரிமைகள்** தினமான 10.12.2011 அன்று யாழ்ப்பாணம் பிரதான பேரூந்து நிலையம் முன்பாக ஐந்நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் கூடி நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காணாமல் போனோரைத் தேடிக் கண்டறியும் அமைப்பு ஏற்பாடு செய்த இவ் வீதி ஆர்ப்பாட்டத்தை தடுக்கப் பெருந்தொகையான பொலிஸார் வீதிச் சோதனை, ரோந்து என மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டதுடன் ஏற்பாட்டுக் குழுவினரையும் உரிய இடத்திற்கு வராது தடுத்தும் வைத்திருந்தனர். ஆனால் அவற்றையும் மீறி பேரூந்து நிலையம் முன்பாக காணாமல் போனோரின் பெற்றோர், மனைவிமார், பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள் உட்பட சுமார் ஐந்நூறு பேர் வரை ஒன்று கூடினர். இவர்களில் இருநூறு பேர் வரை பெண்களாவர். காணாமல் போனோரின் படங்களுடனும் அவர்களது உறவுகள் குரல் வைத்து அழுத காட்சிகள் கல் நெஞ்சம் கொண்டோரையும் கரையச் செய்யும் அளவுக்கு காணப்பட்டது.

ஆர்ப்பாட்டம் பதினொரு மணியளவில் தொடங்கி பன்னிரெண்டரை மணிவரை நடைபெற்றது. "காணாமல் போனோரின் விபரங்களை வெளியிடு", "மறைத்து வைத்திருப்போரை வெளியே எமக்குக் காட்டு", "அரசியல் கைதிகளை உடனே விடுதலை செய்", "மகிந்த அரசே மனித உரிமைகளை மிதிக்காதே", "மகிந்த அரசே தாய்மாரின் கண்ணீருக்கு பதில் கூறு", "ஐக்கியப்பட்ட மக்கள் போராட்டமே ஓரே வழி"

தொடர்ச்சி 3ம் பக்கம்



# தோழர் சுகேசனையும் !

## ஏனைய அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!



2007ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலுருந்து பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு (நான்கரை ஆண்டுகளுக்கு மேல்) விசாரணையின்றி தடுத்து வைக்கப்ட்டுள்ள எமது கட்சியின் முன்னிலைத் தோழர் எஸ்.சுகேசனனும் மற்றும் அவருடன் கைது செய்யப்பட்ட ஏனைய எமது கட்சியின் தோழர்கள் நால்வரும் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்களில் நால்வர் மூன்றாண்டுகளுக்கு முன்பு விடுவிக்கப்பட்டனர். ஆனால் தோழர் சுகேசனனை விசாரணையின்றி தொடர்ந்தும் தடுத்து வைத்து வருகின்றது இன்றைய மகிந்த சிந்தனை அரசாங்கம். தற்போது தோழர் சுகேசனன் சுகவீனமடைந்த நிலையில் சிறையில் சிகிச்சைப் பெற்று வருகின்றார். மட்டுப்படுத்தப்பட்ட சிகிச்சையே அவருக்கு வழங்கப்படுகின்றது. இந்நிலையில் அவரை விடுதலை செய்யுமாறு மக்கள் சார்பாக வேண்டுகின்றோம். இதைப்போன்று ஏனைய அரசியல் கைதிகளும் சிறையில் நோயுற்றவர்களாகவும் மன அழுத்தங்களுடனும் வாழ்ந்து வருகினறனர். இவ்வாறு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 883 பேர் இருந்து வருகின்றனர். இவர்களில 53 பெண்களும் உள்ளனர். அவர்களில் தாய்மையடைந்த நிலையில் கைதாகியவர்கள் சிறைக்குள்ளேயே குழந்தைகளைப் பிரசவித்துள்ளனர். அக்குழந்தைகளுடனேயே சிறையிலிருந்தும் வருகின்றனர். இச்சிறைக்கொடுமை தொடர்கின்றது. புலித் தளபதிகளாக தலைவர்களாக இருந்த சிலர் இன்று அரசாங்கத்தில் அமைச்சர், முதலமைச்சர் மற்றும் சுகபோக வாழ்வு வாழும் வசதி பெற்றிருக்கிறார்கள். ஆனால் புலிகளுக்கு உதவிய குற்றச்சாட்டில் அப்பாவிகள் பலர் விசாரனையின்றி சிறையிலிருந்து வருகின்றனர். அந்த வரையறைக்குள் அடங்காத தோழர் சுகேசனன் கூட விசாரணையின்றி தடுத்து வைத்திருக்கின்றது அரசாங்கம். ஜனநாயகம் மனித உரிமைகள் என்பவற்றைத் தாம் பாதுகாத்து வருவதாக பறைசாற்றும் மகிந்த சிந்தனை அரசாங்கம் விசாரணையின்றி சிறைகளில் வைத்திருப்போரை ஏன் விடுவிக்க முடியாது என்ற கேள்வியை மக்கள் எழுப்புகின்றார்கள்.

**மக்கள் விரோத**

**1ம் பக்க தொடர்ச்சி**

சுமையைத் தாங்க முடியாது சம்பள உயர்வுக் கோரிக் கைகளை முன்வைத்து வீதி ஆர்ப்பாட்டங்களை நடாத்தி வந்தனர். பெரும்பாலும் வரவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் குறைந்த பட்ச சம்பள உயர்வாவது கிடைக்கும் என்றே நம்பப்பட்டது. அந்த நம்பிக்கை கவிழ்ந்து விட்டது. வரவு செலவு திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு மட்டும் பத்து வீத சம்பள அதிகரிப்பு என்று சனாதிபதி உரை கூறியது. பின்பு அதற்கான விளக்கம் வேடிக்கையாகவே அமைந்தது. அது அடிப்படை சம்பளத்தில் அல்ல என்றும் வெறுமனே வாழ்க்கைப் படியாகவே (அலவன்ஸ்) சேர்த்துக் கொள்ளப்படும் என்பதுடன் அது கூட இரண்டாகப் பிரித்து ஐந்து ஐந்து வீதமாக வருட ஆரம்பத்திலும் நடுப்பகுதியிலும் வழங்கப்படும் எனக் கூறியது கேலிக்குரியதொன்றாகவே காணப்பட்டது.

இந்த அற்ப "சம்பள உயரவு" கூட தனியார்த்துறை ஊழியர்களுக்குக் கிடையாது. இலங்கையில் தனியார் துறை ஊழியர்கள், தொழிலாளர்களின் எண்ணிக்கை அறுபத்தைந்து இலட்சம் பேராகும். இவர்களிள் ஆறுஇலட்சம் பெருந்தோட்ட தொழிளாலர்களும் அடங்குகின்றனர். ஆனால் அவர்கள் ஏற்கனவே கூட்டு ஒப்பந்தம் என்பதன் கீழ் இரண்டு வருடங்களிற்கு ஒரு முறை தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருகின்றனர். அவர்களது சம்பள உயர்வு தோட்ட முதலாளிகளினதும் பெருந் தொழிற்சங்க பெருச்சாளிகளினதும் கைகளிளேயே இருந்து வருகின்றது.

இவ்வரவு செலவுத் திட்டத்தில் மூன்று வீத நாணய மதிப்பிறக்கம் செய்யப்படுள்ளது. அதன் மூலம் மேலும் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படும் நிலையே உருவாகியுள்ளது. வாழ்க்கைச் செலவு இப்போது இருப்பதனை விடப் பலமடங்கு உயர்ந்து செல்லும். கல்வி, சுகாதாரம் என்பன இலவசம் என்று பெயரளவில் இருந்து வருகின்றது. ஆனால் அவற்றிற்கு மக்கள் தமது குறைந்த வருமானத்தில் இருந்தே செலவு செய்து வருகின்றார்கள். தமது வாயையும் வயிற்றையும் கட்டிக்கொண்டு கல்வி, சுகாதாரத்திற்கான செலவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவ்விரு துறைகளுக்கும் மிக குறைந்த தொகைகளே ஒதுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இவ்விரு துறைகளும் மெல்ல மெல்ல சாகடிக்கப்பட்டு தனியார்துறை வளர்ச்சிக்கு வழிவகுக்கப்பட்டு வருகின்றது. மனித நேய அடிப்படையிலும் கௌதம புத்தர் போதித்த நீதி நியாயப் போதனைகளின் படியும் அதிக தொகை ஒதுக்கியிருக்க வேண்டியது யுத்தத்தால் சகலவற்றையும் இழந்து நிர்க்கதியாய் நிற்கும் வடக்கு கிழக்கின் இடம்பெயர்ந்து அவல வாழ்வு வாழ்ந்து வரும் மக்களது மீள்குடியேற்றத்திற்கும், மீள் குடியமர்ந்த மக்களது புனரமைப்பு புனர்வாழ்வுக்குமாகும். ஆனால் அதற்கு ஒதுக்கிய தொகை மிகக் குறைந்ததேயாகும்.

அதேவேளை ஆயுதப்படைகளுக்கு பாதுகாப்பு என்ற பெயரில் இருபத்துமூவாயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் என்பத்தெட்டு வீதமானது ஆயுதப்படைகளின் சம்பளம், உணவு, சீருடை என்பவற்றிற்கு செலவாகின்றது. அத்துடன் முப்படை முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் என்பவற்றின் விஸ்தரிப்பிற்கும் பலப்படுத்தல்களுக்கும் பலகோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. பொலிஸ் குடும்பங்களில் மூன்றாவது குழந்தை பிறந்தால் அதற்கு அன்பளிப்பாக ரூபா ஒரு இலட்சம் வழங்கப்படுவதற்கும் வரவு செலவு திட்டம் முன்வந்துள்ளது. தமக்கு சம்பளம் போதாதென்றே பொலிஸார் கூறிவருகின்றனர். அதன் காரணமாகவே இலங்கைப் பொலிஸ் திணைக்களம் இலஞ்ச ஊழலில் முன்னிற்கின்றது என்ற குற்றச்சாட்டு இருந்து வருகின்றது. எனவே பொலிஸ் உட்பட ஆயதப்படைகளை ஏதாவது விதத்தில் திருப்தி படுத்தி வைத்திருக்க வேண்டியது மகிந்த சிந்தனை அரசாங்கத்திற்கு யாவற்றையும் விட அவசியமாகின்றது. பேரினவாத தரகு முதலாளித்துவ ஆட்சி அதிகார இருப்பிற்கும், குடும்ப ஆட்சி நீடிப்பிற்கும் ஆயுதப்படைகளின் மீதே மகிந்த சிந்தனை அரசாங்கம் நம்பிக்கை வைத்து நிற்கின்றது. மக்களைப் பல நிலை ஏமாற்றுக்கள் மூலம் வாக்குப் போடும் யந்திரங்களாக மாற்றி தமக்கு மக்களின் ஆதரவு எனக் கூறிக் கொண்டாலும் ஆயுதப்படைகளின் பாதுகாப்பிலேயே ஆட்சி தொடர முடிகின்றது. அந்த நம்பிக்கையிலேயே ஜனநாயக மறுப்பும் நிறைவேற்று அதிகார சர்வாதிகாரமும் முன்னெடுக்கப்படுகின்றது. இது அப்பட்டமான ஃபாசிசத்தை நோக்கிப் பயணிப்பதாகும்.

ஜனாதிபதியும் அவரது தலைமையிலான அரசாங்கமும் தம்மை அமெரிக்க மேற்குலக எதிர்ப்பாளர்கள் போன்று காட்டிக் கொள்ள வேடமிட்டு நிற்கிறார்கள். ஆனால் சர்வதேச நாணய நிதியம் ஏற்கனவே வழங்கிய பாரிய கடன் தொகைக்கும் இப்போது வழங்கவுள்ள கடனுக்குமாக விதிக்கப்பட்ட நிபந்தனைகள், ஆலோசனைகள், வழிகாட்டல்களுக்கு அமையவே இவ் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செயலாளர், நிதியமைச்சின் செயலாளர், பிரதான அமைச்சர்கள், மத்திய வங்கி ஆளுனர் மற்றும் கோடீஸ்வர வர்த்தகர்கள் போன்றோரின் தங்க, வெள்ளி, பித்தளை, இரும்பு மூளைகளின் பிறப்பாகவே வரவு செலவுத் திட்டத்தின் உள்ளடக்கத்தை காண முடியும். இந்த மூளைகளுக்குப் பின்னால் சர்வதேச நாணய நிதியத்தின் உலக மேலாதிக்க மூளைகள் தமது நவகொலனித்துவ மறுகொலனியாக்க நோகக்கங்களை நிறைவேற்றியுள்ளனர். இத்தகைய மக்கள் விரோத, வெட்கம் கெட்ட ஒரு வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக உயர்த்தப்பட்ட கரங்களைக் கொண்டவர்கள் அனைவருமே நாட்டிற்கும், அனைத்து உழைக்கும் மக்களுக்கும் விரோதிகளாகவும், துரோகம் செய்தவர்களாகவுமே இருக்க முடியும்.

# நாலு நடக்கும் உலகிலே

(ந ற் கு ண ன்)

## பழிப்பும் பாராட்டும்

எது மெச்சுதல் எது கண்டனம் என்று நம்மிற் சிலருக்கு விளங்குவதில்லை. வேறு சிலர் விளங்கினாலும் விளங்காத மாதிரித் தாங்கள் விரும்பின விதமாக விளங்கப்படுத்திவிடுவார்கள். அண்மையில் எரிக் சொல்ஹைம் பிரபாகரனைப் பற்றி அன்றறன் பாலசிங்கம் சொன்ன சில விடயங்களைக் குறிப்பிட்டிருந்தார். அவை பிரபாகரன் மீதான காட்டமான விமர்சனங்கள் என்பது யாருக்கும் விளங்காமிலிருக்க இயலாது.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு காலம் சீனாவில் ஆதிக்கங் கொண்டிருந்த "போர்ப் பிரகபுக்ளுடன்" பாலசிங்கம் பிரபாகரனை ஒப்பிட்டிருந்தார். அதன் பொருள் பிரபாகரன் ஆயுதங்கள் மூலம் ஆதிக்கத் தைப் பேணுவதைவிட வேறு எவ்விதமான நோக்கமும் அற்ற ஒருவர் என்பதாகும். பிரபாகரனுக்கு சர்வதேச அரசியல் விடயங்கள் பற்றிய தெளிவு இல்லை என்ற கருத்தும் சொல்ஹைமிடம் இருந்தது. பாலசிங்கம் சொன்னதிலும் முக்கியமான உண்மைகள் சில பொதிந்திருந்தன.

பிரபாகரனையும் கைவிட இயலாமல் பாலசிங்கத்தையும் நிராகரிக்க இயலாத சங்கடமே மேற்கூறிய செய்தியை பாலசிங்கம் பிரபாகரனை மெச்சிப் பேசுவதுபோல வழங்குமாறு நமது தமிழ் ஊடகவியலாளர்கள் சிலரைத் தூண்டி இருக்கலாம்.

## பாராளுமன்றத்தின் கௌரவம்

பாராளுமன்ற அவையில் யூ.என்.பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறை பற்றிய பரவலான கண்டனத்தை கேட்கிறோம். ஒரு தனி மனிதன் மீதோ ஒரு குறிப்பிட்ட கட்சியினர் மீதோ அரசாங்கப் பெரும்பான்மை அத்தகைய வன்முறையை பிரயோகிப்பதும் அது உடனடியே கட்டுப்படுத்தப்படாததும் வன்முறையில் ஈடுபட்டோர் உடனடியாகவே அவையின்று வெளியேற்றப்படாததும் எதிர்க் கட்சி மீதும் கருத்துச் சுதந்திரத்தின் மீதும் தொடுக்கப்பட்ட கேவலமான ஒரு தாக்குதலாகும். அதைக் கண்டித்துப் பேசப் பாராளுமன்ற இடதுசாரிகள் தவறிவிட்டனர்.

அதை எதிர்த்து யூ.என்.பி. உறுப்பினர்கள் வெளியேறிய போது தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் வெளியேறியிருந்தால், அது அவர்களுடைய ஜனநாயக நம்பகத்தையேனும் உறுதி செய்திருக்கும். அப்படி எதுவும் நடக்கவில்லை. தமிழ்த் தேசியவாதிகள் பாராளுமன்றத்திற் பன்முறை பாராளுமன்றத்தில் கேவலப்படுத்தப்பட்டுள்ளனர். அரசாங்கத் தரப்பின் அடாவடித்தனம் யார் மீது பிரயோகிக்கப்பட்டாலும் அது ஜனநாயகத்திற்கு அவமரியாதையே. எனவே இவ்வாறான பிரச்சினைகளைக் கட்சி அடிப்படையில் பாராமல் நியாயம்-அநியாயம் என்ற அடிப்படையில் பார்ப்பதுதான் சரியானது. கூட்டமைப்பிற்கும் பாராளுமன்ற இடதுசாரிகளுக்கும் இதே விதமான "மரியாதை" என்றாவது காட்டப்படும் என்பதை அவர்கள் மறக்கக்கூடாது.

## அழைப்பிதழ் எங்கே?

கூட்டமைப்பினரை அமெரிக்க அரச திணைக்களம் அமெரிக்காவுக்கு அழைத்ததாக நமக்குச் சொல்லப்பட்டது. யார் யாரையோவெல்லாம் சந்திக்கப் போகிறார்கள் என்றெல்லாம் நமக்கு சொல்லப்பட்டது. ஆனாலும் யாருடைய பேரில் என்ன நோக்கத்திற்காக யாரைச் சந்திக்க அழைக்கப்பட்டனர் என்று தமிழ் மக்களுக்கு இதுவரை சொல்லப்படவில்லை. தயவுசெய்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களுக்கு அனுப்பட்ட அழைப்பின் பிரதியை மக்களின் பார்வைக்குக் கிட்டுமாறு அதை ஏதாவதொரு நாளேட்டில் குறைந்தபட்சம் அவர்களது யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குச் சொந்தமான நாளேட்டிலாவது பிரசுரித்துத் தமிழ் மக்களை மகிழ்விப்பார்களா?

## ஊடக அடாவடித்தனம்

யூ.என்.பியினுயுள் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதாகத் தனது உள்ளூர்ச் செய்தி நேரத்தில் காற்பங்கை நாள்தோறும் மிகவும் பக்கச்சார்பான முறையில் செலவிட்டு வருகின்ற ஒரு தொலைக்காட்சி ஊடகப் பேரரசரின் அதிருப்திக்கு காரணம், ஜனநாயகம் பற்றிய அக்கறையா? அப்படியே என்றால் எல்லாவற்றிலும் பெரிய ஜனநாயக மீறல்களின் இல்லமான ஆளுங் கட்சியில் முதலிற் கை வைக்கலாமே! ஏன் தயங்குகிறார்கள்? சக்திமிக்க ஒரு ஊடகம் தனது சக்தியை இவ்வாறு துஷ்பிரயோகம் செய்வதையிட்டு யாரும் எதையும் செய்ய இயலவில்லை. ஆனால் வலிமை குறைந்த ஊடகங்கள் தமது குற்றங்களுக்காகச் சட்டப்படியும் சட்டவிரோதமாகவும் தொடர்ந்தும் தண்டிக்கப்படுகின்றன.

## கற்ற பாடங்களும் கல்லாத பாடங்களும்

கற்ற பாடங்கட்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அது முழுக் கண்டுபிடிப்புக்களையும் கொண்டதாக இல்லை என்பது போக, அறியப்படுத்தப்பட்ட அதன் நோக்கங்கள் பற்றி முதலிலிருந்தே குற்றச்சாட்டுக்கள் இருந்து வந்துள்ளன. அதன் போதைமைகளைக் கருதிப் பலரும் அதன் முன்னால் சாட்சியமளிப்பதற்கு மறுத்துள்ளனர். அவசியமான எதையெல்லாமோ பேச இயலாத நிலையில் ஆணைக்குழுவினர் தமது அறிக்கையின் பரிந்துரைகளை நிறைவேற்றினாற் போதும். சர்வதேச விசாரணை தேவையில்லை என்று சொல்லத் தவறவில்லை. சர்வதேச விசாரணை தேவையா என்று ஆராய்வதும் ஆணைக்குழுவினர் பொறுப்புக்களில் ஒன்றா?

ஆணைக்குழுவினர் கல்லாத பாடங்களும் கற்க விரும்பாத பாடங்களும் பலவுள்ளன. அவற்றை அரசாங்கமும் அரசியற் கட்சிகளும் கல்லாத வரை, நாட்டின் இன உறவுகள் மேலும் சீரழிந்துகொண்டு போவது தவிர்க்க இயலாதது.

# மர்ம மனிதன் - கிறீஸ் பூதம் என்பது இப்போது கொள்ளையர்களாக மாறியுள்ளது

வடக்கு கிழக்கில் அண்மைய வாரங்களாகக் கொள்ளைச் சம்பவங்கள் தொடராக அதிகரித்து வருவதைக் காணமுடிகின்றது. யுத்தம் முடிந்து விட்டது. இனிமேலாவது பட்ட அவலங்கள், இழப்புக்கள் துன்பங்களின் மத்தியில் ஓரளவாவது நிம்மதி கிடைக்கும் என்றே மக்கள் நம்பினர். ஆனால் அது வெறும் எதிர்ப்பார்ப்பாகிக் கொண்டது. கொலைகள், கொள்ளைகள், ஆட்கடத்தல்கள் எனச் சென்று "மர்ம மனிதன்-கிறீஸ் பூதம்" என்ற வடிவங்களையும் பெற்றுக் கொண்டது. மக்களது கடுமையான எதிர்ப்பு, தற்பாதுகாப்பு துணிவு போன்றவற்றால் மர்ம மனிதனும் கிறீஸ் பூதமும் பின்வாங்கிக் கொண்டன. அதனால் ஓரளவு ஆறுதல் எனக் கூறிக் கொண்ட சூழலில் இப்போது மீண்டும் கொள்ளையர்கள் அரங்கில் கைவரிசைக் காட்டத் தொடங்கியுள்ளனர். இவர்கள் ஆகாயத்தில் இருந்து வரவில்லை என்பது மட்டும் உறுதியானது.

வடக்கில் இருந்து இராணுவம் வெளியேறிச் சென்றுவிடவில்லை. முகாம்கள், காவலரன்கள், வீதிச்சோதனை நிலையங்கள் கிட்டக்கிட்டவே இருந்து வருகின்றன. பொலிஸ் நிலையங்கள் அதிக பொலிஸாருடன் செயற்பட்டும் வருகின்றன. இவற்றுடன் இராணுவம், பொலிஸ் ரோந்துக்கள் இடம்பெறுகின்றன. இவற்றின் மத்தியில் கொள்ளையர்கள் சுதந்திரமாக நடமாடி கொள்ளைகளில் துணிவாக ஈடுபடுகின்றனர் என்றால் அதன் அர்த்தம் யாது? அவர்களுக்குப் பின்புலமாகவும் வழிகாட்டிகளாகவும் உள்ளோர் யார்? பலவகைப் புலனாய்வு நிபுணர்களும் உண்மைகளைக் காண மறுத்தாலும் மக்களின் புலனாய்வில் இருந்து தப்பவே முடியாது. அது வெறும் ஊகங்கள் அல்ல, உண்மைகளாகும்.

யார் யார் முன்னையவற்றிற்கு காரணமாக இருந்தார்களோ அவர்களும் அவர்களின் கையாட்களும் ஏவலர்களும் சேர்ந்தே அப்பட்டமான கொள்ளைகளில் ஈடுபடுகின்றனர் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. தொடரும் இக்கொள்ளைகளால் மக்கள் தாக்கப்பட்டு படுகாயங்களுக்கு உள்ளாகி இறப்பையும் எதிர்நோக்குகின்றனர். இதனால் மீண்டும் மக்கள் மத்தியில் அச்சமும் பயப்பீதியும் ஏற்பட்டுள்ளது. எனவே இச்சூழலில் மக்கள் முன்பு துணிந்து இறங்கி தம்மை தற்காத்துக் கொண்டது போன்று மீண்டும் வீதிக்கு இறங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. மக்கள் ஐக்கியப்பட்டு வீதிக்கு இறங்கினால் மர்ம மனிதன்-கிறீஸ் பூதத்தை மடக்கிப் பின்தள்ளியது போன்று கொள்ளையர்களையும் மடக்கி அடக்க முடியும்.

## பாலியல் துஷ்பிரயோகங்களின் அதிகரிப்பு

இலங்கையின் கலாசார நிலைமைகள் காரணரமாக இடம் பெறும் பாலியல் துஷ்பிரயோகங்களில் பெரும்பாலானவை உரிய நிறுவனங்களிடம் முறைப்பாடின்றி மூடி மறைக்கப்படுவதை யாரும் மறுக்க முடியாது. இவ் வருடத்தின் முதல் 9 மாதங்களில் 258 பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பான முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் பதிவாகியுள்ளன. இவற்றில் 21 முறைப்பாடுகள், சிறுமியரை அல்லது பெண்களைப் பாலியல் தொழிலுக்குப் பலவந்தப்படுத்தல் பற்றிய முறைப்பாடுகளாகும். அன்மையில் பாராளுமன்றத்திற்குச் சமர்பிக்கப்பட்ட அறிக்கையில் இவ் விவரங்கள் குறிப்பிடப்ப ட்டிருந்தன. அவ் அறிக்கையின்படி, பாலியல் தொழிலுக்குப் பலவந்தப்படுத்தல்கள் தொடர்பில், கடந்த வருடம் 47 முறைப்பாடுகளும், 2009ல் 31ம். 2008ல் 33ம், 2007ல் 30ம், 2006ல் 35ம், 2005ல் 15ம், 2004ல் 16ம் என முறையே பதிவாகியுள்ளன.

2010ல் சிறுவர் துஷ்பிரயோகமும் முறைகேடாக நடத்துதலும் தொடர்பாக 334 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. 2009ல் 349 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. 2004ம், 2005ம் ஆண்டுகளில் சிறுவர் துஷ்பிரயோகமும் முறைகேடாக நடத்துதலும் தொடர்பாக முறையே 471, 451 முறைப்பாடுகள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய சமூக பண்பாட்டுச் சீரழிவுகளுக்கு யார் காரணம் தாராளமயம் தனியார்மயம் உலகமயமாதல் என்பன வற்றின் விளைவுகளேயாகும்.

**மலையகத் தலைமைகள்**

1ம் பக்க தொடர்ச்சி

செலவுகள் முதல் போசாக்கின்மை வரை வெளிக்கொண்டு வந்து பேச வேண்டியவை நிறையவே உள்ளன. அவற்றுக்கான புள்ளி விபரங்கள் தாராளமாகவே இருந்தும் வருகின்றன. அவற்றையெல்லாம் திரட்டி மலையக மக்களின் மலை போல் குவிந்துள்ள பிரச்சினைகளின் பூதாகரத் தன்மையை எந்தவொரு மலையகப் பாராளுமன்றப் பிரதிநிதியும் பேசவில்லை.

அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று, இப்பிரதிநிதிகள் என்போருக்கு மலையக மக்களின் மீதும் தொழிலாளர்களின் வாழ்க்கை மீதும் நடைமுறை ரீதியாகவோ அறிவுபூர்வமாகவோ அக்கறை ஏதும் கிடையாது. தேர்தல்கள் வரும் போது அம்மக்களை எவ்வாறு ஏமாற்றி வாக்குகள் பறித்து பதவிகள் பெறலாம் என்பதில் காட்டப்படும் அக்கறைகளுக்கு அப்பால் வேறு ஏதும் கிடையாது. இந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மலையக மக்களின் இன்றைய சனத்தொகை எவ்வளவு என்பதோ தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதோ கூட தெரியுமோ தெரியாது.

இரண்டாவது, எல்லோரும் அரசாங்கத் தரப்பில் அமைச்சர், பிரதியமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி ஆலோசகர்கள் என பல பதவிகள் பெற்று நிற்கின்றனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மட்டுமின்றி ஐக்கிய தேசிய கட்சியில் வென்றவர்கள் கூட அரசாங்கத் தரப்பிற்கு மாறிக் கொண்டனர். பதவியின் பாதுகாப்புக்கும் பணம் திரட்டலுக்கும் சுகபோக வாழ்விற்கும் வசதியாக பலமான காற்று எந்தப் பக்கமோ அந்த பக்கத்தில் இருப்பதில் மலையக தலைமைகள் என்போர் எல்லோரையும் விட வல்லவர்கள் என்பது மக்கள் அறிந்த விடயமாகும்.

ஆதலால் அவர்கள் அரசாங்கத்தை விமர்சிக்கவோ, கண்டிக்கவோ, எதிர்க்கவோ மாட்டார்கள். அண்மைய வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சேமலாப நிதி (EPF) ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) ஆகியவற்றிற்கு செலுத்த வேண்டிய பலகோடி ரூபாய்களை கம்பனி நிர்வாகங்கள் செலுத்தாது இருந்து வரும் மோசடியை ஒரு சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர் பாராளுமன்றத்தில் அம்பலப்படுத்தினார். தனது ஓய்வு காலத்தில் பெறவேண்டிய சேமலாப நிதியைப் பெற்றுக்கொள்ளச் சென்றபோது அங்கே பணம் அவரது பெயரில் இல்லை என்பதை அறிந்த ஒரு தோட்டத் தொழிலாளி அதிர்ச்சியில் இறந்த சம்பவத்தையும் அச் சிங்கள உறுப்பினர் சுட்டிக்காட்டினார். ஆனால் மலையகப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இது போன்ற எதுவுமே தெரியாது. ஏனெனில் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் பணிவான சேவகர்களாக சேவை செய்வதிலேயே மிகக் கவனமாக இருந்து வருவதுதான். இதனையே அவர்களது பாராளுமன்ற நடவடிக்கைகள் காட்டுகின்றன. இதன் மூலம் பாராளுமன்றம் என்பது யாருக்கானது என்பதை மக்கள் குறிப்பாக மலையக மக்கள் புரிந்துக் கொள்ள இதுவொரு உரிய சந்தர்ப்பமாகும்.

**காணாமல் போனோருக்காக யாழில்**

1ம் பக்க தொடர்ச்சி

போன்ற முழக்கங்களை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் முழக்கமிட்டனர்.

மேற்படி ஆர்ப்பாட்டத்தில் புதிய- ஜனநாயக மாக்ஸிச லெனினிசக் -கட்சியினர் பெருந்தொகையில் வடப்பிராந்திய செயலாளர் கா.செல்வம் கதிர்காமநாதன் மற்றும் வடபிராந்தியக் குழு உறுப்பினர் தோழியர் சந்திரா நவரட்ணம் ஆகியோர் தலைமையில் பங்கு கொண்டனர். ஒரு மணி நேரத்திற்கு மேல் இடம் பெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ஏற்பாட்டாளர் தலைமையில் கலந்து கொண்ட கட்சிகள், அமைப்புக்கள் சார்பில் கருத்துரைகளும் இடம்றெறன. பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா. முன்னால் பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்.கே.சிவாஜிலிங்கம், எஸ்.கஜேந்திரன் புதிய- ஜனநாயக மாக்சிச வெனினிசக் கட்சியின் வடபிராந்தியச் செயலாளர் கா.செல்வம் கதிர்காமநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

பொலிஸ் கெடுபிடி அன்றைய தினம் முழுவதம் யாழ் மாவட்டம் முழுவதும் இருந்து வந்தது. புலனாய்வுத்துறையினர் பல்வேறு இடங்களிலும் நின்று தகவல்களை எடுத்ததுடன் கண்காணிப்புக்களிலும் ஈடுப்பட்டனர். இத்தனைக்கும் மத்தியில் காணாமல் போனோரின் உறவுகள் உறுதியுடனும் துணிவுடனும் இவ்வார்ப்பாட்டத்தில் கலந்துக் கொண்டமை வெகுஜனப் போராட்டப் பாதைக்கு நம்பிக்கையும் வலுவும் சேர்ப்பதாக அமைந்திருந்தது.

# வடபுலத்தில் காணாமல் போன இருவரும் உடன் விடுவிக்கப்பட வேண்டும்

வடபுலம் வலி கிழக்கின் ஆவரங்கால் என்னுமிடத்தில் மக்கள் போராட்ட இயக்கத்தைச் சேர்ந்த லலித் குமார வீரராஜ் என்பவரும் அவரது நண்பரான குகன் என்பவரும் காணாமல் போயுள்ளனர். 09.12.2011 அன்று பகல் இருவரும் அவ்விடத்திலுள்ள குகன் வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் புறப்பட்டதன் பின்னர் இன்று வரை கண்டு பிடிக்க முடியவில்லை. இவர்கள் திட்டமிட்டு கடத்தப்பட்டிருக்கலாம் என்றே பரவலாக நம்பப்படுகிறது. டிசம்பர் 10ம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் இதுவரை காணாமல் போனோரைக் கண்டுபிடித்து தருமாறு கோரி யாழ் நகரில் பெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அத்தினத்திற்கு முதல் நாளே இவ்விருவரும் கடத்தப்பட்டிருக்கிறார்கள். நாடு முழுவதும் மனித உரிமையினை மீறும் விதத்தில் கடத்தல்கள் நடைபெற்று வருவது போன்றே இராணுவ நிர்வாகம் அரசோச்சும் வடபுலத்தில் இக் கடத்தல் இடம்பெற்றிருக்கிறது. இது போன்று காணமல் போகும் நபர்களின் எண்ணிக்கை ஏற்கனவே வடபுலத்தில் அதிகரித்தே வந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். கடத்தப்பட்டோரை விடுவிக்க வேண்டும் என்பதையும் புதிய பூமி வற்புறுத்துகின்றது.

## நீங்கள் எங்களுடன் இல்லை என்றால்......

"நீங்கள் எங்களுடன் இல்லை என்றால் எங்களது எதிரிகளுடன் இருக்கின்றீர்கள்." இவ் வாசகத்தை முன்வைத்தவர் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் ஆவார். ஈராக் மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தின் போது கூறப்பட்ட மேற்படி வாசகத்தின் பின்பு உலகில் ஆளும் வர்க்கப் பிற்போக்குத் தலைவர்களால் அது ஒரு மந்திரம் போல் உச்சரிக்கப்பட்டு வருகின்றது.

- ☐ நீங்கள் எங்களுடன் இல்லையென்றால் எங்களின் எதிரி சதாம் ஹூசைனுடன் இருக்கின்றீர்கள் -- **ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்**
- ☐ நீங்கள் எங்களுடன் இல்லையென்றால் மாவோயிஸ்ட்டுகளுடன் இருக்கின்றீர்கள் -- **மன்மோகன் சிங், பா. சிதம்பரம்**
- ☐ நீங்கள் எங்களுடன் இல்லையென்றால் புலிகளுடன் இருக்கின்றீர்கள் -- **மஹிந்த ராஜபக்ச**
- ☐ நீங்கள் எங்களுடன் இல்லையென்றால் அரசுடனும் மாற்று இயக்கங்களுடனும் இருக்கின்றீர்கள் -- **புலிகள் இயக்கம்**
- ☐ நீங்கள் எங்களுடன் இல்லையென்றால் கடாபியுடன் நிற்கின்றீர்கள் -- **நேட்டோத் தலைவர்கள்**
- ☐ நீங்கள் எங்கள் பக்கம் இல்லையென்றால் பலஸ்தீனியர்களின் பக்கம் இருக்கின்றீர்கள் -- **இஸ்ரேலியத் தலைவர்கள்**

இவ்வாறு நீண்டு செல்கிறது மேற்படி மந்திரச் சொல்.

# "ஊழலை ஒழிக்கும்" பாராளுமன்றத்திலேயே ஊழல்

ஜனநாயக நாடுகளில் பாராளுமன்றத்தின் மூலம் ஜனநாயகமும் நல்லாட்சியும் சாத்தியம் என மீண்டும் மீண்டும் நமக்குச் சொல்லப்பட்டு வரும் நிலையில் இலங்கைப் பாராளுமன்ற நிர்வாகத்தில் பல நிதி மோசடிகள் இடம்பெற்றிருப்பதாகப் பல தரப்பினரும் முறைப்பட்டுள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு பாராளுமன்றப் பொதுக் கணக்குக் குழு 2005ம் ஆண்டிற்குப் பின்னரான பாராளுமன்ற வருடாந்தக் கணக்கறிக்கைகளைச் சமர்பிக்குமாறு பாராளுமன்றச் செயலாளருக்கு அறிவித்துள்ளது.

பொது நிறுவனங்களின் கணக்குக்களைப் பரிசீலிக்கும் அமைப்பாக விளங்கும் பொதுக் கணக்குக் குழுவின் கண்காணிப்பிற்கு உட்படாத வகையிலேயே பாராளுமன்ற நிர்வாக நடைமுறை இதுவரை இடம்பெற்றுள்ளது. பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அமைச்சர் சரத் அமுனுகம, மோசடிகள் இடம்பெற்றிருந்தால், குழுவின் விசாரணையின் பின்னர் அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார். ஏற்கனவே COPE அறிக்கையில் பல நூறு கோடி ரூபாய்கள் மோசடிகள் தொடர்பாக ஆதாரங்கள் இருந்தபோதும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எவ்வித பிரச்சினையும் இன்றித் தொடர்ந்தும் நல்லாட்சி பற்றிய தமது கருத்துக்களோடு வலம் வந்து கொண்டு பெரும் பதவிகளை பெற்றுள்ளப் நிலையில் இந்தப் பாராளுமன்றக் குழுக்களும் அவற்றின் அறிக்கைகளும் பற்றி மக்கள் நம்பிக்கையற்றவர்களாகவே இருக்கின்றனர். இதனாற் போலும் பாராளுமன்றம் கள்வர் குகை எனக் கூறப்படுகிறது.

# மலையகத்தின் சமூகக் கட்டமைப்பும் ஏற்பட வேண்டிய மாற்றங்களும்:

## நாடு வீடு காணி ?

**சு. விஜயகுமார்**

நாடற்றவர்கள் என்றிருந்த மலையக மக்கள் இன்று குடியுரிமையை பெற்றுவிட்டோம் என்ற திருப்தியோடு நின்றுவிட முடியுமா? திருப்திப்படும்படி மலையகத்தின் பிற்போக்கு அரசியல் தலைமைகள் தமது மக்களுக்கு எதிரான நிலைப்பாடுகள் மூலம் வெளிப்படுத்தி வருகின்ற போதும், மக்களின் நியாயமான உரிமைக் கோரிக்கை ஓரிடத்தில் நிற்பதில்லை. அது இயங்குநிலையைக் கொண்டது. அது உரிமையை நோக்கிய பயணத்தை தொடர்ந்து கொண்டே இருக்கும். அப் பயணத்தில் மக்களே முதன்மைப் பாத்திரத்தை எடுப்பர். நாடற்றவர்களாக மலையக மக்கள் வாழ்ந்த காலத்தின் தொடர்ச்சி அவர்கள் இன்றும் வீடற்றவர்களாகவும் காணியற்றவர்களாகவும் வாழ்வதனை உறுதி செய்துள்ளது. மலையக மக்களில் பெரும்பாலானவர்கள் தோட்டக் குடியிருப்புகளிலேயே இன்றும் வாழ்ந்துவருகின்றனர். சொந்த வீடு இன்மையும் காணி இன்மையும் ஒரு தேசிய இனமாக வாழ்ந்து வரும் மலையக மக்களின் இருப்பை மிரட்டுகின்றன. அவர்கள் வீட்டுக்கும் காணிக்குமான உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதனூடேயே ஒரு தேசிய இனமாக அவர்களுடைய இருப்பு சாத்தியத் தன்மை கொண்டதாகும்.

ஒரு தேசிய இனம் என்ற ரீதியில் மலையக மக்கள் 1947ம் ஆண்டுக்கு முன்னர் நாட்டுரிமையை பெற்றிருந்த காலத்திலும் வீட்டுக்கும் காணிக்குமான உரிமைகளைப் பெற்றிருக்கவில்லை. 2003ஆம் ஆண்டு மலையக மக்கள் அனைவரையும் இலங்கை மக்கள் எனச் சட்டரீதியாக ஏற்றுக் கொண்ட பின்னரும் அந்த நிலை தொடருகிறது. பிரித்தானியர்கள் இலங்கைக்கு தமது வணிக வர்க்க சுரண்டல் நோக்கங்களுக்காக மலையக மக்களை இலங்கைக்கு அழைத்து வந்து அரசியல் உரிமைகளை (வாக்குரிமை) வழங்கிய போதும் அவர்கள் குடியிருந்த பிரதேசங்கள் பெருமளவும் பிரித்தானியப் பொருந்தோட்டக் கம்பனிகளுக்கே சொந்தமாய் இருந்தன. கொலனிய ஏகாதிபத்திய பிரித்தானிய அரசிடம் வீடு, காணி உரிமைகளை எதிர்பார்ப்பதில் நியா யம் இருக்க முடியாது. சுதந்திரத்திற்குப் பின்னரான சுதேச அரசாங்கங்கள் கொலனிய ஏகாதிபத்திய அரசையும் விஞ்சி, 1947ம் ஆண்டு மலையக மக்களின் குடியுரிமையை நீக்கி அவர்களின் அனைத்து அரசியல் சிவில் உரிமைளையும் பறித்துக் கொண்டது. அதன் பின்னர், 2003 வரை, குடியுரிமைப் பிரச்சினை மலையக மக்களின் முக்கிய கோரிக்கையாகத் தொடர்ந்தது. இப் பின்னணியில், 2003 வரை சொந்த வீடு மற்றும் காணி உரிமைகள் பற்றிய கோரிக்கைகள் பிற்போக்கு தலைமைகளினால் விலக்கி வைக்கப்பட்டிருந்தது.

2003ஆம் ஆண்டுக்கு பின்னர், இன்று வரையும், பிற்போக்கு அரசியல் தலைமைகள் இவ்விடயம் தொடர்பாக எவ்விதமான மக்கள் சார்பு நிலைப்பாடுகளையும் எடுக்கவில்லை. லயன் வீடுகளுக்கு மாற்றாக அவர்கள் முன்மொழிவது லயத்துக்கு மேல் லயத்தை வைக்கும் மாடி வீடுகள் அல்லது 7 பேர்ச் காணியுடன் கூடிய தனி வீடுகள். இதில் மாடி வீடு பற்றி மக்கள் சார்பாகப் பேச எதுமே இல்லை. ஒரு சமூகம் வாழும் குடியிருப்பு அதன் சமூக, பொருளாதார, பண்பாட்டு விடயங்களைத் தீர்மானிக்கும் அம்சமாக இருக்கும் நிலையில். மலையக மக்களை நவீன அடிமைப்படுத்தலுக்குத் தயார்படுத்தும் செயற்பாடாகவே மாடி வீடுகளைப் பார்க்க வேண்டியுள்ளது. மக்களின் கடும் எதிரப்புக்கு மத்தியில் அது இப்போது கைவிடப்பட்டுள்ளமை கருத்திற்கொள்ளப்பட வேண்டியது.

மலையக மக்களின் தேசிய தலைமைகள் என்பன சொந்த வீட்டுக்கும் காணிக்குமான உரிமைகளுக்காக ஏன் குரல் கொடுப்பதில்லை? மலையக மக்கள் இந்த நாட்டில் சொந்த வீட்டுடனுன் வாழ்வது சட்டத்திற்கு விரோதமானதா? காணி உரிமையை ஏனைய மக்களுக்கு அரசாங்கங்கள் வழங்கி வருகின்ற போது மலையக மக்களுக்கு அது தேவையற்றதா? மேலுள்ள இரண்டு கேள்வி கட்கும் மலையகத்தின் பிற்போக்குத் தலைமைகள் 'ஆம்' என்று பதில் சொன்னாற் கூட அதில் வியப்பதற்கு ஒன்றும் இல்லை. சில வேளை 'அந்த உரிமைகள் மலையக மக்களுக்கு இப்போது தேவையில்லை. அவை அவர்களுக்கு எப்போது தேவை என்பதை நாம் அறிவோம். அப்போது அதனைச் செய்வோம். இப்போதைக்குத் தோட்டக் கம்பனியினால் வழங்கப்பட்டுள்ள லயன் வீட்டில் அல்லது தோட்ட நிலங்களில் வழங்கப்படும் தோட்டத்திற்கு சொந்தமான சிறிய (7 பேர்ச்சஸ்) காணியில் வீடுகளை கட்டி வாழ்ந்தால் என்ன குறைவு?' என்று தங்களுக்கே உரிய பாணியில் அரசியல் தலைமைகள் கேட்பார்கள். பெருந்தேசியவாத அரசாங்கங்கள் சமூக, அரசியல், பொருளாதார அடிப்படையில் மலையக மக்களின் இருப்பை எவ்வாறு சிதைப்பது என்ற நோக்குடன் செயற்பட்டு வரும் நிலையில் மலையக தலைமைகளின் கொள்கைகள் பெருந்தேசியவாத நோக்கங்களை மீள நிலை நிறுத்துவதாகவே வீடு மற்றும் காணி பற்றிய உரி மை விவகாரத்தில் உள்ளது.

மலையக மக்களின் வீடு மற்றும் காணி உரிமை தொடர்பாக, பெருந்தேசியவாதிகளின் நிலைப்பாட்டில் இருந்து சற்றும் குறையாத நிலைப்பாட்டை மலையகத்தின் பிற்போக்கு அரசியல் தொழிற்சங்க தலைமைகள் எடுப்பதற்கான காரணம் என்ன என்பது சிந்திக்க வேண்டிய விடயமாகும். மலையக மக்களைத் தங்கள் பக்கத்தில் வைத்துக் கொள்வதற்கு வாய்ப்பாக அங்கு நிலவும் குடியிருப்பு முறை சாதகமாக இருப்பதனாலும் தனி வீடு காணிகளுடனான குடியிருப்பு முறையின் தோற்றம் அவர்களின் தொழிற் சங்கச் சலுகை அரசியல் இருப்பிற்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் வாய்ப்பு இருக்கின்றமையே அவர்களின் இந்நிலைப்பாட்டிற்கான காரணமாகும்.

2002ம் ஆண்டு அமைச்சரவைத் தீர்மானத்தின்படி ஒரு தோட்டத் தொழிலாளியின் குடும்பத்திற்கு வீடு கட்டிக் கொள்வதற்கெனத் தோட்டக் காணிகளிலிருந்து 20 பேர்ச் வழங்கப்பட வேண்டும். எனினும் அத் தீர்மானம் இன்று வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இன்றைய மஹிந்த சிந்தனை அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகத் தனது கொள்கை பிரகடத்தில் கூறியிருந்தாலும் மேல் கொத்மலை திட்டத்தில் ஜப்பானிய நிதியுதவியில் கட்டப்பட்ட வீடுகளை தொலைக்காட்சியிற் காட்டி மலையக மக்களின் வீடு மற்றும் காணிப் பிரச்சினைகளைத் தீர்த்துவருவதாகப் பிரசாரம் செய்கிறது. ஆதனை ஆமோதித்துப் பக்கவாத்தியம் இசைத்து மலையகத்தின் பிற்போக்குத் தலைமைகள் அரசாங் கத்தின் மீதான தமது விசுவாசத்தை வெளிப்படுத்தி வரு கின்றன.

ஒரு சமூகத்தின் பண்பாட்டு அம்சங்களில் குடியிருப்புப் பாரிய செல்வாக்கைச் செலுத்தும். மலையக மக்கள் வாழ்ந்து வரும் வீடுகள் மனிதர் வாழக்கூடிய தரத்தைக் கொண்டிருக்கவில்லை என்பது உலகறிந்த உண்மை. மலையகத்தில் நிலவும் பண்பாட்டுச் சீரழிவுகளுக்கான காரணங்களைச் சமூக விஞ்ஞான நோக்கில் ஆராயும் எவரும் அவர்கள் வாழும் குடியிருப்புப் பெற்றிருக்கும் முக்கியத்துவத்தை சூழலை அறிவர்.

மனிதன் கௌரவமாக வாழ்வதற்கு தேவையான அடிப்படை உரிமையாக இருக்கும் வீடு மற்றும் காணிக்கான உரிமையை ஒரு தேசிய இனத்துக்கு மறுத்து வருவதற்கான காரணங்களை மலையக மக்கள் மிக ஆழமாகச் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளனர். மலையக மக்களின் சனத்தொகை அதிகரிப்பு இன்று லயன் குடியிருப்புகளிற் போதாமையை ஏற்படுத்தியுள்ளது. பெருந்தோட்டக் கம்பனிகள் மலையக மக்களுக்குப் புதிய குடியிருப்புகளை ஏற்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைக் கொண்டில்லாத நிலையிலும், அரசாங்கம் தொடர்ந்து இந்த பிரச்சினையைப் பொருந்தோட்டக் கம்பனிகளுடன் தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் இணைந்து தீர்க்க வேண்டிய ஒன்றாக வகைப்படுத்தியுள்ள நிலையிலும், மலையக மக்கள் தமது இருப்புச் சார்ந்து எதிர்காலத்தில் எதிர்நோக்கவுள்ள மிக முக்கிய பிரச் சினையாகச் சொந்த வீடும் காணியும் பற்றிய பிரச்சினை இருக்கும். இந்த நியாயமான உரிமையை வென்றெடுக் கும் வெகுஜனப் போராட்டத்தில் மலையக மக்கள் பங்கு கொள்வதே இன்றைய தேவையாக உள்ளது.

# மூன்று ஆசிரியர்கள் பொய்க் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிப்பு

2077.10.22ம் திகதி இ/காவத்தை நவோதயா த.ம. வித்தியாலயத்தில் இடம்பெற்ற அதிபர் இடமாற்றத்திற்கு எதிரான பெற்றோர்களின் போராட்டத்துடன் தொடர்புபடுத்தி பா. மகேந்திரன், ரா. நெல்சன் மோகன்ராஜ், பி. சார்ல்ஸ் மர்வின் ஆகிய ஆசிரியர்கள், மாகாணக் கல்வி அமைச்சினால் 2007.10.31ம் திகதி சேவை நீக்கப்பட்டனர். இவ்விடயத்தில் தலையிட்ட இலங்கை ஆசிரியர் சங்கம் அவர்களை மீண்டும் சேவையிற் தொடரச் சட்ட ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுத்த அதேவேளை சட்டத்தரணி இ. தம்பையா அவர்களின் வழிகாட்டலினதும், ஆலோசனையினதும் பேரில் இம் மூன்று ஆசிரியர்களும் தங்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பட்டனர்.

அம் முறைப்பாட்டை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்று விசாரித்த போது இம் மூன்று ஆசிரியர்களும் தங்களின் விசாரணையுடன் தொடர்பான கடிதங்கள் தமிழ் மொழியிலேயே அமைய வேண்டும் எனக் கூறித் தமக்கான மொழியுரிமையை வற்புறுத்தியதன் விளைவாக மாகாணக் கல்வி அமைச்சு மேற்குறித்த விசாரணை தொடர்பான கடிதத் தொடர்புகளை ஆசிரியர்களின் தாய்மொழியான தமிழிலேயே மேற்கொண்டது. இது இம் மாகாணத்தில் சேவை செய்யும் தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்கு கிடைத்த ஒரு வெற்றியாகும்.

இம் மூன்று ஆசிரியர்கள் மீதும் சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்கள் காழ்ப்புணர்வின் காரணமாக சில அதிபர்களினால் தமக்கு நெருங்கிய அதிகாரிகளை கொண்டு புனையப்பட்டது என்பதை ஆரம்பத்தில் இருந்தே பிரதேசத்தின் பெற்றோர்களும் மாணவர்களும் ஆசிரியர்களில் அனேகரும் அறிந்திருந்தனர். இறுதியில் அது வெளிப்படவும் செய்தது. குறித்த ஒரு உயர் அதிகாரி ஓய்வு பெற்றவுடன் இம் மூன்று ஆசிரியர்களையும் குறித்த குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கவும் அதன் பின்பு இவ்வாறான குற்றச்சாட்டுக்க ளுக்கு உள்ளாகாமல் தற்காத்துக் கொள்ளும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. நான்கு ஆண்டுகளாக இழுத்த டிக்கப்பட்டு வந்த விசாரணை நாடகம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. கல்விப்புலச் சூழலில் நடக்கும் முறைகேடுகள், சீர்கேடு கள், ஊழல்கள் என்பவற்றுக்கு எதிராகச் செயற்படும் ஆசிரியர்களை அரசியல், அதிகார பலம் கொண்டு முடமாக்கும் செயற்பாடுகளுக்கு எதிராக மக் கள் தட்டிக் கேட்க துணியாத வரை அவை தொடரவே செய்யும் என்பது நிச்சயம்.

இவ் விடயத்தில் உரிய நேரத்தில் தலையிட்டு செயற்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்திற்கும் சட்ட உதவிகளை வழங்கிய சட்டத்தரணி இ. தம்பையா அவர்களுக்கும் இம் மூன்று ஆசிரியர்களும் தங்களின் நன்றியினைப் புதிய பூமியூடாகத் தெரிவித்துக்கொண்டதுடன் சபரக முவ மாகாணத் தமிழ் மொழிமூலப் பாடசாலைகளின் அதி பர்களும் ஆசிரியர்களும் தங்களது தாய்மொழியான தமிழ் மொழியில் தங்களது நிர்வாக ரீதியான விடயங்களை மேற்கொள்வதற்கு முன்வர வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்.

இரத்தினபுரி நிருபர்

# இந்திய இழுவைப் படகுகளும் இலங்கைக் கடற்படையினரும்

இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்களைப் பிடித்து வதைப்பதாகவும் வலைகளை அறுப்பதாகவும் தாக்குவதாகவும் குற்றச்சாட்டுகள் உள்ளன. இலங்கைக் கடல் எல்லைக்குள் வருகிற தமிழக மீனவர்களை இலங்கைப் படையினர் பிடிப்பதும் பின்னர் விடுவிப்பதும் ஒரு விளையாட்டுப் போலத் தொடருகிறது.

இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய இழுவைப் படகுகள் வந்து மீன் பிடிப்பதைத் தடுப்பதற்குப் புதிய சட்டமோ ஏற்பாடு எதுவுமோ தேவையில்லை. அப்பாவி மீனவர்களைத் துன்புறுத்துவதாக வருகிற குற்றச்சாட்டுக்கள் கண்டிக்கத்தக்கன. அதே வேளை, இந்திய இழுவைப் படகுகளைப் பிடிப்பதும் அவை தொடர்ந்தும் வருவதைத் தடுப்பதும் இலங்கைக் கடற்படையினதும் காவல் துறையினதும் பொறுப்பாகும். இலங்கை மீனவர்களை இந்தியக் கடற்படையினர் பிடிப்பதும் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் பிடிப்பதும் பிடிக்கப்பட்டோரைப் பகடைக்காய்களாக இரண்டு அரசாங்கங்களும் பயன்படுத்துவதும் மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழியல்ல. இந்தப் பிரச்சினையை இழுத்தடிப்பது தேசிய இனப் பிரச்சினையினின்று கவனத்தைத் திருப்ப இலங்கை அரசாங்கத்துக்கு உதவுகிறது. அதே வேளை இந்திய அரசாங்கம் தன்னுடைய பொருளாதார மேலாதிக்கத்தை நிறுவும் நோக்கில் இப் பிரச்சினையைக் கண்டுங்காணாதது போல இருந்து வருகிறது.

இந்திய அரசாங்கம் தனது மீன்பிடித்துறைப் பெருமுதலாளிகளுக்கு அனுசரணையாக நடந்து கொள்ளும் அதே வேளை சாதாரண மீனவர்களின் அவலம் பற்றிக் கவனங் காட்டுவதில்லை என்பது முக்கியமான ஒரு விடயம்.

அதைவிட முக்கியமாகப் போர் முடிந்து இரண்டரை வருடங்கள் கடந்தும் வடபுலத்து மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிப்பதற்கு இலங்கைக் கடற்படையினர் தடைகளை விதித்து வருகின்றனர். என்பதும் நாம் இவ் வேளை கவனிக்க வேண்டியதாகும். நாட்டின் பொருளாதார வளத்தைப் பேணுகிற நோக்கம் இலங்கை அரசாங்கத்துக்கு உண்மையாகவே இருந்தால், இலங்கையின் வடபுலத்து மீனவர்களின் தொழிலை ஊக்குவிக்கும் முறையில் அவர்கள் நடந்து கொள்ள வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு செயற்படுவதாக இல்லை. தமிழக மீனவர்களுடன் மோதலில் ஈடுபடுவதையே அவர்கள் விரும்புகின்றனர். இதைப் பற்றி மீன்பிடித்துறை அமைச்சும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் கலந்து பேசி எதையாவது செய்ய மாட்டார்களா?

புதிய பூமி
புதிய பூமி Puthiya Poomi
சுற்று 18 நவம்பர் டிசம்பர் 2011 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 139
மேல்மாடி இல 06. 571/15 காலி வீதி, கொழும்பு 06.
இலங்கை. தொ.பே. 060 2136530. தொலை நகல்: 011- 2473757
E-mail : puthiyapoomi@gmail.com Web : www.ndpsl.org

# தொழிலாளர்களினதும் அடக்கப்படும் தேசங்களினதும் ஐக்கியத்தின் அவசியம்

நாடுகள் மீதான அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியத் தாக்குதல்களும், நேட்டோ படைகளின் ஆக்கிரமிப்புக்களும் அதிகரித்து வருகின்றன. ஒரு காலத்தில் சில முற்போக்கான அம்சங்களைக் கொண்டிருந்த சதாம் ஹுசைன், முஹம்மர் கடாபி போன்றவர்கள் களையெடுக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறாக நேரடியான பாதிப்புக்களுக்குள்ளான நாடுகளில் மட்டுமன்றி அவற்றுக்கு வெளியிலும் உலக மக்கள் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடி வருகின்றனர்.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானோ, ஈராக்கோ அல்லது லிபியாவோ சோஷலிச நாடுகளாகவோ அதன் தலைவர்கள் கம்யூனிஸ்டுகளாகவோ இருக்கவில்லை. அதனால் அவற்றின் இறைமை. சுதந்திரம், ஒருமைப்பாடு அர்த்தமற்றதாகி ஏகாதிபத்தியத்தினால் கையகப்படுத்திக் கொள்வதை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவை சாராம்சத்தில் அடக்கப்படுகின்ற நாடுகள் அல்லது தேசங்களாகும். அவற்றின் வளங்களை கொள்ளையிடும் நோக்கில் ஆக்கிரமித்து ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கான உட்கட்டமைப்புக்களை மேற்கொள்ளும் நோக்கிலேயே அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்களும் நேட்டோ படைகளின் தாக்குதல்களும் ஆக்கிரமிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

காலனித்துவ காலத்தில் போலன்றி இன்றைய நவகாலனித்துவ காலத்தில் நாடுகளின் தலைவர்கள் ஜனநாயக விரோதிகளாகவும் மனித உரிமைகளை மீறுபவர்களாகவும் இருப்பதாக, சர்வதேச ரீதியாக அத்தலைவர்களுக்கும் அந்நாட்டு அரசுகளுக்கும் எதிராக பாரிய பிரசாரங்களை முன்னெடுத்து அந்நாடுகள் மீது ஆக்கிரமிப்புக்கள் சாத்தியமாக்கப்படுகின்றன. அல்லது உள்நாட்டு கைக்கூலிகளைக் கொண்டு இராணுவத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு அந்நாட்டு அரசாங்கங்கள் கவிழ்க்கப்படுகின்றன. அத்துடன் அங்கெல்லாம் பொம்மை அரசாங்கங்கள் அமைக்கப்பட்டு நேட்டோ அல்லது ஐ.நா. படைகள் நிலைகொண்டுவிடுகின்றன. இவற்றுக்கு எதிரான போராட்டங்களும் ஓயாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதேவேளை ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்குள்ளாகியுள்ள தேசங்கள் அல்லது நாடுகள் ஏகாதிபத்தியதத்தினால் தோல்வியடைய வேண்டியனவே என்ற நிலைப்பாட்டினை கொண்டவர்களும் இருக்கின்றனர். இந்நாடுகளின் அல்லது தேசங்களின் தலைவர்கள் அல்லது அரசாங்கங்கள் மக்கள் விரோதமாக சர்வாதிகாரமாக நடந்து கொள்வதால் அவை தோல்வியடைய வேண்டியனவே என்று கூறி அவை ஏகாதிபத்தியத்தினால் தோற்கடிக்கப்பட்டாலும் பரவாயில்லை என்கின்றனர்.

இந்த நிலைப்பாடு வலுவடைவது அனைத்து உலக நாடுகளின் இறைமை, சுதந்திரம், ஒருமைப்பாடு முற்றாக ஏகாதிபத்தியத்தினால் கபளீகரம் செய்யப்பட்டு ஏறக்குறைய எல்லா நாடுகளும் ஏகாதிபத்தியத்தின் அடிமையாகிவிடும் ஆபத்து காணப்படுகின்றது.

இவ்வாறான உலக ஒழுங்கை ஏற்படுத்தவே ஏகாதிபத்தியம் திட்டமிட்டு செயற்படுகின்றது. "இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிராகச் செயற்படுவதாகக் கூறிக்கொண்டு தமக்கு அடிபணியாத எண்ணை வளம் கொண்ட நாடுகளை அல்லது தேசங்களை தேர்ந்தெடுத்து ஏகாதிபத்தியம் தற்போது ஆக்கிரமிப்புக்களை மேற்கொண்டு வருகிறது. இது ஏனைய நாடுகளுக்குக்கும் விரிவடையும். இதனைப்பற்றி கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

இதுபற்றி யார் கூடிய கவனஞ்செலுத்துவது?

கம்யூனிஷ்டுக்கள் தான் (மாக்ஸிச - லெனிநிச) அதன் மீது முழுக்கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் அவர்களே விஞ்ஞானப்பூர்வமான ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களாக இருக்கின்றனர். ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பவர்கள் எல்லோருமே அதனை விஞ்ஞானப்பூர்வமாக விளங்கிக்கொண்டு எதிர்த்துப்போராடி அதற்கு மாற்றாக சோஷலிசத்தை ஸ்தாபிக்கும் நோக்கமோ இலக்கோ கொண்டவர்களல்ல. அதனை விளங்கிக் கொண்டே ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் அனைவருடனும் ஐக்கிய முன்னணித் தந்திரோபாயத்துடன் செயற்படுபவர்களாக அவர்கள் இருக்கின்றனர்.

நாடுகளினதும் தேசங்களினதும் பிற்போக்குத் தலைமைகளுக்கு எதிரான போராட்டங்கள் ஏகாதிபத்தியத்தின் மறைமுக அல்லது நேரடி நிகழ்ச்சி நிரலாக இருக்கும் போது அல்லது ஏகாதிபத்தியத்தின் ஆசிர்வாதத்தை பெற்றிருக்கும் போது அவை முற்போக்கான விடுதலை அல்லது எதிர்ப்பு போராட்டங்களாக இருக்க முடியாது. ஏனெனில் நாடுகளை அலலது தேசங்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏகாதிபத்தியத்திடம் சரணடையச் செய்யும் போராட்டங்கள் முற்போக்கானவை அல்ல. ஏகாதிபத்தியத்திற்கும் தேசிய அல்லது நாட்டுத் தலைமைகளுக்குமிடையேயான முரண்பாடுகளை ஏகாதிபத்தியத்திற்கு சாதகமாகவன்றி நாட்டினதும் நாட்டு மக்களின் ஐக்கியத்திற்கும் விடுதலைக்கும் சார்பாகவே கையாள வேண்டும்.

காலனியாதிக்கத்திற்கு எதிரான போராட்டக்காலத்தை விட இன்று அதிகமான நாடுகளினதும், தேசங்களினதும் தலைமைகள் பிற்போக்கானவையாக இருக்கின்றன என்பது உண்மையே. அவற்றுக்கு எதிரான போராட்டங்கள் ஏகாதிபத்தியத்தை நாட்டுக்குள் கொண்டுவருவதற்கான அழைப்பிதழ்களாக அமைந்துவிடக்கூடாது. இது சிக்கலானதொன்றாகத் தெரிந்தாலும், ஏகாதிபத்தியத்திடம் முற்றாகச் சரணடைந்துள்ள நாடுகளினதும் தேசங்களினதும் தலைமைகளுக்கு எதிரான போராட்டங்களுக்கும் தேசிய இனவிடுதலைப் போராட்டங்களுக்கும் கூட இது பொருந்தும்.

இங்கு கம்யூனிஸ்டுக்கள் "உலகத் தொழிலாளர்களும் அடக்கப்பட்ட மக்களும் ஐக்கியப்படவேண்டும்" என்ற லெனினின் சுலோகத்தை அர்த்தமுள்ளதாக்க வேண்டியவர்களாகின்றனர். "காலனியாதிக்கத்திற்குட்பட்ட அல்லது தங்கியிருக்கின்ற நாடுகளில் நடைபெறும் போராட்டங்கள் முறைசார் ஜனநாயத்திற்கான கோரிக்கைகளாக இருந்தாலும் ஏகாதிபத்தியத்தின் மீதான அடியாக இருப்பதால் சந்தேகத்திற்கு இடமின்றி அவை இன்னொரு புரட்சிகர முன்னெடுப்பாகும்" என்று ஸ்டாலின் கூறியுள்ளார். "கம்யூனிஸ்ட்டுக்கள் சமகாலத்தில் சர்வதேச வாதிகளாகவும் தேசபக்தர்களாகவும் இருக்க முடியும். இருக்க வேண்டும். ஜப்பானிய ஏகாதிபத்தியத்தினதும் ஹிட்லரின் தேசப்பற்றும் கம்யூனிஸ்டுக்களினது தேசப்பற்றும் வெவ்வேறானவை" என்று ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டம் பற்றி மாவோ குறிப்பிடுவதையும் கவனத்திற்கொள்ள வேண்டும். இதனை அடிப்படையாகக் கொண்டே வெனிசுலவா, பொலிவியா, ஈக்குவடோர் போன்றவற்றின் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான முற்போக்குப் பாத்திரத்தினை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இவற்றிலிருந்து கண்டு கொள்ளப்படவேண்டியது யாதெனில் நாடுகளும் தேசங்களும் ஏகாதிபத்தியத்தின் பிடிக்குள் மாட்டுப்படாமல் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்பதுதான். அதனடிப்டையில், ஏகாதிபத்தியத்தினது தாக்குதல், ஆக்கிரமிப்பு என்பன எந்தவகையில் வந்தாலும் அதனை எதிர்த்துப்போராட வேண்டும் என்பதே முடிவாகும். முதலாளியத்தின் உயர்ந்த வடிவமே ஏகாதிபத்தியம். முதலாளியத்திற்கு மாற்று சோஷலிஸமே. எனவே சோஷலிஸத்தை வென்றெடுப்பதன் மூலமே ஏகாதிபத்தியத்தை ஒழிக்க முடியும். அதெவேளை ஏகாதிபத்தியத்திற்கு எதிரான தேசியவாதிகளின் போராட்டம் பெறுமதியற்றது என நிராகரிக்க முடியாது. அப்போராட்டம் சோஷலிஸ போராட்டத்தின் பகுதியாக வளர்த்தெடுக்கப்பட முடியும். வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அதனால் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான சிறு தாக்குதலைக்கூட முற்போக்கானதாகக் கொண்டு ஐக்கிய முன்னணி தந்திரோபாயத்துடன் செயற்படுவது அவசியம். இன்றைய சூழல் முற்றும் மாறானதாயினும், டிமிற்றோவின் ஏகாதிபத்திறகு எதிரான ஐக்கிய முன்னணி என்ற கட்டுரையிலிருந்தும், ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடிய சீன கம்யூனிஸ்ட் கட்சி கம்யூனிஸ்டுக்களை வேட்டையாடிய போதிலும் சியான்கே ஷேக்குடன் ஏற்படுத்திய ஐக்கிய முன்னணிகளிலிருந்தும் கற்பது அவசியம்.

ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களை கம்யூனிஸ்டுக்கள் விஞ்ஞானபூர்வமாக சோஷலிச சமுகத்தை நிர்மானிப்பதற்காக முன்னெடுக்கின்றனர். தேசியவாதிகள் நாடுகளையும் தேசங்களையும் தற்காத்துக்கொள்வதற்காக ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். சோஷலிஸத்தை நிர்மானிக்க சுதந்திர தேசங்களும் நாடுகளும் இருப்பது அவசியம். அதனால் கம்யூனிஸ்டுக்களும், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஏனைய சக்திகளும் ஐக்கியப்பட்டு போராடுவது இன்றைய தவிர்க்க முடியாத காலத்தின் தேவையாகும். இலங்கையின் மாக்சிச லெனினிசவாதிகளும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களும் முற்போக்கான தேசியவாத சக்திகளும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் புள்ளியில் ஐக்கியப்படுவதே ஏகாதிபத்திய அச்சுறுத்தல், தலையீடு, ஆக்கிரமிப்பு ஆகியவற்றை எதிர்த்து நிற்பதற்கான ஓரே வழிமுறையாகும்.

ஆசிரியர் குழு

## "தேசிய நலனுக்கு அவசரமான சட்டங்கள்" யாருடைய நலனுக்கு அவசரமானவை?

சட்டம் ஏகப்பெரும்பான்மையான மக்கள் நலனை அடிப்படையாக கொண்டதா. ஆட்சியாளர்களின் நலனை அடிப்படையாகக் கொண்டதா என்ற வினாக்களுக்கான விடைகளை நடைமுறை அனுபவங்கள் மக்களுக்கு மீண்டும் மீண்டும் பாடம் கற்பித்துக் கொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் "தேசிய நலனுக்கு அவசரமான சட்ட மூலம்" என அரசியல் அமைப்பில் உள்ள ஏற்பாடு தொடர்பில் கருத்தைச் செலுத்தலாம் என்று நினைக்கிறேன். ஏனெனில் இந்தச் சட்ட ஏற்பாடு பயன்படுத்தப்படும் விதம் மேலுள்ள கேள்விகளுக்குப் பதில்களைத் தரக்கூடியன.

சட்டமூலம் ஒன்று சட்டமாவதற்கு முன்னர் இது தொடர்பாக மக்கள் அபிப்பிராயத்தை வழங்கக் கால அவகாசம் தேவை. அது மக்களுக்கான ஜனநாயக உரிமையாகும். எனினும் இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் 122 உறுப்புரையிற் குறிப்பிடப்பட்டுள்ள "தேசிய நலனுக்கு அவசரமான சட்டமூலம்" தொடர்பான ஏற்பாடுகள் மக்களின் ஜனநாயக உரிமைக்குப் பெருத்த அடியாகவே உள்ளது.

தேசிய நலனுக்கு அவசரம் என்பதைத் தீர்மானிப்பது யார்? அரசியலமைப்புச் சட்டத்தின்படி அமைச்சரவைக்கே அந்த அதிகாரம் உள்ளது. எனவே அமைச்சரவை எந்தச் சட்டத்தையும் தேசிய நலனுக்கு அவசரமானது எனத் தீர்மானிக்கலாம். அது தொடர்பாக எந்த மட்டுப்பாடுகளும் அரசியலமைப்பில் இல்லை. அமைச்சரவை இவ்வாறு தேசிய நலனுக்கு அவசரமானது என சொல்லிக் கொண்டு ஒரு சட்டமூலத்தை கொண்டுவரும் போது அதற்குள்ள ஒரே ஒரு பாதுகாப்பு, அச்சட்டமூலம் அரசியலமைப்பிற்கு உட்பட்டதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் நியாயாதிக்கத்தை உயர் நீதிமன்றம் பெற்றிருக்கின்றமையாகும். ஆக, இங்கு சட்டம் அரசியலமைப்பிற்கு உட்பட்டதா இல்லையா என்பது பார்க்கப்படுமே ஒழிய சட்டமூலத்தின் அறம் சார்ந்த விடயங்கள், சமூகத்தில் அது ஏற்படுத்தப்போகும் தாக்கம், அதன் மக்கள் விரோதப் போக்கு என்பனவற்றின் தொடர்பில் உயர் நீதிமன்றம் பாதுகாப்பளிக்கச் சட்ட ஏற்பாடுகள் இல்லை.

ஜனநாயக விரோதமான 18வது திருத்தசட்டம் தேசிய நலனுக்கு அவசரமானது என்றே பாராளுமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டது. உயர் நீதிமன்றம் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையின் பேரில் அத் திருத்தத்தை மேற்கொள்ளலாம் எனச் சபாநாயகருக்கு ஆலோசனை வழங்கியது. 18வது திருத்தத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் ஏற்பாடுகளையே திருத்துபவைகளாகும். எனவே அதன்மூலம் சில ஏற்பாடுள் புதிதாகச் சேர்க்கப்பட்டும் சில நீக்கப்பட்டும் சில திருத்தப்பட்டும் இருந்தன. அடிப்படைச் சட்டத்தில் செய்யப்பட்ட இந்த மாற்றத்திற்கு அவசரம் என்ன? ஜனாதிபதி பதவி வகிக்க கூடிய இரண்டு தவணை வரையறையை நீக்கி எத்தனை தடவையும் ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்ய முடியும் என திருத்துவது "தேசிய நலனுக்கும் ஜனநாயகத்துக்கும் மிகவும் அவசரமானதுதான்".

நட்டத்தில் செல்லும் 37 நிறுனங்களை அரசாங்கம் கையேற்கும் சட்டமூலம் அவசரச் சட்டமூலமாக அண்மையில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. தேசிய முதலாளிகளின் உடைமைகளைச் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு விற்பதை நோக்காக கொண்டே அச் சட்டமூலம் அவசரமாக கொண்டுவரப்பட்டுள்ளதாக பரவலான கருத்து காணப்படுகிறது. கட்டுரையை எழுதி மீள வாசிக்கும் பொழுது இரண்டு நிறுவனங்கள் சர்வதேச முதலீட்டு நிறுவனங்களுக்கு விற்கப்பட்டுள்ள செய்தி கிட்டியது) அது, எதிர்க்கட்சி அரசியல்வாதிகளைப் பழிவாங்கல்களையும் நோக்காகக் கொண்டிருக்கின்றது. அவ்வாறு இல்லை என்று அரசாங்கம் சொல்லுமாயின் தேசிய நலனுக்கு அவசரமான சட்டமூலமாக அதனை கொண்டுவர வேண்டிய தேவை என்ன? 5ம் பக்க தொடர்ச்சி

**தேசிய நலனுக்கு**

அந்தத் தேவை மக்கள், அரசியல் மற்றும் சிவில் அமைப்புகள் சட்டமூலம் தொடர்பாக தலையிட்டு தமது கருத்துக்களை எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கான வாய்ப்புகளை மறுப்பதாகும். 18வது திருத்தத்தில் நடந்ததும் இதே கதைத்தான். இலங்கையில் தேசிய நலனனுக்கு அவசரம் என்று

தொடர்ச்சி 14ம் பக்கம்

# அரசின் பறிமுதல் சட்டமும் ஊடகங்களின் ஓலமும்.

அண்மையில் அரசாங்கம் சில தனியார் நிறுவனங்களைப் பெறுப்பேற்றதையொட்டி நாட்டின் பிரதான ஊடகங்கள் அனைத்தும் கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளன.

அரசாங்கத்தின் நோக்கம் முதற்கொண்டு அந் நடவடிக்கை அந்நிய மூலதனத்தின் வருகையைப் பாதிக்கக் கூடிய விதங்கள் வரை பலவும் நுணுக்கமாக விசாரிக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அச்சு மற்றும் மின் ஊடகங்கள் தவிர்ந்து அனைத்துப் பெரிய நிறுவனங்களும் இதில் அரசாங்கத்துடன் கடுமையாக முரண்படுவதற்குரிய முக்கியமான காரணங்களில் இனிமேல் இலங்கையில் முதலீடுகளுக்கு உத்தரவாதம் இல்லை என்ற பெருமுதலாளியக் கவலையும் தங்களின் எதிர்காலம் பற்றிய அச்சங்களும் உள்ளடங்கும்.

நமக்குச் சொல்லப்படுகின்ற காரணங்களில் அரசாங்கத்தின் சனநாயக விரோத முனைப்புக்கும் அதன் பொதுவான அடாவடித்தனத்துக்கும் முக்கியமான இடமுண்டு. குறிப்பிட்ட சில நிறுவனங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகளைக் காரணங்காட்டி அவற்றை அவசர அவசரமாக முறையான விசாரணைக்கோ விவாதத்திற்கோ இடமின்றிச் சட்டமியற்றிப் பொறுப்பேற்றதை இதற்கு முன்னர் நடந்த எந்தத் தேசியமயமாக்கத்துடனும் ஒப்பிடுவது கடினம். வேண்டுமானால், அரசியற் பழிவாங்கலாக 1970களில் சமசமாஜக் கட்சித் தலைவர்கள் சிலரது ஊக்குவிப்புடன் உணவு விடுதிகள் உட்படச் சில சிறிய நிறுவனங்கள் தேசியமயமாக்கப்பட்டதுடன் இதை ஒப்பிடலாம். எனினும் அன்று அத் "தேசியமயமாக்கல்கள்" சட்ட விதிகட்கமைய முறையாக முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டன என்பது கவனிக்கத்தக்கது. சோசலிச நடவடிக்கை என்று அதைக் கொண்டாடியவர்களும் அன்றைய சமசமமாஜ கட்சியில் இருந்தனர். அவர்களுள் நவ சமசமாஜ கட்சியை உருவாக்கியவர்களும் சேருவர்.

இன்று நடப்பது அன்றைய கோமாளித்தனமான பழிவாங்கலினின்றும் வேறுபட்டது. இன்றைய நடவடிக்கையின் நோக்கங்கள் நல்லவையல்ல என்பதை விட, மக்களின் கருத்து என்னவென்றோ அதை நியாயப்படுத்தவும் நடைமுறைப்படுத்தவும் கையாளப்படுகின்ற உத்திகள் ஒழுங்கு முறையானவையென்றோ அரசாங்கத்துக்குக் கவலையில்லை. நாட்டின் நீதித்துறை அரசியற் சார்பற்று இயங்குவதாகக் கூறவதற்கு ஒருவர் முட்டாளாகவோ அயோக்கியராகவோ இருக்க வேண்டும். 1978ல் ஜயவர்தன தொடக்கிவைத்த சட்ட நிருவாகத்தினதும் நீதித் துறையினதும் அரசியலாக்கல் இப்போது மேலும் முழுமை பெற்றுள்ளது. அது பூரணத்துவம் பெறுங் காலம் தொலைவில் இல்லை.

ஊடக நிறுவனங்களின் கவலைகள் பொதுவாக நியாயமானவை. எனினும், அவர்களின் கவலையைப் பற்றிய எம்முடைய கவலை என்னவெனில், தனியார் சொத்துக்கள் அடாவடித்தனமாகப் பறிக்கப்படுவது இதுதான் முதல் முறை அல்ல. பாதுகாப்பைக் காரணங்காட்டி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பறிக்கப்பட்டு இன்னமும் திருப்பிக் கொடுக்கப்படாமலுள்ளன. சம்பூரில் இந்திய அரசாங்கத்தின் 'உதவி'யுடன் நிறுவப்பிடுள்ள அனல் மின் நிலையத்திற்காக முதலில் ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பைவிடப் பெரிய அளவு நிலப்பரப்பு இப்போது மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. போர் முடிவடைந்த பின்பும் மன்னாரிலும் முல்லைத்தீவுப் பகுதிகளிலும் குடாநாட்டிலும் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்குக் கடற்படையினரின் தடைகள் தொடர்கின்றன. சில மீன்பிடிக் கிராமங்களில், மக்கள் மீளக் குடியமர்வு மறுக்கப்பட்டு, கரையில் இருந்து தூர இடங்களிற் குடியமருமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். வடக்கிலும் கிழக்கிலும் காணிகளை மீளப்பதிவு செய்யுமாறு கட்டாயப்படுத்தும் முயற்சிகள் தொடர்கின்றன.

இவை யாவுமே பொருளாதாரத்திற்கு தீங்கானவையில்லையா? இவற்றில் எதுவுமே சனநாயகச் செயற்பாடாகுமா? இவை சட்டமும் ஒழுங்கும் பொருளாதார விருத்தியும் என்ற பேரில் நடைபெறுகின்றன. சட்டவிரோதமாக மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் பல உள்ளன. அவற்றைப் பற்றி எவ்விதமான கரிசனை இப் பெரிய ஊடக நிறுவனங்கட்கு இருந்து வந்தள்ளது?

இந்த ஊடகங்கள் நாட்டின் நலனையோ அல்லது பொருளாதாரத்தையோ பற்றிக் காட்டுகின்ற அக்கறை உண்மையில் பெரிய முதலாளிகளுடைய நலன்களையும் முதலாளியப் பொருளாதாரத்தையும் அந்நிய முதலீடுகளையும் பற்றிய அக்கறையே ஒழிய மக்களுடைய நலனையோ தேசியப் பொருளாதாரத்தையோ பற்றியதல்ல என்பது தெளிவு.

தங்களுடைய தலையிலும் அரசாங்கம் கை வைக்க கூடுமோ என்பதைப் பற்றிய சிறு கவலையும் அவர்கட்கு இப்போது வேண்டியதில்லை. ஏனெனில் அரசாங்கத்திற்கு மிரட்டலான ஒரு சக்தியாக ஊடகங்கள் அமையாமற் கவனித்துக் கொள்ள ஊடக எசமானர்கட்குத் தெரியும். அரசாங்கத்துக்கும் அவர்களை எப்படிக் கவனித்துக் கொள்வது என்று தெரியும். எனவே எதிர்ப்புகள் ஒரு அளவோடு நின்றுவிடும். நாளை இந்நாட்டில் ஃபாசிச இராணுவ ஆட்சி வந்தாலும் எங்கள் ஊடகங்களின் பிழைப்பு ஆபத்தில்லாமல் தொடரும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும்.

மோகன்

# வரவு செலவுத் திட்டமும் ஏமாற்றப்பட்ட மலையக மக்களும்

அரசாங்கத்தின் அடுத்த ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. அரசாங்கம் தனது ஆட்பலத்தை பயன்படுத்தி பெரும்பான்மையான வாக்குகள் வித்தியாசத்தில் அதனை நிறைவேற்றிக்கொண்டுள்ளது. மகிந்த சிந்தனை கடந்த காலங்களில் கவனம் செலுத்தப்படாத சில புதிய திட்டங்கள் மீதும் கவனம் செலுத்தி இருக்கின்றது என்பதில் கணிசமான உண்மை இருக்கின்றது.

எது எப்படியோ ஆட்சிப் பீடத்தில் அமரும் எந்தத் தலைவர்களுக்குமே இந்த நாட்டில் மலையகம் என்றவொரு பகுதி இருக்கின்றது அங்கேயும் யாவரையும் போன்றே தேவைகள் பலவுள்ள மனிதர்கள் வாழ்கின்றனர் என்ற விடயம் அவர்களின் சிந்தனைக்கு எட்டுவதில்லை. மகிந்த சிந்தனை மட்டும் அதற்கு விதிவிலக்காகிவிட முடியுமா? காலங்காலமாக எமது நாட்டின் பொருளாதாரத்திற்கு தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றும் செயற்பாடுகளுக்கு மகிந்த சிந்தனை மேலும் வலுச் சேர்த்திருக்கின்றது என்பதனை வலியுறுத்தும் வகையில் இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் அமைந் திருக்கின்றது.

அந்த வகையில், இன்று நாட்டிற்கு மிகவும் அத்தியாவசியமான விடயங்களான அபிவிருத்தியும் தேசிய ஒருமைப்பாடும், சமூக ஒருங்கிணைப்பு, தேசியப் பாதுகாப்பு, குறைவருமானக் குடும்பங்களுக்கான ஒத்துழைப்பு, சிறுவர் மகளிர் பாதுகாப்பு, சட்டத் தாமதங்கள், சிறைச்சாலை மறுசீரமைப்பு, உணவு உற்பத்தியில் சுயதேவைப் பூர்த்தி, மீன்பிடி கால்நடை அபிவிருத்தி, திவிநெகும, குடிநீர், நீர்ப்பாசனம், சட்டச் சீரமைப்பும் சர்வதேச நடுத்தீர்ப்பு நிலையமும், ஆரோக்கியமான சமுதாயம், வீடமைப்பு வசதிகளும் அறிவுசார் சமூகத்தை நோக்கி எனப் பன்முகப்பட்ட விதங்களிலும் அபிவிருத்தியையும் மேம்பாட்டையும் ஏற்படுத்துவதற்கான ஆலோசனைகளை அது முன்மொழிந்திருக்கின்றது. மேற்குறிப்பிட்ட விடயப் பரப்புகளை நோக்கும்போது, மலையக தோட்டத் தொழிலாளர்களைத் தவிர்த்து பணியாற்ற முடியாத பாகங்களே அதிகமாக இருக்கின்றன.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வீடுகள் இருநூறு வருடங்கள் பழமை வாய்ந்தவையாக இருக்கின்றன. அவர்கள் வசிக்கின்ற லயன் காம்பறாக்களை உடைத்துத் திருத்திக்கொள்ளும் உரிமையைக்கூடத் தோட்டக் கம்பனிகள் வழங்குவதில்லை. ஆனால் தேசிய வருமானத்தை ஈட்டித் தருவதில் பாரிய பங்களிப்புச் செய் பவர்களாகவும் அந்நிய செலாவணியை ஈட்டித் தருவதில் இன்றியமையாப் பங்கினையும் இந்தத் தோட்டத் தொழிலாளர் கொண்டிருக்கின்றனர் என்பது எவராலும் மறைக்க முடியாத, மறுக்க முடியாத உண்மையாகும். இது இவ்வாறிருக்க வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப் பட்டிருக்கின்ற வீடமைப்புத் திட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் ஒருபோதும் உள்வாங்க ப்படமாட்டார்கள் என்பதே உண்மை.

அடுத்தது குறைவருமானக் குடும்பங்களுக்கான ஒத்துழைப்பு. இவ் விடயத்தை நோக்கினாலும் எமது நாட்டில் குறைந்த கூலியைப் பெற்றுக்கொண்டு கூடுதலான உழைப்பை வழங்குபவர்களாக தோட்டத் தொழிலாளர்களே இருக்கின்றனர். நடைமுறை நாட்களில் ஏற்பட்டிருக்கின்ற விலைவாசி ஏற்றம் மற்றும் சீவியச் செலவுகளை நோக்கும்போது நாளொன்றுக்கு சராசரியாக இருநேரமோ அல்லது ஒரேயொரு நேரமோ உணவு உண்கின்ற குடும்பங்களே அதிகமாக காணப்படுகின்றன. அத்துடன் போசக்கான உணவுப் பொருட்களை தேர்வு செய்து உண்டு மகிழும் பாக்கியம்கூட அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இது இவ்வாறிருக்க நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பணவீக்கத்தின் காரணமாக பொருட்களின் விலையும் வேகமாக உயரவிருப்பதை எவராலும் தடுத் துவிட முடியாது.

பொதுவாகவே விலைவாசி ஏற்றம் என்று வரும்போது, வணிகச் சமூகத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துத் தரவியாபார நிறுவனங்களும் பொருட்கள் மீதான விலையேற்றத்தை மேற்கொள்கின்றன. ஒவ்வொரு வரவு செலவுத் திட்டத்திலும் சம்பள உயர்வைப் பெற்றுக்கொள்ளும் அரச ஊழியர்களுக்கு இது அவ்வளவான பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. காரணம் அவர்களுக்கு வரவு செலவுத் திட்டத்தில் சம்பளம் உயர்த்தப்படுகின்ற அதேவேளை, சேவைக் கொடுப்பனவொன்றும் வருடாந்தம் பெற்றுக்கொடுக்கப்படுகிறது. தனியார் துறையைச் சார்ந்த ஊழியர்கள் வருடந்தோறும் சம்பள உயர்வைப் பெற்றுக் கொள்ளாமுடியாமல் இருக்கின்றனர். அதேபோல் தோட்டத் தொழிலாளர்களின் பாதிக்கப்படுகின்றனர். இரண்டு வருடங்கட்கொரு தடவை சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என்று ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருக்கின்ற போதிலும், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்கின்ற முதலாளிக ளின் ஏவலாளிகள் தமக்குரிய தரகுப்பங்கைப் பெற்றுக் கொண்டு தொழிலாளர்களை காட்டிக் கொடுத்துவிடு கின்றனர்.

அடுத்தது குடிநீர், நீர்ப்பாசன வசதிகள் என்ற விடயங்களிலும் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கின்றனர் என்பதற்கு ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. குறிப்பாக இன்று தோட்டப் புறங்களில் இருக்கின்ற நூற்றுக்கு தொண்ணூறு சதவீதமானோருக்கு சுத்தமான குடிநீர் கிடைப்பதில்லை. ஆறுகளிலிருந்தும் மலைகளிலிருந்து கிடைக்கப்பெறும் குடிநீரும் குடியிருப்புகளுக்கு மிகவும் தொலைவிலேயே அமைந்திருக்கின்றன.

நீர்ப்பாசன வசதிகளை எடுத்துக்கொண்டால் அதற்கும் மலையகத்தில் சிறுபயிர்ச் செய்கைகளில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கும் எதுவிதமான சம்பந்தமுமே இல்லை என்பதுபோலான நிலைமையே நிலவுகின்றது. மழைக் காலங்கள் தவிர்ந்த ஏனைய காலங்களில் இந்தச் சிறுபயிர்ச் செய்கையாளர்கள் சந்திக்கின்ற அசௌகரியங்கள் பற்றி எவருமே கண்டுகொள்வதில்லை. விதை, மருந்து, உர வகைகள் என்பனவற்றை மானியமாகப் பெற்றுக் கொடுக்கும் விவசாய திணைக்களங்கள்கூட இவர்கள் விடயத்தில் அசட்டையாகவே இருந்துவிடுகின்றன.

ஆக அடிமட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளை துளியேனும் கண்டுகொள்ளாத இந்த வரவு செலவுத் திட்டத்தால் மலையக தோட்டத் தொழிலாளர்களும் அவர்களில் ஒரு பகுதியினரான சிறுபயிர்ச் செய்கையாளர்களும் முற்றாக புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை யாவரும் உணரவேண்டும். இந்த வரவு செலவு திட்டத்தை அங்கீகரித்து கண்மூடித்தனமாக கையுயர்த்தி அதனை நிறைவேற்றுவதற்கு உதவும் எமது மலையகத் தலைமைகளின் மண்டைகளுக்கு இது எந்தளவு எட்டப் போகிறது? மக்களின் பதில் என்ன?

- மலைக்கூத்தன் -

# இளைஞர் யுவதிகளின் கவனத்திற்கும் சிந்தனைக்கும்

சண்முகம்

**காலை எட்டுமணிச் சூரியன் போன்றோர் இளைஞர் யுவதிகள்**

**அவர்கள் நடுத்தெருவில் அலையவிடப்பட்டிருக்கிறார்கள்**

**42 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை இல்லை.**

**வேலை செய்வோருக்கு உரிய சம்பளங்களும் இல்லை.**

**சமூகச் சீரழிவுகள் அவர்கள் மீது திணிக்கப்படுகின்றன.**

ஒரு நாடு பெற்றுக் கொள்ளும் வளங்களில் மிக உயர்வான வளம் மனித வளமாகும். அந்த வளத்தின் ஒரு பிரதான கூறாக அமைந்திருப்பது 16-35 வயதிற்கு இடைப்பட்ட வயதினரான இளைஞர் யுவதிகளை உள்ளடக்கிய இளந்தலைமுறையினராவர். நமது நாட்டின் சமூக அமைப்புச் சூழலில் இவ்விளந்தலைமுறையினர் பல்வேறு வகையிலான பிரச்சினைகளையும் நெருக்கடிகளையும் எதிர்நோக்குகின்றனர். தத்தமது வீடுகளில் பொருளாதார சமூக நெருக்கடிகளின் அன்றாட தாக்கங்களுக்கும் தாக்குதல்களுக்கும் ஆளாகி அவற்றை அனுபவிப்பவர்களாகவே இருந்து வருகின்றனர். அதேவேளை கல்விப் பெற்றுக் கொள்ளும் போதும் அதனை முடித்துக் கொண்ட சூழலிலும் வேலையின்மை எனும் பெரும் பிரச்சினையில் அமிழ்த்தப்படுகின்றனர். இதில் இடைநிலைக் கல்விப் பெற்ற இளைஞர் யுவதிகள் முதல் உயர் கல்விப் பெற்றவர்கள் குறிப்பாக பல்கலைக்கழக கல்வியை முடித்தவர்கள் வரை வேலையின்மை உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தவாறே இருந்து வருகின்றனர்.

இவ்வேலையின்மை எனும் பெருந்துயர் வருடா வருடம் அதிகரித்துச் செல்கிறது. ஏனெனில் இடைநிலை கல்வியையும் உயர் தரக் கல்வியையும் முடித்து வெளியே வரும் இளைஞர் யுவதிகளுக்கு உரிய வேலை வாய்ப்பை வழங்க முடியாத பொருளாதார அரசியல் சமூக சூழலே நீடித்து வருகிறது. இதில் வேலையற்ற பட்டதாரிகளான இளைஞர் யுவதிகள் பெரும் எண்ணிக்கையில் இருப்பது தொடர்கிறது. இவ்வருட ஆரம்பத்தில் கொழும்பு புகையிரத நிலையம் முன்பாக இடம்பெற்று வந்த வேலையற்ற பட்டதாரிகளின் தொடர் உண்ணாவிரதத்தில் இளைஞர் யுவதிகள் எதிர்நோக்கியுள்ள வேலையின்மையின் கோரத் தன்மையினை காண முடிந்தது. அதில் சில பெண் பட்டதாரிகள் கைக் குழந்தைகளுடன் உண்ணா விரத்தில் இருந்ததை காண முடிந்தது. இதே போன்று க.பொ.த சாதாரண தர, உயர் தரம் முடித்தவர்களின் எண்ணிக்கை பெருந்தொகையாகும். இவர்கள் அனைவரும் வேலையின்மை எனும் பெருங் கடலில் இருந்து கரையேர முடியாதவர்களாகவே இருந்து வருகின்றனர்.

இவற்றுக்கும் அப்பால் அரசாங்க தனியார் துரைகளில் வேலைப் பெற்றுக் கொண்ட இளைஞர் யுவதிகள் பல்வேறு நெருக்கடிகளை அனுபவித்தவாறு உள்ளனர். சம்பளம் போதாமை தாம் கற்ற கல்விக்கு ஏற்ற வேலைப் பெற முடியாமை, அதிகரித்த வேலைப்பளு, அவர்களது சம்பளத்தை நம்பிய குடும்பங்களின் வாழ்க்கை நெருக்கடிகளைத் தீர்க்க முடியாமை எதிர்ப்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாமை, போன்றவற்றாலும் இளைஞர் யுவதிகள் பாதிக்கப்படுகின்றனர். அத்துடன் திருமண பந்தத்தில் ஈடுபட்டு குடும்பத்தினராக இளைஞர் யுவதிகள் என்போர் வாழ்க்கை செலவின் உயர்வையும் ஏனைய நெருக்கடிகளையும் தாண்ட முடியாத அவதிகளுக்கு ஆளாகின்றனர்.

அதேவேளை தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் மத்தியில் இருந்து . அதே தொழில்களில் ஈடுபட்டு வரும் உடல் உழைப்பாளிகளான இளைஞர் யுவதிகள் பல்வேறு பிரச்சினைகள் நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பவர்களாகவே உள்ளனர். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இன்மை, அதிகரித்த வேலைச்சுமை, சூழல் மாசடைதலை எதிர்க் கொள்ளல், நோய்கள் மற்றும் குடும்ப நெருக்கடிகளுக்கு உட்படுதல் போன்ற நிலைகளில் இளைஞர் யுவதிகள் பாதிக்கப்படுகின்றனர். அதனால் அவர்கள் மன உழைச்சலுக்கும் விரக்திக்கும் உள்ளாகியுள்ள பல நிலை மன அழுத்தங்களுக்கு ஆளாகிவரும் சூழல் காணப்படுகிறது.

நமது நாடு ஒரு விவசாய நாடு அத்துடன் கடலால் சூழப்பட்ட நாடு மட்டுமன்றி மத்திய பிரதேசங்களில் பிரதான ஏற்றுமதிக்கான தேயிலை, இறப்பர் போன்றவற்றை உற்பத்தி செய்யும் நாடுமாகும். அதனால் நாட்டின் நாலாபுறமும் விவசாயிகள் மீனவர்கள் தொழிலார்கள் குறிப்பாக மலையக பெருந்தோட்ட தொழிலார்கள் இருந்து வருகின்றார்கள். மேலும் பெரு நகரங்களில் பல்வேறுப்பட்ட தொழில்களில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களும் உள்ளனர். இவற்றுடன் கடந்த முப்பது வருட காலத்தில் நிலையாக்கப்பட்ட பல்தேசிய கம்பனிகளில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர்.

இவ்வாறு காணும் போது நாட்டின் 90 வீதத்தினருக்கு மேலானவர்கள் உழைக்கும் மக்கள் பிரிவினராகவே உள்ளனர். மீதி 10 வீதமானவர்களே சொத்து சுகம், சுரண்டல், பணக்குவிப்பு, அதி உயர் அதிகாரப் பதவிகள், ஆளும் நிலைப் போன்றவற்றால் மிக பெரும் சம்பளங்கள் சுகபோகங்கள் கொண்டவர்களாக இருந்து வருகின்றனர். இவர்களின் சார்பாகவே ஆட்சி அதிகாரம் பெற்றோர் ஆட்சி நடத்தி வருகின்றனர். இவர்கள் வெவ்வேறு இன மொழி மத பிரதேசங்களால் வேறுப்பட்டாலும் உயர் வர்க்க நிலையால் ஒன்று பட்டவர்களாகவே இருந்தும் வருகின்றனர்.

அதே வேளை 90 வீதத்திலான உழைக்கும் மக்கள் 10 வீத்தினரால் இன மத மொழி பிரதேச கூறுகள் போன்றவற்றால் பிரித்து ஆளப்படுகின்றனர். அதேவேளை ஏக பெரும்பான்மையினராக இவ்வுழைக்கும் மக்கள் வறுமை பசி பட்டினி இல்லாமை போதாமை நோய்கள் போன்ற அடிப்படை பிரச்சினைகளால் தமது அடிப்படை தேவைகளை பெற முடியாதுள்ளனர். இவ்வாறான உழைக்கும் மக்களிடமிருந்து நாட்டின் ஏக பொரும்பான்மையான இளைஞர் யுவதிகள் வருகின்றனர். உழைக்கும் வர்க்க மக்கள் என்ற நிலையில் பெரும்பன்மையனராக இருந்த போதிலும் இன மத மொழி சாதி மற்றும் பிரதேச பால் பிரிப்புகளாலும் வேறுபாடுகளாலும் பிரித்து வைக்கப்படுகின்றனர். ஆளும் வர்க்கமும் அவர்களுக்கு கருத்தில் பண்பாட்டு சேவைகள் புரியும் சக்திகளால் இளைஞர் யுவதிகள் கூறு போடப்பட்டு பலவீனமானவர்களாக மாற்றப்பட்டுள்ளன. இதில் ஆளும் வர்க்கமும் அவர்களது அனுசரனையாளர்களான அந்நிய சக்திகளும் திட்டமிட்டவாறு இளந் தலைமுறையினரை தவறான திசை வழியில் நடக்க வைக்கின்றனர். இத்தகையோர் இளந் தலைமுறையினரைக் கண்டு அஞ்சி வருவதால் தமக்கு முடிந்த சகல வழிகளாலும் இளைஞர் யுவதிகளை அரசியல் சமூக பண்பாட்டு சீரழிவுகளுக்கு அமுக்குவதிலேயே கவனமாக இருந்து வருகின்றனர்.

இதில் இரண்டு வழிமுறைகள் இலங்கையில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. நேரடியான ஆயுத அடக்கு முறை மூலமான அழித்தொழிப்பு. 1971, 87-89 காலங்களில் தெற்கிலே தாராளமாக காணமுடிந்தது. அதன் மற்றொரு பகுதி 30 வருட வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தில் காணக்கூடியதாக இருந்தது. இவ்வாறு இடம்பெற்ற ஆயுத அடக்கு முறை அழிப்பில் சிங்கள தமிழ் முஸ்லிம் மற்றும் மலையக உழைக்கும் மக்கள் மத்தியிலான சுமார் 3 இலட்சங்களுக்கு மேலான உழைக்கும் வர்க்க இளைஞர் யுவதிகளை நாடு இழந்துக் கொண்டது. நமது இளைஞர் தலைமுறையினரின் இரத்தத்தை குடித்துக் கொள்வதில் உள்நாட்டு ஆளும் வர்க்கமும் அந்நிய வல்லாதிக்க சக்திகளும் குதூகலம் கொண்டனர். அதன் மூலம் தமது ஆளும் அதிகார வர்க்க நிலைப்பாட்டை வலுப்பபடுத்திக் கொண்டனர்.

இரண்டாவது தலைமுறை இளந்தலைமுறையினர் கருத்தியல் பண்பாட்டுத் தளங்களில் நவீன வழிகள் மூலம் சீரழிக் கப்படுகின்றனர். புழைமைவாய்ந்த கருத்தியல்கள் பெருந் தேசியத்தினூடாகவும் குறுத்தேசியவாத நிலை நின்று கெட்டியாக்கப்பட்டு வருகின்றன. அவற்றுக்கு மத பண்பா ட்டுத் தளத்திலான பரப்புரைகளும் செயல் முறைகள் மூல மும் வலுவூட்டப்படுகின்றன. குறிப்பாக நிலவுடைமைகால விழுமியங்கள் புனிதமானவை என்றும் பரப்புரை செய்யப்ப டுகின்றன. வணக்கஸ்தலங்கள் ஒரே நேரத்தில் வர்த்தகத்தின் நோக்கங்களுடனும் இளந்தலைமுறையினரைத் திசை த்திருப்பும்மைய இடங்களாக அமையப் பெற்றுள்ளன. இவற்றை நாளாந்தம் மூலையிலும் மனங்களிலும் பதிய வைக்க சினிமா சின்னத்திரை ஆகியவற்றை தொலைக் காட்சி மற்றும் நவீன தொலைத் தொடர்பு தகவல் பரிமாற்றங்கள் வாயிலாகவும் பல பக்க முயற்சிகள் செய்யப்படுகின்றன. இவை செயல்படுதப்படுவதற்கு தற்போதைய போக்காக அமைந்திருக்கும் ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலானது திட்ட மிட்ட வகையில் முன்னெடுக்கப்படுகிறது.

இதல் பொருளாதார நோக்கும் போக்கும் முற்றிலும் குறுகிய சுயநலம் கொண்டதாகவும் குறுக்கு வழிகள் பலவ ற்றைப் பயன்படுத்துவனாகவும் அதீத லாபம் பெறுவதற்காக எந்த வழிமுறையையும் பயன்படுத்துவனாகவும் அதிக லாபம் பெறுவதற்காக எந்த வழிமுறையையும் பயன் படுத்திக்கொள்ளலாம் என்றவாறும் செயலாக்கம் பெறுகிறது. இதனால் சமூக நலன், பொது நலம் பற்றிய அக்கறை, கூட்டு முயற்சி, தனி மனித மனசாட்சி யாவும் அமுங்கிப் போகச் செய்யப்படுகின்றன. இவற்றுக்கு பலியாவதில் இளந்தலைமுறையினர் கடுமையான பாதிப்பைப் பெறுகின்றனர். யாவும் பணம் இலாபம் தனிமனித முயற்சியும் உயர்ச்சியும் என்றவாறான ஒரு போட்டிச் சமூக ஓட்டத்திற்குள் இளந்தலைமுறை இறங்கி விட்டுள்ளதை இன்று அவதானிக்க முடிகிறது. இவ்விடயத்தில் பழமைவாய்ந்த கருத்தியல் வழியிலான சிந்தனை முறைகளும் தற்போதைய உலகமயமாக்கல் மூலமான நவீன தகவல் தொழில் நுட்பம் வாயிலாக சமூக சீரழிவிற்கு வழிவகுக்கும் நடைமுறைகளும் எவ்வித முரணும் இன்றி இணைந்து இசைந்து செல்கின்றன. அவற்றின் சமூக தாக்கம் பாரிய சமூக சீரழிவுகளாக வளர்ந்து செல்கின்றன. இதனால் பாதிக்கப்படுகின்றவர்கள் இளந்தலைமுறையினராகவே காணப்படுகின்றனர். இளந்தலைமுறையினரான இளைஞர் யுவதிகளை ஆட்கொண்டிருக்கும் சமூகச் சீரழிவின் தாக்கம் எவ்வாறு நிகழ்கிறது எத்தகைய பின்புலத்தில் முன்தள்ளப்படுகின்றன அவற்றுக்கும் இன்றைய சமூகக் கட்டமைப்புக்கும் உள்ள தொடர்புகள் யாவை போன்றவற்றை அடுத்த சந்தர்ப்பத்தில் நோக்குவோம்.

# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை 15

-வெகுஜனன்-

1995 நவம்பரில் யாழ் குடாநாட்டை புலிகள் இயக்கத்திடமிருந்து விடுவிக்கும் பாரிய இராணுவ நடவடிக்கையொன்றை இலங்கை இராணுவம் மேற்கொண்டது. பலாலியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட சூரியக்கதிர் இராணுவத் தாக்குதலுக்கு முன்னாற் புலிகளால் நின்றுபிடிக்க முடியவில்லை. பாதுகாப்புக்காக மக்களை வலிகாமம் மேற்குப் பிரதேசத்துக்குச் செல்லுமாறு இராணுவம் பணித்தது. ஆனால் புலிகள் இயக்கம் வலிகாமம் வடக்கு, ·தெற்கு, கிழக்கு, மேற்கு, யாழ் நகரம் மற்றும் தீவுப் பகுதிகள் உட்பட்ட அனைத்துப் பகுதிகளில் இருந்தும் மக்களை கட்டாயப்படுத்தி வெளியேற்றியது. அதன் மூலம் நாவற்குழி முதல் தொண்டமானாறு வரையான கடலேரிக்கு அப்பால் தென்மராட்சி, வடமாராட்சிப் பிரதேசங்களுக்குச் செல்லுமாறு புலிகள் மக்களுக்குக் கட்டளை இட்டனர். புலிகளின் துப்பாக்கி அராஜகத்துக்கு முகங்கொடுக்க முடியாத வலிகாமம், தீவகம் பகுதிகளின் மக்கள் தம் ஆத்திரமிக்க எதிர்ப்பை மௌனமாக்கிக் கொண்டு தமது சைக்கிள்களிலும் பிற வாகனங்களிலும் எடுத்துச்செல்லக்கூடிய பொருட்களை மூட்டை முடிச்சுக்களாக்கிக் கொண்டு அன்றைய கடும் மழைக் காலத்தில் நாவற்குழிப் பாலத்தைக் கால் நடையாகக் கடந்தனர். இரண்டு பகல் இரண்டு இரவிற்குள் அந்த ஒரு வழிப்பாதையில் பல இலட்சம் மக்கள் ஊர்ந்து நடந்து சென்ற அன்றைய அவலக் காட்சிகளை இன்றும் மனக்கண் முன்னே மக்கள் காண்கின்றனர். இப்படியான இடப்பெயர்வு அதுதான் முதற்தடவை அல்லவெனினும், குறுகிய கால இடைவெளியில், இரண்டு நாட்களுக்குள், அதுவும் மண்ணையும் மக்களையும் விடுவிப்பதாகக் கூறிக் கொண்டவர்களாலேயே தத் தமது வீடுகளில் இருந்தும் சொந்தப் பிரதேசங்களில் இருந்தும் மக்கள் விரட்டப்பட்டமை வேதனைக்குரியதாகும். இவ்வாறு வலுக்கட்டாயமாக மக்கள் விரட்டி வெளியேற்றப்பட்டு இடப்பெயர்விற்கு உள்ளாக்கப்பட்டபோது தொண்ணூறில் வடபுலத்து முஸ்லிம் மக்கள் புலிகளால் வெளியேற்றப்பட்டதன் வலியும் வேதனையும் எத்தகையது என்பதை சகோதரத் தமிழர்கள் உணர்ந்ததைக் காணமுடிந்தது. அதன் பின்பு தென்மாராட்சியும் வடமராட்சியும் இலங்கை இராணுவத்தின் பிடிக்குள் வந்து கொண்டன. தீவகம் ஏற்கனவே இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்தது. பளை, பூனகரிக்கு அப்பால் யாழ் குடாநாடு முழுவதும் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் சென்றது.

இவ்வாறு 1995ம் ஆண்டு புலிகள் இயக்கத்தின் துப்பாக்கி முனையில் இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வானது தமிழ்த் தேசியம் என இன்று வரை உயர்த்தி ஓதப்பட்டு வரும் ஒன்றினுள் இருந்து வந்த ஒரு பண்பை அம்பலமாக்கியது. தமிழீழப் பிரகடனத்தின் போதும் அதனை வென்றெடுக்க நடாத்திய போரட்டங்களின் போதும் சாதியத்தை ஒழிப்பது தமது நோக்கம் என்றே கூறப்பட்டு வந்தது. புலிகள் இயக்கமும் அதற்கு விலக்கின்றிச் சாதி பார்க்கக் கூடாது என்றே கூறி வந்தது. ஆனால் தேசிய விடுதலைப் போராட்டம் என்று கூறப்பட்ட காலத்திலும் சாதியம் தனது கட்டுறுக்கத்தை எவ்வகையிலும் தளர்த்தவே இல்லை. இதனைத் தென்மராட்சி நோக்கிய பாரிய இடப்பெயர்வில் நடைமுறை அனுபவமாகக் காணமுடிந்தது.

நாவற்குழிப் பாலம் கடக்கும் வரை ஒரே மனிதக் கூட்டமாக நகர்ந்தவர்கள் அவ்விடத்தை தாண்டியதும் சாதிகளாகப் பிரிந்து அந்தந்தச் சாதியினர் வசித்து வந்த கிராமங்களுக்கும் பகுதிகளுக்கும் சென்றடைந்தனர். மாற்றுச் சாதியினரின் இடங்களுக்குச் செல்ல முடியவில்லை. ஆரம்பத்திலேயே இடம்பெயர்ந்தோர் தங்கியிருந்த பாடசாலைகளிலும் கோவில் மண்டபங்களிலும் பிற பொது இடங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் சாதியறிந்து வெளியேற்றப்பட்டனர். "இது எங்கடை ஆக்கள் இருக்கிற பாடசாலை, நீங்கள் உங்கடை ஆக்கள் இருக்கிற பகுதிக்குப் போங்கள்" என வழிகாட்டப்பட்னர். உணவோ தேனீரோ ஏன் பச்சைத் தண்ணீரோ கூடக் கொடுக்க மறுத்த அவலத்தைச் சிலர் இன்றுவரை மறைக்க முயலுகின்றனர். இத்துடன் விடயம் முடியவில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் தத்தம் சாதிய உறவுகளுடன் தங்கியிருந்த கிராமங்களில், குறிப்பாகத் தென்மராட்சிப் பகுதியில், கிணறுகளில் தண்ணீர் பெற முடியாது தடுக்கப்பட்டனர். அதே போன்று அப் பிரதேசக் குளங்களில் இறங்கவோ குளிக்கவோ முடியாது தடுக்கப்பட்டனர். மீறியோர் தாக்கப்பட்டனர். சில கிணறுகளில் கழிவு எண்ணெய்கள் ஊற்றப்பட்டதுடன், பாம்புகள் அடித்துப் போடப்பட்டன. இவற்றைச் சிங்களவர்களோ முஸ்லிம்களோ செய்யவில்லை. தமிழ்த் தேசியத்தைச் சுமந்து நின்ற உயர் சாதிச் சாதி வெறியர்களே செய்தனர். தமிழ்த் தேசியத்தின் வலுவான கூறாகச் சாதியம் இருந்து வரும் யதார்த்தத்தை இவ் இடப்பெயர்வுக் காலச் சம்பவங்கள் அப்பட்டமாகவே பறைசாற்றி நின்றன.

வன்னிப் பெருநிலப் பரப்பிற்குப் பின்வாங்கிய புலிகள் இயக்கம், முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்டங்களையும் வவுனியா மன்னார் மாவட்டங்களின் குறிப்பிடத்தக்க பெரியளவு பகுதிகளையும் கொண்ட பிரதேசத்தில் தனது இராணுவ-நிர்வாகத் தளங்களை விஸ்தரித்துத் தன்னை வலுப்படுத்திக் கொண்டது. தமது கட்டுப்பாட்டிற்குள் இருந்துவந்த வடக்குக்-கிழக்குப் பிரதேசங்களில் புலிகள் தமது நிர்வாகத்தை பல நிலைகளுக்கும் விஸ்தரித்தனர். காவல்துறை, நீதிமன்றம், சிறைச்சாலை, நிதித்துறை, சுங்கத்துறை, வியாபாரம், வர்த்தகம், அரசியல், கலை-பண்பாட்டுத்துறை போன்றவற்றைத் தமக்குரிய வரையறைகளுடன் முன்னெடுத்தனர். யாவற்றிலும் "புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்" என்ற பதாகையும் "ஒரே தலைவர் ஒரே இயக்கம்" என்ற முழக்கமும் உயர்த்தப்பட்டன. இராணுவ அணிகளில் மேலும் பல பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. ஆண்களுக்கான படையணிகள், பெண்களுக்கான இராணுவப் படைப்பிரிவு, தற்கொலைப் படைப்பிரிவு, கரும்புலிகள் அமைப்பு என ஆண்களுக்கும் பெண்களுக்



குமாக நிறுவப்பட்டன. அத்துடன் கடற்புலிகளால் கடற்படையொன்று கட்டியெழுப்பப்பட்டது. சிறிய விமானங்களைக் கொண்ட வான் படையொன்றும் கிளிநொச்சியில் அதற்கான தள வசதிகளுடன் உருவாக்கப்பட்டது. அரசியல் துறை கிளிநொச்சியில் தனது தலைமையகத்தை நிறுவியது. அதன் ஒரு பகுதியாகச் சமாதானச் செயலகமும் நிறுவப்பட்டது. காவல்துறைத் தலைமையகமும் கிளி நொச்சியில் நிறுவப்பட்டது. யாவற்றுக்கும் மேலானதாக புலிகளின் புலனாய்வுத்துறை பல நிலைகளில் இறுக்கமான கட்டமைப்புகளைக் கொண்டதாக விளங்கியது. வன்னிப் பெருநிலப் பரப்பில் புலிகளின் சர்வ ஆதிக்கம் நிலவியது.

அங்கு போன்று கிழக்கில் அதனை முன்னெடுக்க முடியவில்லை. இருப்பினும் திருகோணமலை மட்டக்களப்பு மாவட்டங்களின் சில பிரதேசங்களிலும் அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் புலிகள் இயக்கம் தனது கட்டுப்பாட்டை வலுப்படுத்தி வந்தது. வடக்குக்-கிழக்கின் கரையோர மக்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கவும் அதன்மூலம் தமது கடற்படையை நிறுவி விரிவாக்கவும் அவர்கட்கு முடிந்தது. அவர்களது கடற்படைத் தளம் வலிவலிமையுடன் அமைய வாய்ப்பானதாக முல்லைத்தீவின் சாலைக் கடற்கரையோரம் அமைந்திருந்தது.

மேலும், புலிகள் இயக்கம் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்ந்த தமிழர்களிடம் தனது செல்வாக்கை விஸ்தரித்து வந்தது. தமிழீழக் கோரிக்கைக்கான நன்கு திட்டமிடப்பட்ட பரப்புரையுடன் அதற்கு ஏதுவான அவர்களது நேர்த்தியான, நவீன தொழிநுட்பத்துடன் கூடிய தகவல் தொடர்பு, தகவல் பரிமாற்ற வலைப்பின்னலும் அமைந்து கொண்டன. வானொலி, பத்திரிகைகள், சஞ்சிகைகள், தொலைக்காட்சி தொலைத்தொடர்பு வசதிகள் போன்றவற்றின் மூலம் தமக்கான மேம்பாட்டுப் பரப்புரைகளைச் செய்துவந்தனர். இவை யாவற்றுக்கும் அப்பால், புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடையே புலிகள் இயக்கத்தின் குவிமையம் நேரடியாகவும் மறைமுகமாகவும் பணம் திரட்டுவதாகவே இருந்தது. அதற்குப் பல்வேறு அமைப்புகளையும் வழிமுறைகளையும் கையாண்டனர். வர்த்தக நிலையங்களையும் வியாபார முறைகளையும் மட்டுமன்றிக் கோவில்களை நிறுவியும் கைப்பற்றியும் அவற்றின் வருமானங்களைத் தமதாக்கிக் கொண்டனர். ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கு ஆட்களை ஏற்றியும் இறக்கியும் பெருமளவு பணத்தைச் சேகரித்தனர். புலம்பெயர்ந்த நாடுகளில் அவர்களது நிதிச் சேகரிப்பில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (TRO) முக்கிய பாத்திரம் வகித்தது.

இவ்வாறு உள்நாட்டில் வரிவிதிப்பு முதல் வர்த்தகம் வரை கட்டாயப் பணம் திரட்டப்பட்ட அதேவேளை, புலம்பெயர்ந்த தமிழரின் நிதி வளங்கள் வற்றாத ஊற்று மூலங்களாகக் காணப்பட்டன. இதனால் உலகிலேயே பணபலம் மிக்கதொரு இயக்கமாக புலிகளால் வளரச்சி பெற்று இருக்க முடிந்தது. இந்த பணத்திரட்டல் நடவடிக்கைக்கு அவர்கள் பல்வகைப்பட்ட அணுகுமுறைகளைக் கையாண்டனர். இராணுவத்தின் மீதான ஒவ்வாரு தாக்குதலின்போதும் அதில் இறந்த இராணுவத்தின் எண்ணிக்கையை மிகைப்படுத்திப் பிரசாரம் செய்து தமது வலிமையின் பெருமையினை மக்களின் மனங்களில் வீர தீரமாக நிலைகொள்ள வைத்தனர். அத்தகைய தாக்குதல்களிற் பலியான புலிகளின் தியாகத்தைக் காட்டி "மாவீரர்கள் புதைக்கப்படுவதில்லை விதைக்கப்படுகின்றார்கள்" என்று பரப்புரை செய்தனர். இவையனைத்தின் மூலமும் புலிகள் இயக்கத்தினை வலிப்படுத்திக் கொள்ளவும் பணம் சேர்க்கவும் முடிந்தது. மக்களிடம் பணம் சேகரிப்பதில் புலிகள் இயக்கம் எவ்வித ஈவிரக்கமும் கொண்டிருக்கவில்லை.

இவ்வாறு 1990 முதல் 2000 வரையான பத்து வருடக் காலத்தில் புலிகள் இயக்கம் வட கிழக்கில் வன்னி பெருநிலப் பரப்பை மையப்படுத்திய இராணுவ வலிமை கொண்ட தனியொரு இயக்கமாக வளர்ச்சி பெற்றது. அது கெரி ல்லா இயக்கமாக ஆரம்பித்து மரபு வழியிலான தரை, வான், கடல் படைகளையும் காவல் துறையையும் கொண்ட இயக்கமாக வளர்ச்சி கண்டது. இலங்கை அரசாங்கத்தின் நடைமுறைகளுக்குச் சமாந்திரமான ஒரு நிர்வாகத்தையும் கொண்டிருந்தது. அதேவேளை அதன் அரசியல் மார்க்கமும் நிலைப்பாடும் மிகத் தாழ்ந்த மட்டத்திலேயே இருந்து வந்தது. புலிகள் இயக்கத்திற்குள்ளும் மக்கள் மத்தியிலும் ஜன நாயகம் சுதந்திரம் மனித நேயம் என்பன உச்சரிக்கக் கூடிய நிலையிற்கூட இருக்கவில்லை. அவ்வாறெனில் மனித உரிமை விடயத்தில் புலிகள் இயக்கம் எவ்வாறு இருந்திருக்கும் என்பதனைக் கண்டு கொள்ளமுடியும்.

புலிகள் இயக்கம் அக் காலப்பகுதியில் தமது ஆயுதபலம், பணபலம் மற்றும் வளப் பெருக்கம் என்பவற்றின் மூலம் தமது அதிகாரப் பலத்தை விரிவாக்கிக் கொண்டதுடன் மக்களின் மீது அவற்றை பயன்படுத்தி அச்சுறுத்தல், மிரட்டல், கைது, தடுத்துவைப்பு, விசாரணை, மரணதண்டனை போன்றவற்றை நடைமுறைப்படுத்தியும் வந்தது. இவற்றின் மூலம் விரைவில் தமிழீழம் மலர்ந்துவிடும் என நம்பியதுடன் மக்களை நம்பும்படியும் வற்புறுத்தும் பிரசாரங்களையும் செய்து வந்தது. அவர்களின் கண்களுக்கு அகப்படாது அணுவும் அசைய முடியாதவாறு புலனாய்வு வலையமைப்பு கட்டியெழுப்பப்பட்டிருந்தது. இதனால் மக்கள் அச்சுறுத்தப்பட்டு அடக்கியொடுக்கப்பட்டிருந்தனர். புலிகளின் ஜனநாயக விரோத அராஜகச் செயற்பாடுகளை ஒருவர் விமர்சித்தால், மறுநாள் புலனாய்வுத் துறையைச் சேர்ந்தோர் வீடு தேடி வந்து அவரைக் கடும் விசாரணை செய்து எச்சரிப்பர். அத்தகையவர் மேலும் எதிர்வாதம் புரிந்தால், அவர் கொண்டு செல்லப்பட்டு புலிகளின் நிலத்தடிச் சிறையில் (பங்கரில்) தள்ளப்படுவார். இவைகள் மிகச் சாதாரண

தொடர்ச்சி 11ம் பக்கம்

# தடம் மாறாத பிற்போக்குத் தமிழ்த் தேசியமும் தமிழ் மக்களுக்கான முற்போக்குத் தேசியமும்

தமிழ்த் தேசியவாதம் இன்னமும் தன்னுடைய பழைய சுவடுகளிலேயே தொடருகிறது. கட்சிகள் வேறானாலும் கொள்கைகள் வேறென்று சொல்லப்பட்டாலும் தலைவர்கள் வேளைக்கொன்று பேசினாலும், அடிப்படையில் ஒரு மாற்றமும் இல்லாமல், ஒரு பழைமைவாத, இந்திய-மேற்குலக விசுவாசங் கொண்ட குறுகிய தேசிய பார்வையிலிருந்து விடுபட இயலாமல் அது திணறுகிறது. அதன் இருப்பை இயலுமாக்குகிற சிங்களப் பேரினவாதத்தின் வர்க்க அடிப்படை என்ன என்றோ அதற்கு ஆதாரமாக இருப்பது எது என்றோ பழைமவாதத் தமிழ்த் தேசியவாதிகள் கவ னிக்க ஆயத்தமாக இல்லை. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதைப் பேரினவாதம் இன்று திட்டவட்டமாக மறுக்கிறது. தமிழரின் அடையாளத்தை இந்த நாட்டுக்குரிய தல்ல என்று சொல்லுமளவுக்கு பேரினவாதம் போயுள்ளது. கல்வித் துறை முதற் கொண்டு பல்வேறு ஊடகங்கள் மூலமும் தொல்லியல் ஆய்வுகள் என்ற பேரிலும் தமிழர்கள் அந்நியர்கள் அவர்கள் இந்த மண்ணுக்குரியவர்களல்ல என்ற சிந்தனை சிங்கள மக் கள் மத்தியில் வலுவூட்டப்பட்டு வருகிறது. அதை எதி ர்கொள்வதற்கான ஆர்வ மோ







ஆற்ற லோ அக்கறை யோ கூடத் தமிழ்த் தேசிய வாதத் தலைமை களிடம் போதியளவில் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழ்த் தேசியவாதம் எந்த வடிவத்தை எடுத்த போதிலும், அது வலியுறுத்தி வந்த நலன்கள் வசதிபடைத்த, சமூகத்தின் மேல் நிலையிலிருந்து வந்தவர்களதும் மேல் நிலை யாக்கம் பெற்றவர்களதும் நலன்களாகவே இருந்து வந்துள்ளன. தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்ட சனங்கள் என்பதை நமது தலைமைகள் இன்னமும் சரிவர விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. தமிழ்த் தலைமைகள் இன விடுத லையைப் பற்றி பேசியிருக்கிறார்கள். ஆனால் அது முழுச் சமூகத்தினதும் விடுதலையைப் பற்றியதாக இருந்ததில்லை. உண்மையில் தமிழ்ச் சமூகத்திற்குள் இருந்து வரும் பல சமூகக் கொடுமைகளையும் அநீதிகளையும் பற்றிப் பேசுவது தமிழரின் ஒற்றுமைக்கு கேடானது என்று தான் நமக்குச் சொல்லப்பட்டு வந்துள்ளது.

இன்னொரு. புறம், 'தமிழ் பேசும் மக்கள்' என்ற "தேசியக்" கருத்தாக்கம் முன் வைக் கப் பட் டது. ஆனால், அந்தத் தமி ழ்ப் பேசும் மக் கள் அனைவருக்கும் பொதுவான மொழியை விட வேறெந்தச் சமூக அரசியல் அடையாளமும் முன்வை க்கப்படவில்லை. உண்மையில் தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட சமஷ்டிக் கோரிக்கை அந்த மக்களின் ஏகப் பெரும்பான்மையினரின் நிலையைப் பற்றிக் கவனம்செலுத்தவில்லை. 1956இல் சிங்களமே அரசகரும மொழி என்ற அரசியற் கோஷம் எழுந் ததையொட்டித் தமிழ்த் தேசிய அரசியல் வெறும் "மொழி உணர்ச்சி" அரசியலாகியது. தமிழ் மக்களின் இருப்பை மிரட்டலுக்குட்படுத்திய திட்டமிட்ட குடியேற்ற ங்கள் பற்றிப் பேசப்பட்டது. ஆனால், நடைமுறையிற் பய னுற எதுவுமே செய்யப்படவில்லை. அதற்கான முக்கிய காரணங்களிற் சில, குடாநாட்டின் சமூக அமைப்புடன் தொடர்புடையவை.


தென்னிலங்கையில் ஒரிரு நகரங்களில் (குறிப்பாகக் கொழும்பில்) வாழ்ந்துவந்த வசதிபடைத்த தமிழர்களைப் பற்றிய கவலையை விட்டால், குடாநட்டிற்கு வெளியே வேறெந்த அரசியல் அக்கறையும் அற்றதாகவே தமிழ்த் தேசியவாதச் சிந்தனை தோற்றம் பெற்றது. அது தமிழீழம் என்றோ தேசிய சுயநிர்ணய உரிமை என்றோ தன்னை அறிவிக்காது தமிழினம், தமிழ் மக்கள் என்று பேசிய காலத்திலும், அதன் அரசியல் யாழ்ப்பாணக் குடாநாட்டை மையப்படுத்தியதாகவே இருந்தது. மொழி தொட்ர்பாக பற்றிப் பேசப்பட்டாலும் தொடக்க நிலையில் சைவ-வேளாள உயர் வர்க்க நலன்களை விட வேறெதற்கும் அரசியல் முக்கியத்துவம் இருக்க வில்லை. விலக்கான ஒரு போக்காக யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் இருந்தது. அது, ஒரு புறம் இலங்கை என்ற அடிப்படையிலும் இன்னொரு புறம் தமிழச் சமூகத்தினுள் சமூக அநீதியைப் பற்றியும் பேசியது. முழு இலங்கையும் கொலனிய ஆட்சியில் இருந்து விடுதலை என்ற கருத்தை முதன் முதலில் முன்வைத்த அமைப்பு என்ற பெருமையும் அதற்குரியது. அதன் வீழ்ச்சியும் அதனிடத்தில் தமிழ் காங்கிஸின் வருகையும் ப்ழைமைவாத அரசியலின் வெற்றியை அடையாளப்படுத்தின.


தமிழரசுக் கட்சியின் வருகை யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய அரசியலிருந்து நாடளாவிய அரசியலை நோக்கிய நகர்வு என்பது வெறும் மாயை என்பது 1956க்கும் பின்பு வேகமா கவே தெளிவாகியது. தமிழ் மக்கள் ஒரு சிறுபா ன்மைத் தேசிய இனம் என்பதுடன் அவர்களது விடுதலை யும் விமோசனமும் பல்வேறு தளங்களில் ஒற்றுமைப்பட்ட போராட்டங்களை வேண்டி நின்றன என்ற உண்மை எந்தத் தமிழ் தலைமைக்கும் உறைக்கவில்லை.

சமஷ்டி வேண்டி நின்ற போதும் தமிழீழம் வேண்டி நின்ற போதும் இன்று அயல் நாடுகளின் தயவிலே தான் தமிழ் மக்களுக்கு எதையாவது பெற்றுத் தர இயலும் என்று புலம்புகிற நிலையிலும் தமிழ் மக்கள் தமது விடுதலையை வெல்ல யாருடன் எந்த அடிப்படையில் ஐக்கியப்படுவது என்பதைப் பற்றித் தமிழ்த் தலைவர்கள் பேச மறுத்தே வந்துள்ளனர்.

முஸ்லிம்களுக்கும் மலையகத் தமிழருக்கும் தலைமைதாங்கி வழிநடத்தும் தகைமையோ உரிமையோ தமிழ்த் தேசியவாதிகட்கு அன்றும் இல்லை இனியும் இல்லை. ஆனாலும், இன்றுங் கூட, முஸ்லிம்களதும் மலையகத் தமிழரதும் தனித்துவத்தையும் தேசிய இன அடையாளத்தையும் ஏற்க மறுக்கிற போக்குத் தொடருவதனைக் காணுகிறோம். அச் சமூகங்களைத் தேசிய இனங்களாக ஏற்க ஆயத்தமாக உள்ளவர்களிடையிலும் அவர்களது விடுதலையையும் தமிழ் மக்களுடைய விடுதலையையும் எப்படி இணைப்பது என்ற சிந்தனை எதுவும் இல்லை. இந்த இயலாமை இத் தேசிய இனங்கள் இரண்டினதும் துரோகத்தனமான தலைமைகள் தொட ர்ந்தும் ஆதிக்கத்தில் இருக்கவே உதவியுள் ளன.

தமிழ் மக்களின் ஒன்று மையைப் பற்றிப் பேசப்ப டுகிறது. ஆனால் தமிழ் மக்கள் நடுவே பண்பா ட்டின் பேராலும் மரபின் பேராலும் பெண் கள் மீதும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் மீதும் ஆதி க்கமும் அடக் குமுறை யும் தொடருகின்றன. அவற்றைப் பற்றிப் பேசு வற்குத் தடை விதிப்ப தன் மூல மும் அவை இல்லாமற் போய்விட







மாட்டா. இன்று வரை, இவ் விடயங்களி லிருந்தும் பலவாறான மூடப் பழக்க வழக்கங்களிலிருந்தும் விடுதலை பெற இயலாத சமூகமாகவே தமிழர் உள்ளதைக் காண்கிறோம். நவீன உலகின் நுகர்வுப் பண்பாட்டில் மூழ்கியுள்ள அதே வேளை, பண்பாட்டின் பேராலே பழைய சுமைகளைக் காவுகின்றவர்களாக நாம் இருக்கின்றோம்.

வர்க்க முரண்பாட்டையும் முதலாளித்துவச் சுரண்டலைப் பற்றியும் மட்டுமல்லாது ஏகாதிபத்தயத்தைப் பற்றியும் பேச விரும்பாத (முடிந்தால் ஏகாதி பத்தியத்திற்கு சார்பான நிலைப்பாட்டை கொண்ட) தேசிய வாதத் தலைமைகளில் தமிழ் தேசியவாதத் தலை மைகட்கு ஒரு சிறப்பான இடமுண்டு. அதன் விளைவா கத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் (ஒரு குறுகிய கால இடை வெளியைத் தவிர்த்து நோக்கின்) உலகின் எந்த விடுதலைப் போராட்டத்துடனும் தன்னை அடையாளப்படுத்தத் தயங்கியே வந்துள்ளது.

காஷ்மீரினதும் மணிப்பூரினதும் நாகலாந்தினது குர்திஸ் தானினதும் பலஸ்தீனத்தினதும் விடுலைப் போராட்டங் களை ஆதரிக்க இயலாமையை விடுவோம். ஒடுக்கு முறை அரசுகளுடனும் அவற்றின் ஏகாதிபத்தியப் போஷகர் களதும் தரப்பிலேயே தமிழ்த் தலைமைகள் இன்றும் இருப் பதை நாம் எப்படி விளங்கிக் கொள்வது?

என்னிடம் இருப்பது எளிமையான ஒரு விளக்கமே: தமிழ்த் தேசியவாத அரசியல் இன்னமும் தமிழ் மேட்டுக் குடிச் சிந்தனைக்குச் சிறைப்பட்டுள்ளதுடன் தமிழ் மக்களின் விடுதலைக்கும் உலகளாவிய சமூக அநீதிக்குமிடையிலான உறவைப் பற்றி அக்கறையற்றும் உள்ளதனாலேயே அது தமிழரை அவர்களது நேச சக்திகளிடம் இருந்து தனிமைப்படுத்துகிறது. இவ்வாறான அரசியல் பார்வை மிகக் குறுகலானதும் குறுகியகால நோக்கைக் கொண்டதுமாகும். எனவே அதற்கென ஒரு அறமோ அறிஞ் சார்ந்த பார்வையோ அற விழுமியங்களோ இல்லை. அதனுடைய நியாயங்கள் எல்லாம் குறிப்பட்ட ஒரு ஆதிக்க வர்க்கத்தின் மேலாதிக்கத்தைப் பேணுவதையும் அது நம்பியிருக்கும் எசமானர்களை மகிழ்விப்பதையும் பற்றியது. எனவே தான் அது சமூக நீதிக்கான போராட்டங்களில் இருந்து ஒதுங்கி நிற்கிறது.

தமிழ்த் தலைமைகளில் எதுவேனும் இவ்வருட நடுவில் கட்டுநாயக்காவில் நடந்த பொலீஸ் அடாவடித்தனத்தைக் கண்டிக்கத்தவறியது முதல் இன்று பாராளுமன்றத்தில் தடையின்றி நடந்தேறும் சண்டியர் ஆட்சியைப் பற்றிய த.தே.கூ.வின் செயலின்மை வரையிலான கோழைத்தனத்தையும் தமிழ் மக்களுக்காகப் பேசவும் அஞ்சுகிற கையாலாகத்தனத்தையும் விளக்கத், தலைமைகளின் அறமின்மையை விட்டால் வேறு எதனையும் என்னாற் காட்ட இயலவில்லை.

நன்றி: தினக்குரல் - கோகர்ணன் -

## தோழர் ராதாவின் மறைவுக்கு எமது சிகப்பு அஞ்சலி!



புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் சங்கானைக் கிளையின் நீண்டகால உறுப்பினரும் மக்கள் மத்தியில் மிகுந்த அன்புக்கும் நட்பிற்கும் தோழமைக்கும் உரியவராக வாழ்ந்து வந்தவருமான தோழர் பொன்னர் ராதா கடந்த 30.10.2011 அன்று மாரடைப்பினால் இயற்கை எய்தினார். அவர் தனது 58வது வயதில் மறைவுற்றமை நம் எல்லோருக்கும் பெரும் துயரமாகிறது. ஆவர் தனது மாணவக் காலம் முதலே மாக்சிசம் லெனினிசத்தின் மீது பற்றுக் கொண்டவராகி இளமைக் காலத்திலேயே வாலிபர் இயக்கத்திலும் கட்சியிலும் இணைந்து ஊக்கமுடன் செயற்பட்டு வந்தவர். சங்கானைப் பகுதியில் நிச்சாமம் கிராமத்தைச் சேர்ந்த தோழர் ராதா அக் கிராமத்தின் புரட்சிகரப் பாரம்பரியத்தில் வந்தவர். அவரது தந்தையார் பொன்னர் ஐம்பதுகளில் அன்றைய கடினமான சூழலில் சங்கானைப் பிரதேசத்தில் பொதுவுடைமை இயக்கத்தை முன்னெடுத்தவர்களில் ஒருவராகச் செயற்பட்டவர். அவரது குடும்பம் மட்டுமன்றி நிச்சாமம் கிராமத்தின் பல குடும்பங்கள் பொதுவுடைமைப் பாரம்பரியத்தில் வளர்ந்த குடும்பங்களாகும். 1967-72 கால கட்டத்தில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி வழிநடாத்திய சாதியத்திற்கும் தீண்டாமைகும் எதிரான போராட்டத்தில் போராளிகளையும் தியாகிகளையும் தந்த கிராமம் அதுவாகும். அதனாலேயே கவிஞன் சுபத்திரன் "எச்சாமம் வந்து / எதிரி நுழைந்தாலும் / நிச்சாமக் கண்கள் / நெருப்பெறிந்து நீறாக்கும்" "குச்சுக் குடிசைக்குள் / கொலுவிருக்கும் / கோபத்தை மெச்சுகிறேன் / சங்காணை மண்ணே உனக்கு வணக்கம்" என்று பாடிச் சென்றான். வரலாற்றில் பதிவு பெற்ற அக் கவிதைக்குரிய கிராமத்தின் புரட்சிகரப் பாரம்பரியத்தை முன்னெடுத்து வந்த தோழர்களில் தோழர் ராதாவும் ஒருவராக முன்னணியில் நின்றார். அதனால் தமிழ்த் தேசியவாத ஆயுத இயக்கங்களின் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்த போதும், இறுதிவரை உறுதியாக நின்ற தோழர்களில் தோழர் ராதாவும் ஒருவர்.

கட்சியின் உறுப்பினரான தோழர் சி. துரைசிங்கத்தையும் ஆதரவாளரான நண்பர் நடேசுவையும் புலிகள் இயக்கம் கடத்திச் சென்று கொன்றனர். அத்துடன் தோழர்கள் இராஜதுரை, தருமு, ராதா, மகாதேவன் (லிங்கம்) ஆகியோரைக் கூட்டிச் சென்று முகாம்களில் தடுத்து வைத்து சித்திரவதை செய்தனர். தோழர் ராதாவை இருபத்திரண்டு நாட்கள் தடுத்து வைத்துத் துன்புறுத்தினர். இத்தனைக்கும் மத்தியில் நமது தோழர்கள் எவ்வித விட்டுக்கொடுப்பும் இன்றிக் கம்யூனிஸ்ட்களுக்குரிய தமது நெஞ்சுரத்துடன் தமது கொள்கை நிலைப்பாட்டினை வெளிப்படுத்தினர். எதுவும் செய்ய முடியாத சூழலில் வெளியே மக்களின் எதிர்ப்புக் கோபாவேசத்தின் மத்தியில் அவர்களை விடுதலை செய்வதற்குப் புலிகள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். (தோழர் தருமு புளொட் இயக்கத்தினரால் கொண்டு செல்லப்பட்டுத் துன்புறுத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது).

இவ்வாறு ராணுவ ஒடுக்குமுறை ஒரு புறம் தமிழ்த் தேசியவாத ஆயுத இயக்கங்களின் ஜனநாயக மறுப்பும் அராஜகம் நிறைந்த அடக்குமுறைகளின் மத்தியில் தான் வடக்கு-கிழக்கில் எமது கட்சியும் தோழர்களும் தமது கொள்கைகளையும் வேலைமுறைகளையும் முன்னெடுத்து வந்துள்ளனர் என்பது இவ்வேளை நினைவூட்ட வேண்டியதாகும். 2005ம் ஆண்டு எமது கட்சியின் மேதின ஊர்வலத்தை அதற்கு முதல் நாள் புலிகள் தடைசெய்த போது, ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட இடத்தை மாற்றிக் கட்சி முன்னெடுத்த புரட்சிகர மேதின ஊர்வலத்தை நடத்துவதில் முன் நின்ற தோழர்களில் தோழர் ராதாவின் புரட்சிகர நிலைப்பாடு நினைவுகளில் நிலைத்தவற்றில் ஒன்றாகும். இவ்வாறு தோழர் ராதா போன்ற கட்சித் தோழர்கள் ஒவ் வொருவரும் முப்பது வருட காலத்தில் எவ்வாறு கட்சியையும் அதன் கொள்கை நிலையப்பாட்டையும் பாதுகாப்பதில் உறுதிகொண்டவர்களாக இருந்து வந்தார்கள் என்பது காண வேண்டியது ஒன்றாகும். தோழர் ராதாவின் மறைவுக்கு கட்சியினதும் புதிய பூமியினதும் புரட்சிகரச் சிவப்பு அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் குடும்பத்தினர், உறவினர்கள், கிராமத்தவா கள் அனைவருக்கும் தமது அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 34

யூ.என்.பியின் ஏழு கட்சிக் கூட்டரசாங்கத்திற்குள் இருந்து தமிழ் மொழி உரிமை பற்றியும் மாவட்ட சபை பற்றியும் எதையுமே சாதிக்க இயலாது என்பது தமிழ் அரசுக் கட்சிக்கும் மக்களால் தெரியப்படாமல் செனற் சபை மூலம் பாராளுமன்றத்திற்குட் கொண்டுவரப்பட்டு உள்ளூரா ட்சி அமைச்சராக்கப்பட்ட மு. திருச்செல்வத்திற்கும் 1967அளவில் தெட்டத்தெளிவாகி இருக்கும். அரசாங்கத்திலிரு ந்து விலகினாலும் அவர்களால் எதையும் சாதிக்க இயலாது என்பதும் அவர்களுக்குத் தெரியும். யூ.என்.பிக்கும் ஸ்ரீ.ல.சு. கட்சிக்கும் இடையே இருந்து வந்த சமநிலையான போட்டியைப் பயன்படுத்தி "இந்த நாட்டை ஆளுவது யார் என்பதைத் தமிழரே (அதாவது தமிழரசுக் கட்சியே) தீர்மானிப்பர்" என்று 1965ல் வாய் வீரம் பேசிய தமிழரசுக் கட்சியினருக்கு, ஒரு வேளை, யாரிந்த நாட்டை ஆளுவது என்பதைத் தீர்மானிக்க முடிந்தாலும், ஆளுகின்ற வர்களைக் கொண்டு தமிழ் மக்களுக்காக எதையுமே வென்றெடுக்க இயலாது என்பதை அவர்களுடைய கூட்டரசாங்க அனுபவம் உணர்த்தியிருக்க வேண்டும். ஆதை விடவும் இவ்விதமான வாய்வீர மெல்லாம் பேரினவாதத்தை வலுப்படுத்தும் என்ப தும் அவர்கள் அறியாததல்ல.

1968ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் தமிழரசுக் கட்சி அரசாங்கத்தில் இருந்து பிரிந்தது. ஆனாலும் தொடர்ந்தும் யூ.என்.பியின் தலைமையிலான அரசா ங்கத்திற்கு ஆதரவளித்து வந்தது. அவர்கள் விலக 'யதற்காகக் கூறப்பட்ட காரணம், திருகோணம லையின் திருக்கோணேஸ்வரத்தை புனித நகராகப் பிரகடனம் செய்யும் ஆலோசனையை அமைச்சரவை ஏற்கவில்லை என்பதுதான். ஆனால் உண்மையான பிரச்சினை, டட்லி–செல்வா ஒப்பந்தத்தின்படி மாவட்ட சபைகளை நிறுவ இயலாமை ஆகும். அதைப் பிரச்சினையாக்கினால் அதன் விளைவுகள் பாரதூரமா

இருந்தனர். எனவே தமிழரசுக் கட்சியின் கம்யூனிச விரோதம் அதன் வர்க்க நிலைப்பாட்டின் வெளிப்பாடு என்பதில் தமிழரசுக் கட்சியின் பிரமுகர்கள் ஐயத்திற்கு இடமளிக்கவில்லை. 1960க ளின் முற்பகுதியில் தோற்றுவிக்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் தொழி சங்கங்களில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் வலுவான ஒரு அமைப்பாக இருந்தாலும், தமிழ் அரசாங்க ஊழியர்களைப் பிற அரசாங்க ஊழியர்களிடம் இருந்து பிரித்ததற்கு அப்பால் அது எதனையும் சாதித்ததாக கூற இயலாது. புகழ் பெற்ற கோடீஸ்வரன் வழக்கு பிரித்தானிய பிரிவி கவுன்சிலினால் நிராகரிக்கப்பட்டதும் அது யூ.என். பியுடனான கூட்டர சாங்க காலத்திலேயே நடந்ததும் அதன்பின்பு எழுது வினைஞர் சங்கச் செயற்பாடுகள் தேய்ந்து போனதும். தமிழரசுக் கட்சியால்

தொழிலாளர் என்ற கண்ணோட்டத்தில் மட்டுமன்றி நடுத்தரவர்க்க தொழிற்சங்க நிலைப்பாட்டில் இருந்துங் கூடப் பரந்து பட்ட போராட்டங்களை முன்னெடுக்க இயலாமையையே சுட்டிக் காட்டியது.

சாதியத்திற்கு எதிரான போராட்டம் தமிழரசுக் கட்சியினதும் மூத்த தமிழ் தலைவர்கள் எனப்பட் டோரினதும் உயர் சாதியச் சிந்தனையை அப்பட்டமாக தோலுரித்துக் காட்டியமையும் ஒரு முக்கியமான அரசியல் வெற்றியாகும். பொது இடங்களில் வெளிப்படையாகச் சாதிப் பாகுபாடு காட்டுவதற்கு முடிவு கட்டுவதில் அந்தப் போராட்டம் பெரும் பங்களித்தது என்பது பலரும் அறிந்தது. எனினும் அப்போராட்டத்தின் தாக்கங்கள்

மாக்சிய லெனினியக் கமியூனிஸ்ட் கட்சி தென்னி லங்கையிற் சந்தித்த பின்னடைவுகள் தென்னிலங்கையில் ஒரு சில பிளவுகளை ஏற்படுத்தி அக் கட்சியைப் பலவீனப் படுத்திய போதும், ஒரு கட்சி என்ற முறையில் அது வலுவாகவே இருந்தது. தென்னிலங் கையில் ஒரு புரட்சிகர அரசியல் வேலைத்திட்டம் இல்லாமை அக் கட்சிக்கு ஒரு பலவீனமாக இருந்தது. எனினும் மலையகத்தில் முன்னெடுக்கப்பட்ட போராட்ட முனைப்புள்ள தொழிற்சங்க அரசியலும் தோட்டத் தொழிலாளர்களைப் பாட்டாளி வர்க்க அரசியலில் ஈடுபடுத்துகிற விதமான அரசியல் வேலை களும் மலையகத்தில் அக் கட்சியை வலுவாக வைத்திருந்தன. அதைவிட முக்கியமாக, வடக்கில் இளைஞர்கள் நடுவே மாக்சியம் பற்றிய அக்கறையும் மாக்சிய லெனினிய கம்யூனிஸ்ட்டுக்களின் கருத்துக்களை அறியும் விருப்பமும் வலுப்பெற்றன. எனினும் நாட்டில் ஒரு புரட்சிக்கான சூழல் இருக் கவில்லை. அவ்வாறு ஒன்று இருந்திருப்பினும் அதற்குத் தலைமை தாங்கி வழிநடத்தும் வல்லமை மாக்சிய லெனினியக் கம்யூனிஸ்ட்டுகளுக்கு இருந் ததாகக் கூற இயலாது.

உலகம் முழுவதும் ஏகாதிபத்திய எதிப்புப் போரா ட்ட அலை வலுவாக எழுந்த காலமாகவும் சீனாவில் பண்பாட்டுப் புரட்சி நிகழ்ந்துக் கொண்டிருந்த காலமாகவும் இலங்கையில் யூ.என்.பியின் பிற் போக்கு கூட்டரசாங்கம் பற்றிய அதிருப்தி வளர்ந் திருந்த காலமாகவும் 1960களின் பிற்பகுதி தன்னை அடையளப்படுத்தியது. அக் காலச் சூழலில் இடதுசாரி இயக்கம் நடந்துக் கொண்ட விதம் நாட்டின் முழு இடதுசாரி இயக்கத்துக்கும் பெரும் கேட்டுக்கு வழிகோலும் என்பதைப் பாராளுமன்ற இடதுசாரிகள் உணரவில்லை.

எப்படியாவது பாராளுமன்றத்தில் தமக்கான ஆசன ங்களை வென்றாக வேண்டும் என்பதிலேயே அவர் கள் குறியாக இருந்தனர். இச் சூழலிலேயே 1970ம் ஆண்டு பாராளுமன்றம் கலைக்கப்பட்டுப் பொதுத் தேர்தல் நடந்தது.

# இடதுசாரிகளுக்கு ஒரு சோதனைக் காலம்

னதாய் இருக்கும் என்பதால், அதைப் பற்றிப் பேசுவது தவிர்க்கப்பட்டது. ஏனெனில் மாவட்ட சபைகளை உருவாக்க மூன்று ஆண்டுகளாக என்ன செய்தார்கள் என்ற கேள்விக்கு முகம்கொடுக்க அவர்களுக்கு இயலாது. அது நடைமுறைக்கு வராது என்பதை ஒரு வருடத்துக்குள்ளேயே விளங்கிக்கொண்டிருக்க இயலும். எனினும், இடதுசாரி களிடமிருந்து தங்களை வலிந்து தனிமைப்படுத்திக் கொண்ட பிறகு, அவர்களுக்குத் திரும்புவதற்குத் திசையேதும் இருக்கவில்லை. மாறாக ஏகாதிபத்தியத்துடனும், தென் இலங்கையின் தரகு முதலாளியத்துடனும் தங்களை மேலும் நெருக்கமாக்கிக் கொண்டார்கள். அதன் பயனாக, யூ.என்.பியை விடத் தீவிரமாக வியற்னாம் போரில் அமெரிக்காவை ஆதரித்து நின்றனர். தமிழரிடையே சீன எதிர்ப்புணர்வை வளர்ப்பதிலும் கவனங்காட்டினர்.

தமிழரசுக் கட்சியின் சீன எதிரப்பிற்கும் வலதுசாரிப் போக்கிற்கும் வர்க்க நலன்களை விட வேறு நடை முறைக் காரணங்களும் இருந்தன. 1966ம் ஆண்டைத் தொடர்ந்து சாதியத் தீண்டாமைக்கு எதிரான வெகுஜன இயக்கம் வடக்கில் வேகமாக வளர்ச் சிபெற்று 1967 அளவில் பொது மக்களின் பரவலான ஆதரவைரப் பெற்றிருந்தது. அதன் செயற்பாடுகளும் வளர்ச்சியும் தமிழ் காங்கிரசிற்கும், தமிழரசுக் கட்சிக்கும் ஆதரவாக இருந்து வந்த வசதி படைத்த உயர் சாதிச் செல்வந்தர்கட்கும் பெருங் காணிச் செந்தகாரர்கட்கும் பழமைவாதிகட்கும் வெறுப்பூட்டியதில் வியப்பில்லை. வடக்கில் அப்போது தன்னை அந்த வர்க்கங்களின் முதன்மைப் பிரதிநிதி யாக வைத்திருந்த தமிழரசுக் கட்சி அப் போராட்டத்தை முறியடிப்பதற்கு அரசு இயந்திரத்தின் உத வியையும் நாட வேண்டியிருந்து. அப் போராட்டம் சீனச் சார்பினர் என்று சொல்லப்பட்ட மாக்சிய லெனி னியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் நடந்த மையால், தமிழரசுக் கட்சி சீனாவின் அன்றைய புரட்சிகர நிலைப்பாட்டடையும் சேர்த்து எதிர்க்க முற்பட்டது.

அதை விடவும் குடாநாட்டிற் சிறு தொழில்கள் தொடர்பான தொழிற் தகராறுகளை சண்முகதாசன் தொழி லாளர் சார்பாக இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் பிரதிநிதி என்ற வகையிலும் வழக்காடி வந்தார். முதலாளிமார் சார்பில் வழக் காடியோரில் தமிழரசுக் கட்சி வழக் கறிஞர்கள், (ஆலாலசுந்தரம் போன்றோர்) முக்கி யமானவர்களாக

வேறு பரிமாணங்களையும் கொண்டிருந்தன.

தென்னிலங்கையில் பேரினவாத அரசியலின் எழுச் சியும், அந்த பேரினவாத உணர்வைப் பயன்படு த்தி மாக்சிய லெனினியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்த விஜேவீர எடுத்த முயற்சியும் மேதினம்-வெசாக் முரண்பாடுகள் போன்ற பிரச்சினைகளும், சண்முகதாச னைத் தமிழர் என அடையாளப்படுத்தி தனிமைப்படுத்த பாராளுமன்ற வாத கம்யூனிஸ்ட் கட்சியினர் எடுத்த முயற்சியும் போன்ற பல காரணங்கள் மார்க்சிய லெனினிசக் கட்சியில் சில பாதிப்புகளை ஏற்படுத்தின.

தமிழ் அடையாளம் ஒன்று வலிந்து திணிக்கப்ப டுவதை தவிர்க்கும் முயற்சியில் சிங்களத் தோழர்கள் சிலருக்கு கட்சியில் தலைமைப் பொறுப்புகள் வழங்கப்பட்டன. முக்கியமாக மாக்சிய அரசியலில் ஆழமற்ற பிரேம்லால் குமாரசிரிக்கு வழங்கிய முக்கியத்துவம் குமாரசிரியின் தேசிய வாதப் போக்குக்களின் வெளிப்பாட்டால் முரண்பாடுகளை ஏற்படுத்தியது. அவர் கட்சியில் இருந்து விலகிச் சென்றார். இதுபோலவே கம்பஹா பாராளுமன்ற உறுப்பினராக இருந்த எஸ்.டி. பண்டாரநாயக்க கட்சியில் சேர்க்கப்பட்டு முக்கியமான ஒரு பேச்சாளராக அறிமுகமானார். அவரது பாராளுமன்ற அரசியற் பலவீனங்களை உரிய அளவில் கவனிப்புக்கு எடாமை பிற்காலத்தில் அவரும் பிரந்து செல்ல வழி செய்தது.

பாராளுமன்ற இடதுசாரிகளின் துரோகங்களுக்கி டையே மக்களைச் சந்தர்ப்பவாத அரசியலில் இருந்து மீட்டு வழி நடத்திச் செல்ல வாயப்பிருந்த இரண்டு அமைப்புகளான புரட்சிகர சமசமாஜ கட்சியும், மாக்சிய லெனினியக் கம்யூனிஸ்ட் கட்சியும் வெவ்வேறு காரணங்களுக்காகத் தென்னிலங்கையில் வலுவிழக்கத் தொடங்கின. முன்னையது புரட்சிகர சமசமாஜ கட்சி எனப்பட்டாலும் அதன் அரசியல் அணுகுமுறை தொழிற் சங்கப் போராட்டமும் பாராளுமன்றத் தேர்தலும் என்ற எல்லையைத் தாண்டவில்லை. அதன்பின்னால் அணித்திரண்ட ஒரே தொழிற்சங்க அமைப்பு முற்றிலும் நடுத்தர வர்க்கத் தனியார் ஊழியர்களின் அமைப்பாக இருந்தது. அக் கட்சியில் அடுத்தடுத்து ஏற்பட்ட பிளவுகளின் பயனாக அதனால் சமசமாஜ கட்சிக்கு ஒரு மாற்றாகவோ சவாலாகவோ அமைய இயலவில்லை.

## மறைந்த ஆ.சி.நடராஜாவிற்கு எமது அஞ்சலி!



**வடபுலம் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும் முற்போக்குச் சிந்தனை செயற்பாட்டாளரும் அதன் வழியிலான மக்கள் சேவையா ளருமான ஆ.சி.நடராசா கடந்த 23-11-2011 அன்று இயற்கை எய்தினார்.**

**குரும்ப சிட்சி யைச் சேர்ந்த ஆசிரியர் நடராசா இளமைக் காலம் முதல் மாக்சிசத்தால் ஈரக்கப் பட்டவரா கவும் அதன் காரணமாகத்தான் வாழ்ந்த சூழலில் தன்னால் முடிந்தாளவிற்கு சமூக சேவை மக்கள் நலன் நாடிப் பிணிபுரிதல் என்ப தனை இறுதிவரைப் முன்னெடுத்து வந்தவரா வார் கல்விப் புலத்திலும் சமூகத் தளத்திலும் தனது ஆற்றல்களைப் பயன்படுத்தி தன்னால் முடிந்தளவுக்கு பொதுப் பணியாற்றியமை நடராஜா அவை அவருக்குரிய அடையாளமாக இருப்பதையும் காணமுடிகிறது. அவருக்கு புதிய பூமி தனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.**

# அமெரிக்காவில் நூறு நகரங்களில்

# வோல் ஸ்ட்ரீட் முற்றுகைப் போராட்டம்

கொட்டும் பனியிலும் நியூயோர்க் (தெருவீதி) வோல் ஸ்ட்ரீட் திடலில் அமெரிக்க இளைஞர்களும் மக்களும் அவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்டு வரும் அநீதிகளுக்கு எதிராகத் தமது எதிர்ப்பை மிகவும் வலிமையாகக் காட்டிவருகின்றனர். இப்போராட்டத்தை மழுங்கடிக்கும் இறுதிகட்ட முயற்சியாக, அமெரிக்க அரசு என்றும் இல்லாதவாறு நவம்பர் மாதத்தின் நடுப்பகுதியிலேயே நத்தார் பண்டிகையை கோலாகலமாக கொண்டாட ஆரம்பித்துவிட்டது. வெளிநாடுகளில் இளைஞர்களது கனவு நாடாக வலியுத்தப்பட்டு வந்த அமெரிக்கா இன்று முக்கியமாக அந்நாட்டு இளைஞர்களுக்கு இழைத்துவரும் அநீ திகளை எதிர்த்து இளைஞர்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அமெரிக்கா தொடர்பான கனவில் இருக்கும் நமது இளைஞர்களுக்கான பாடத்தை அமெரிக்க இளைஞர்கள் இன்று வோல் ஸ்ட்ரீட் முற்றுகைப் போராட்டம் மூலம் வழங்கி கொண்டிருக்கின்றனர்.

அமெரிக்க முதலாளியத்தினதும் உலக முதலாளியத்தினதும் நெருக்கடியின் அண்மைக் கால உச்ச பிரதிபலிப்பாக வோல் ஸ்ட்ரீட் முற்றுகை போராட்டம் செம்டம்பர் 17ம் திகதி நியூயோர்க் நகரின் வோல் ஸ்ட்ரீட்டில் மையப்படுத்தி ஆரம்பிக்கப்பட்டு அமெரிக்காவின் 100 முக்கிய நகரங்களில் இடம்பெற்று வருகின்றன. வேறு நாடுகளின் பல நகரங்களில் (1300 நகரங்களில் என வோல் ஸ்ட்ரீட் முற்றுகையின் உத்தியோக பூர்வ இணையத்தளம் குறிப்பிடுகிறது) பெருவணிக நிறுவனங்களுக்கு சார்பான ஊடக நிறுவனங்களினால் இந்த போராட்டம் அடக்கிவாசித்தலுக்கும் இருட்டடிப்புகளுக்கும் உட்பட்ட போதும் இப்போராட்டம் வெளி ப்பட்டுள்ள அமெரிக்க முதலாளித்துவ பொருளாதாரத்தின் நெருக்கடியையும் மக்கள் அதன் மீது கொண்டுள்ள வெறுப்பையும் மறைக்க முடியாது போயுள்ளது.

அமெரிக்காவையும் உலகையும் ஆட்டுவிக்கும் பெருவணிக நிறுவனங்கள், வங்கிகளின், பங்குபரிவர்தனை நிலையம் என்பன நிலைபெற்றுள்ள இடமே வோல் ஸ்ட்ரீட். எனவே இது முதலாளித்துவத்தின் கருவறையில் இடம்பெறும் முற்றுகையாகவே கொள்ளப்படுகிறது. 1% பெருவணிக நிறுவனங்களையும் அதன் உடைமையாளர்களையும் எதிர்த்து பாதிக்க ப்படும் மக்கள் "நாம் ஏனைய 99%" என்ற அடிப்படையில் ஒன்றுமையான போராட்டத்தின் மூலம் தமது பலத்தை அமெரிக்க அரசிற்கும், பெருவணிக நிறுவனங்களுக்கும் காண்பித்து வருகின்றனர்.

வோல் ஸ்ட்ரீட் முற்றுகை போராட்டத்திற்கான அடிப்படைகளை விளங்க கீழ்வரும் அமெரிக்க அரசின் புள்ளிவிபரங்களே போதுமானதாகும். 1979-2009 ஆண்டுவரையான காலத்தில் 1% பெருமுதலாளிகள் 275% வருமான அதிகரிப்பை பெற்றுள்ள போதும், 60% மக்கள் 40% வருமான அதிகரிப்பையே இக்காலத்தில் பெற்றுள்ளனர்; 1% பெருமுதலாளிகள் அமெரிக்க மொத்த வருமானத்தின் 40% த்தை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கினறனர்; உயர் வருமானத்தை கொண்ட 400 வரி வழங்குனர்களின் வருமானம் 392% வளர்ச்சியடைந்து அரச வரிவிதிப்பு 37% குறைக்கப்பட்டுள்ளது. தொழிலில் இருந்து பணியாளர்கள் நீக்கம், புதிய வேலை வாய்ப்புகளின் வீழ்ச்சி, வீட்டு காப்புறுதி திட்டங்களின் கீழ் மக்களிடம் இருந்து வீடுகள் காப்புறுதி நிறுவனங்களினால் பறிக்கப்படல், சுகாதார செலவுகளின் வேகமாக அதிகரிப்பு, கடன் பெற்றும் மூன்றாம் நிலை கல்வியை (கல்லூரி மற்றும் பல்லைக்கழக கல்வி) மேற்கொள்ளமுடியாத மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, மிகவும் குறிப்பாக ஊதிய இடைவெளி (pay gap) அதாவது நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கும் சாதாரண உத்தியோகத்தர்களுக்கும் இடையிலான ஊதியத்தில் நிலவும் அசாதாரண இடைவெளி போன்ற காரணிகள் இப்போராட்டத்திற்கான நேரடிக் காரணிகளாக இருந்துள்ளன.

டியுனீசியா, எகிப்திய போராட்டங்களை தமக்கான முன்னோடியாகக் கருதும் பல்வேறு கருத்தியல் கொண்வர்கள் ஒற்றுமையாக பங்கு கொள்வதுடன், இன, பால், மத வேறுபாடுகள் இன்றி அனைவரும் தமது பொது எதிரியாக பெருவணிக நிறுவனங்களை அடையாளம் கண்டுள்ளமையை அவர்களின் போரட்டங்களில் இருந்து காண முடிகின்ற சிறப்பம்சமாகும்.

முதலாளித்துவத்தின் கருவறையை முற்றுகையிட்டுள்ள இந்த போராட்டத்தை முறியடிப்பதற்கு பெருவணிக நிறுவனங்களும் அதற்கு சார்பான ஊடக நிறுவனங்களும் பல முனைத் தந்திரோபாயங்களை வகுத்து முயற்சி எடுத்து வருகின்றன. இதற்காக போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் திட்டமிட்ட நடவடிக்கைளை அவைகள் முடக்கிவிட்டுள்ளன. Fax News, CNN, New York Times போன்ற ஊடகங்கள் இதில் குறிப்பிடத்தன.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இப்போராட்டத்தை "நம்முடைய நிதியியல் அமைப்புமுறை இயங்கும் விதம் குறித்து மிகவும் பரந்தளவில் ஏற்பட்டுள்ள விரக்திக்கு அவர்கள் குரல் கொடுத்து வருகின்றனர்" என கூறி போராட்டதை திசை திருப்புவதும் நிலைபெற்றுள்ள கட்டமைப்பை பேணுவதும் என உபாயத்தை அரங்கேற்றியுள்ளார். போராட்டத்தில் ஈடுபடுபவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஜனநாயக கட்சி சார்பானவர்களாக இருக்கின்ற நிலையில் ஒபாமாவின் இந்நடவடிக்கைகள் முக்கியத்துவமிக்கதாகின்றன.

பெருவணிக நிறுவனங்களுடனான தனது உறவின் பிடியை விட்டுக்கொடுப்பின்றி பலப்படுத்துவதை அரசு தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் அரச இயந்திரம் படிப்படியாகப் போராட்டக்காரர்களுக்கு எதிரான தமது வன்மத்தை கூர்மைப்படுத்தத் தொடங்கியுள்ளது. கலிபோனிய மாநிலத்தின் ஒக்லண்ட் பிரதேசத்தில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸ் நடத்திய விதம் இதற்கான சமிக்ஞையை வழங்கியதோடு வோல் ஸ்ட்ரீட் பிரதேசத்தில் நிவ்யோர்க் மாநகர ஆட்சி பொலிசாருடனும் காடையர்களையும் பயன்படுத்தி போராட்டக்காரர்களை கலைக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. அத்தோடு இந்த போராட்டத்தில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் வழிமுறையாக தனது பழைய சூத்திரமான தனக்கு எதிரான நாடுகள் என அமெரிக்கா கருதும் நாடுகளுக்கு எதிராகப் போர் தொடுக்க நடவடிக்கையை அமெரிக்க எடுத்து வருகிறது. ஈரான் மீதான அண்மைய நெருக்கடிகள் இதனை வெளிப்படுத்தியுள்ளன. அமெரிக்கா ஏனைய நாடுகள் மீது போர் தொடுத்தல் என்பது பெருவணிக நிறுவனங்களின் குறிப்பாக ஆயுத உற்பத்தி நிறுவனங்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது என்றும் அமெரிக்கா எந்த நாட்டின் மீதும் போர் தொடுக்க கூடாது என்றும் வோல் ஸ்ட்ரீட் போராட்டக்காரர்கள் தெரிவித்து வருகின்றமை இங்கு கவனிக்கத்தக்கது.

இப்போராட்டம் பெற்றுள்ள பெறப்போகும் வெற்றிகள் தொடர்பான சந்தேகங்களுக்கு அப்பால் இந்தப் போராட்டம் அமெரிக்கவின் ஊடாக உலகத்திற்கு காட்டப்பட்டு வந்த முதலாளிய பொருளாதார முறைமையின் கோர முகத்தை மீண்டும் ஒரு முறை விறைப்பாக வெளிப்படுத்தியுள்ளதுடன் நீதியற்ற முதலாளித்துவத்திற்கு எதிரான பலமான மக்கள் எதிர்ப்பை அமெரிக்காவிலும் உலகில் பல முதலாளித்துமைய நகரங்களிலும் ஏற்படுத்துவதற்கு இப்போராட்டத்திற்கு முடிந்துள்ளது. குறிப்பாக, "பலஸ்தீனத்தில் வீடின்றி இருப்பவர்களும் நாங்களும் ஒன்றே, நாம் அனைவரும் பலஸ்தீனர்கள் தான்" என அமெரிக்க மக்களை ஏனைய ஒடுக்கப்பட்ட மக்களையும் தம்மையும் ஒத்தவர்களாகப் பார்க்கும் சூழ்நிலையை அமெரிக்காவிலும் எனைய நாடுகளிலும் ஏற்படுத்தி இருக்கின்றமையும் வோல் ஸ்ட்ரீட் போராட்டத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

பொருள் உற்பத்தியானது, சுதந்திமாக ஒன்றிணைந்து செயற்படும் மனிதர்களுடைய உற்பத்தியாகக் கருதப்பட்டு, அவர்களால் தீர்மானமான திட்டத்திற்கேற்ப நடத்தப்படாதவரை, பொருளுற்பத்தி முறையின் அடிப்படையில் அமைந்த சமூக வாழ்வியக்கம் அதன் புதிர்வாய்ந்த முகத்திரையைக் களையாது." **எஸ். மார்க்ஸ்**

## 3வது சர்வதேச ஏகாதிபத்திய எதிர்ப்பு டாக்கா மாநாட்டில் புதிய - ஜனநாயக மாக்சிச - லெனினிசக் கட்சி




**கடந்த நவம்பர் 2011 27ம், 28ம், 29ம், திகதிகளின் பங்காளதேஷ் தலைநகர் டாக்காவில் 3வது சர்வதேச ஏகாதிபத்திய எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 700 பிரதிநிதிகளும் பார்வையாளர்களும் மாநாட்டில் பங்கேற்றனர். இவர்களில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மாக்சிச லெனினிசக் கட்சிகள் ஏகாதிபத்திய எதிர்ப்பு அமைப்புகள் கலந்து கொண்டன. இலங்கையில் இருந்து புதிய - ஜனநாயக மாச்சிச-லெனினிசக் கட்சியின் பிரதிநிதியாக அதன் சர்வதேச அமைப்பாளர் தோழர். இ.தம்பையா கலந்து கொண்டார். மாநாட்டுத் தொடரின் 29ம் திகதி "ஏகாதிபத்தியத்தின் அரசியல் இராணுவத் தாக்குதல்" என்னும் தொனிப் பொருளில் இடம் பெற்ற அமர்வின் தலைமைக்குழுவில் பங்கேற்று தோழர் இ.தம்பையா உரையாற்றினார். அவ் உரையின் சுருக்கம் அடுத்த இதழில் வெளிவரும்.**

மாகவே நடைபெற்றன. தனது வளவின் பனை ஒன்றைப் புலிகளின் அனுமதி இன்றித் தனது தேவைக்காக தறித்த ஒருவரும் அவ்வாறே தனது வேப்பமரத்தை தறித்த ஒருவரும் பல வாரங்களாகப் புலிகளின் பங்கர்களில் அடைத்து வைக்கப்பட்டமை அன்றைய நிகழ்வுகள். இவை யாவும் தமிழீழ விடுதலையின் பெயரால் ஆயுத அதிகார பலத்துடன் மக்கள் மீது புலிகள் இயக்கம் மேற்கொண்டு வந்த அராஜகச் செயற்பாடுகளாகும். தேசியவாதம் வலதுசாரிப் பாதையில் பயணித்து இறுதியில் ஃபாசிச நடைமுறைவழியில் தன்னை வெளிப்படுத்துவதற்குப் புலிகளின் செயற்பாடுகள் நடைமுறை உதாரணங்களாக அமைந்தன. இவற்றைப் புலிகளின் ஆதரவாளர்களும் பிரசார ஊடகங்களும் நியாயப்படுத்தி வந்தன. அதேவிதமான அராஜகச் செயற்பாடுகள் ஏனைய தமிழ் ஆயுத இயக்கங்களால் முன்னெடுக்கப்பட்டபோது புலிகள் இயக்க ஆதரவாளர்களும் பிரசார ஊடகங்களும் அவற்றையிட்டுக் குய்யோ முறையோ எனக் கூக்குரல் வைத்தன. அக்காலத்தில் பெரிசுகள் (புலிகள்) செய்தால் அதில் ஏதொ ஒரு நியாயம் இருப்பதாகவும் ஏனைய இயக்கத்தவர்கள் செய்தால் அதில் நியாயம் இல்லாததாகவும் பிரசாரங்கள் இடம்பெற்றன. அதிலும் ஆதிக்கக் கருத்திலேயே முன்னின்றது. அதனால், ஜனநாயத்தை விரும்பிய மக்கள் மௌனித்து நிற்க வேண்டியதாயிற்று.

அக் காலப் பகுதியில் புலிகள் இயக்கம் தனது சொந்த நீதிமன்றங்களையும் அவற்றுக்கான சட்டங்களையும் நீதியர்களையும் சட்டத்தரணிகளையும் உருவாக்கிக் கொண்டது. தலைவர் பிராபகரனுக்கும் தமிழீழத்திற்கும் விசுவாசமாகச் சத்தியப்பிரமாணம் செய்துக் கொண்டவர்கள் இந் நீதிமன்றங்களில் வாதாடியும் நீதி வழங்கியும் வந்தனர். அதே வேளை கிளிநொச்சியைத் தமது நிர்வாகத் தலைநகராக ஆக்கியதுடன் வர்த்தக மையம் போன்றவற்றை நிறுவி அவ ற்றை விஸ்தரித்தும் வந்தனர். ஏற்கனவே சுய உற்பத்தி, சுய பொருளாதாரம் எனக்கூறி பொருண்மியத்துறையினை உரு வாக்கி விஸ்தரித்து வந்த புலிகள் இயக்கம், இக் காலப் பகுதியில் உலகமயமாதலின் கீழான வர்த்தக செயற்பாடுகளுக்குள் இயங்கியது. குரக்கன் சாமி விதைத்து சுய உணவுதேடுமாறு பணித்தவர்கள் கொக்கா கோலா வியாபாரத்தின் மொத்த வியாபாரத்தையும் தமதாக்கிக் கொண்டனர். இது அன்று இடம் பெற்றவற்றின் சிறு உதாரண மேயாகும். தனியரசிற்கான தோற்றப்ப ட்டைப் பெரும்பாலான மக்களுக்கு வழங்கவும் இவை உதவின.

அதே வேளை, அரசியல் இராஜதந்திர வழிகளிலும் இராணுவ பலத்தை விஸ்தரித்தும் புலிகளுக்கு எதிரான தமது நிலைப்பாட்டைப் வலுப்படுத்துவதில் இலங்கை அரசாங்கமும் இராணுவமும் முனைப்புக்காட்டி வந்தன. அத்துடன் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் எனக்கூறி அவ்வப்போது முன்மொழிவுகளும் திட்டங்களும் முன்வைக்கப்பட்டும் வந்தன. ஆனால் அவற்றில் எதுவும் நடைமுறைக்கு வந்ததில்லை. வெறும் ஏட்டளவிலும் பேச் சுவார்த்தை என்ற அர்த்தமற்ற சந்திப்புகளினூடும் அவை இழுபட்டுச் சென்றன. இதனால் தமிழ் மக்கள் ஏமாற்ற மடைந்து வந்ததுடன் புலிகள் இயக்கம் முன்வைத்த நியாயங்களை கணிசமான அளவு மக்கள் நம்பி ஏற்றுக் கொள்ளவும் செய்தனர். அவை பற்றி அடுத்து நோக்குவோம்.

# உலக முதலாளித்துவத்தின் உச்ச நெருக்கடி

# மக்களின் ஆவேச எழுச்சி

செப்ற்றெம்பர் மாத நடுப்பகுதியில் "வால் ஸ்ட்ரீட்டை முற்றுகையிடுங்கள்" என்ற முழக்கத்துடன் ஆரம்பித்த ஆர்ப்பாட்டங்கள் இன்று பல்வேறு முதலாளித்துவ நாடுகளின் பங்குச் சந்தை மையங்களில் இடம்பெற்று வருகின்றன. ஆரம்பத்தில் அவற்றைக் குறிக்கப் பல்வேறு சொற்பிரயோகங்கள் பயன்படுத்தப்பட்டாலும் தற்போது "முதலாளித்துவ எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்" எனறே ஊடகங்கள் கூறுகின்றன. அந்த அளவில் ஊடகங்கள் உண்மையை ஓரளவுக்குத் தானும் எற்றுக் கொண்டிருப்பதை உலகம் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால் அமெரிக்காவும் அதன் முதலாளித்துவ ஊடகங்களும் அதைப் பெருமளவிற்கு அடக்கி வாசிப்பதிலேயே குறியாக இருந்து வருகின்றன.

முதலாளித்துவ நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை "நிதி நெருக்கடி" என்ற சொற்களுள் அடக்கி உலக மக்களுக்கு தவறான விளக்கத்தைக் கொடுக்க ஊடகங்கள் முனைகின்றன. இந்த நாடுகளில் நிலவும் முதலாளித்துவ அமைப்பு பெரும் நெருக்கடிக்குள்ளாகி இருக்கின்றதென்ற உண்மையை மூடிமறைக்க முதலாளித்துவ ஊடகங்கள் முனைகின்றன.

அமெரிக்காவின் வால் ஸ்ட்ரீற் (Wall Street) லண்டனில் சென் போல் தேவாலய வளாகம் போன்ற இடங்களில் கொட்டும் பனியிலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு முதலாளித்துவ அமைப்புக்கு எதிராக முழக்கமிட்டு வருகின்றனர். வங்கியாளர்களைத் தூக்கிலிடுமாறும் பெரிய நிறுவனங்களின் இயக்குனர்கள் சிக்கனத்தை கடைப்பிடிக்காமையைச் சுட்டிக்காட்டியும் முழக்கமிடுகின்றனர்.

பெரிய இராட்சதக் கம்பனிகளின் இயக்குனர்களுக்கு 49% ஊதிய அதிகரிப்பும் இலட்சக் கணக்கில் போனஸூம் வழங்கப்பட்டுள்ளமையை அம்பலப்படுத்தும் பதாகைகளுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் காணப்படுகின்றனர்.

லண்டனில் பிரபல்யம் வாய்ந்த சென் போல் தேவாலயம் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக ஒரு வாரம் மூடப்பட்டிருந்தது. இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின் இத் தேவாலயம் மூடப்பட்டது இதுவே முதற் தடவையாகும். தேவாலய வளாகத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களை அப்புறப்படுத்த லண்டன் நகரக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அறிவித்திருந்தது. தேவாலய நிர்வாகமும் ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்றச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் பட்சத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களைப் பலாத்காரமாக அப்புறப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்பதை உணர்ந்த தேவாலய நிர்வாகம் சட்ட நடவடிக்கை எடுப்பதில்லை என்று பின்னர் தீர்மானித்துள்ளது. தேவாலய நிர்வாகத்தில் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன.

லண்டன் ஆயர் (பிஷப்) கலாநிதி ரிச்சட் சாட்டர்ஸ் சட்ட நடவடிக்கையை எடுப்பது "உகந்தது" என்று கூறியிருந்தார். சில நாட்கள் கடந்த பின்னர் அவர் குத்துக்கரணமடித்துத் தனது முன்னைய நிலையிலிருந்து மாறுபட்ட கருத்தை வெளியிட்டார். அவர் கூறியது:-

"உலகமெங்கும் அபாய மணி ஓசை எழுப்பப்படுகிறது. சேன ் போல் தேவாலயத்திலும் அந்த அபாய ஓசை கேட்கிறது. தேவாலய வளாகத்தில் முகாமிட்டுள்ள மக்களின் மட்டுமல்ல. உலகமெங்கும் உள்ள மக்களின் பிரச்சி னையை கருத்திற் கொண்டே சட்ட நடவடிக்கை மூலம் ஆர்ப்பாட்டக்காரரை அப்புறப்படுத்துவதில்லை என்ற தீர்மா னத்திற்கு வந்தோம்".

சென் போல் தேவாலய முன்றலில் ஆர்ப்பாட்டங்கள் ஆரம்ப மானதன் பின் முதற் தடவையாகக் கருத்துத் தெரிவித்த கன்ற்றபரிப் பேராயர் (Archbishop of Chanterbury) கலா நிதி றோவன் வில்லியம்ஸ் லண்டன் பினான்சியல் ர்றைம்ஸ் பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையில் "பெரு நிதி நிறு வனங்களின் பிரமுகர்கள் தொடர்பாக சவால்விடும் நேரம் வந்துவிட்டது" என்று அவர் கூறியிருந்தார். அவர் மேலும் கூறியதாவது:-

"நிதி நிறுவனங்கள் மீது ஆழ்ந்த எதிர்ப்பைத் தெரிவிக்கும் வரையில் 'எதிர்பாராத அளவு பெருந் தொகையான மக்கள்' ஆர்ப்பாட்டத்தில ஈடுபட்டுள்ளதைக் காணமுடிகின்றது. சரியோ பிழையோ. வங்கியாளர்களின் பொறுப்பற்ற நடவடிக் கைகளால் முழுச் சமுதாயமும் பாதிக்கப்பட்டுள்ளது என்ற உணர்வு பாரிய அளவில் ஏற்பட்டுள்ளது. இச் செய்தியை அவர்கள் உணர்ந்துள்ளதாகத் தெரியவில்லை".

மேலும் அவர். "நிதி நிறுவன இயக்குனர்கள் வழமை போல் அதிகரித்த போனஸ் மூலம் சம்பள அதிகரிப்பைப் பெறுகின்றனர். அவர்களின் நடவடிக்கைகளில் சிறு மாற்றமும் தெரியவில்லை" என்கிறார்.

,இச் சந்தர்ப்பத்தில் கிரேக்கத்தின் கடன் பழுவை நீக்க மீட்பு நிதி வழங்க ஐரோப்பிய யூனியன் இருபத்தொரு மாதங்களில் பதினொரு உச்சி மாநாடுகளை நடாத்திக் கிரேக்கத்தின் கடன் தொகையான 35,000 கோடி யூரோவின் அரைவாசி தொகையை ரத்துச் செய்வதென்றும் (அதாவது அறவிட முடியாக் கடன் என பதிவளித்தல்) 13,000 கோடி யூரோவை மீட்பு நிதியாக வழங்குவதென்றும் தீர்மானித்த நிலையில் கிரேக்கப் பிரதமர் மக்கள் அங்கீகாரத்துடனே மீட்பு நிதியைப் பெறப் போவதாக அறிவித்துள்ளார். கிரேக்க மக்கள் வாக்கெடுப்பில் "ஆம்" என்று கூறாது போனால் கிரேக்கம் ஐரோப்பிய சமூகத்திலிருந்து வெளியேற வேண்டும் என ஜேர்மனியின் அதிபர் எச்சரித்துள்ளார்.

மீட்பு நிதி கிரேக்கத்திற்கு தாம்பூலத்தில் வைத்து வழங்கப்படவில்லை. அதோடு சேர்ந்து கிரேக்கத்தில் சிக்கன நடவடிக்கையால் கிரேக்க மக்கள் பெரும் ஆவேசம் கொண்டுள்ள நிலையில் இரண்டு ஆசனங்களையே பெரும்பான்மையைக் கொண்ட கட்சிக்குள்ளேயே நெருக்கடிக்குள்ளாகி இருக்கும் பிரதமர் அபிப்பிராய வாக்கெடுப்பிற்கு விட்டுள்ளார். கடன் பெறும் நாட்டிற்கு இத்தனை திமிரா என ஐரோப்பிய சமூகம் (குறிப்பாக ஜேர்மனியும் பிரான்சும்) சினக்கின்றன.

300 ஆசனங்கள் கொண்ட கிரேக்க பாராளுமன்றத்தில் கிரேக்க (திரிபுவாத) கம்யூனிஸ்ட் கட்சி 22 ஆசனங்களையும் இடதுசாரிக் கூட்டமைப்பு 13 ஆசனங்களையும் கொண்டுள்ளன. "புதிய ஜனநாயகம்" என்ற வலதுசாரிக் கட்சி 91 ஆசனங்களைக் கொண்டுள்ளது.

கிரேக்கத்தில் பொருளாதார நிலை பற்றி அண்மையில் வெளியிடப்பட்டுள்ள தகவல்கள் பின்வருமாறு: கிரேக்கத்தில் வரிகொடுக்காமல் புழக்கத்தில் உள்ள பணம் மூவாயிரம் கோடி (30,000,000,000) யூரோவாகும். பாராளுமன் றக் குடியரசு எனப்படும் அந்நாட்டின் சனத்தொகை ஒரு கோடி ஏழு இலட்சத்து அறுபதாயிரம். அங்கு வேலையி ல்லாதோர் 17.6 சதவீதம். இது ஐரோப்பிய யூனியனில் இரண்டாவது அதி கூடிய தொகையாகும். இளைஞர் வேலையின்மை 42.9 சதவீதம். இவை யாவும் 2011ம் ஆண்டிற்கான தகவல்கள்.

பின்வரும் சிக்கன நடிவடிக்கைகள் உத்தேசிக்கப்பட்டுள்ளன.

- பொது ஊழியர்களின் (அரசாங்க ஊழியர்களின்) வேதனத்தில் இருபது சதவீதக் குறைப்பு. முப்பதாயிரம் நிர்வாக அலுவலர்கள் 2011இன் முடிவில் குறைக்கப்பட்ட சம்பளத்துடன் வேலையிலிருந்து இடை நிறுத்தப்படுவர்.
- 1976 பாடசாலைகள் மூடப்பட அல்லது வேறு பாடசாலைகளுடன் இணைக்கப்படவுள்ளன.
- மாதாந்தம் ஆயிரம் யூரோவுக்கு மேலாக ஓய்வூதியம் பெறுபவர்களின் ஓய்வூதியத்தில் இருபது சதவீதக் குறைப்பு மேற்கொள்ளப்படும்.
- 55 வயதுக்கு கீழுள்ளவர்கள் இளைப்பாறும் போது 40 சதவீத இளைப்பாற்று ஊதிய இழப்பை எதிர்கொள்ள வேண்டும்.
- இவ் வருடத்தில் இளைப்பாறும் அரசாங்க நிர்வாக உத்தியோகத்தரில் பத்துப் பேரிடத்திற்கு ஒருவர் மட்டுமே புதிதாக நியமனம் பெறுவார்.
- பெறுமதிசேர் வரி தற்போதுள்ள 19 சதவீதத்திலிருந்து 23 சதவீதமாக உயரும். எனவே பண்டங்களின் விலை மேலும் அதிகரிக்கும்.
- தற்போது 12000 யூரோ வருட வருமானம் பெறுபவர் வரி செலுத்த வேண்டியதில்லை. இந்த எல்லை குறைக்கப்பட்டு. 5000 யூரோவுக்கு மேல் வருமானம் பெறும் அனைவரும் வருமானவரி செலுத்த வேண்டும். பெறுமதிசேர் வரியான வற் வரியால் பண்டங்களின் விலை அதிகரிப்பபோடு கிரேக்க மக்கள் பாரிய பள்ளத்தில் தள்ளப்பட்டுள்ளனர்.

கிரேக்கத்தையடுத்து இத்தாலி பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்குகின்றது. பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் நாடுகளின் பட்டியல் நீண்டு கொண்டு செல்லவுள்ளது. அயர்லாந்து. ஸ்பெயின். போத்துக்கல் என்பன அடுத்து வரவுள்ளன.

முதலாளித்துவ பொருளாதார நெருக்கடிகள் காலத்துக்குக் காலம் உலகில் இடம்பெற்று வந்துள்ளன. பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு யுத்தமே ஒரே வழியென முதலாளித்துவ அமைப்பு அவ்வப்போது அதில் ஈடுபட்டும் வந்துள்ளது. பாரிய பொருளாதார நெருக்கடியை முதலாளித்துவம் எதிர்கொண்ட போது முதலாம் இரண்டாம் உலக யுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இது முதலாளித்துவத்தின் எழுதப்படாத விதியாகும். இதனை மாக்ஸ் முதலாளித்துவத்தின் இயல்பும் வளர்ச்சியும் பற்றிக் கூறும்போது தெளிவுபட எடுத்து விளக்கினார். அதனை பின்பு தோழர் லெனின் முதலாளித்துவத்தின் வளர்ச்சியை விவரித்து அதனை ஏகாதிபத்தியமாகக் கண்டார். முதலாளித்துவ நாடுகள் தங்களுக்கிடையிலான போட்டியின் காரணமாக யுத்தத்தில் ஈடுபடுகின்றன என்றார். அதனாலேயே அவருக்குப் பின்வந்த தோழர் ஸ்டாலின் ஏகாதிபத்தியம் யுத்தத்திலும் இரத்தத்திலும் உயிர் வாழ்கிறது எனக் கூறினார

இராக்கையும் ஆப்கானிஸ்தானையும் லிபியாவையுந் தொடர்ந்து அடுத்ததாக ஈரான் மீது தாக்குதல் நடாத்தத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. முதலாளித்துவ ஏகாதிப த்தியவாதிகள் தங்களுக்கான புதை குழியைத் தாங்களே தோண்டுபவர்கள். ஒரு எரிமலை மீது அமர்ந்துள்ள முதலாளித்துவ அமைப்பு அது எப்போது தீப்பிழம்புகளைக் கக்குமோ என எதிர்பார்த்திருக்கவே முடிகிறது. முதலாளித்துவம் அதன் வளரச்சியான ஏகாதிபத்தியம் பற்றி படிக்க விரும்பும் எவரும் தற்போதைய நெருக்கடியின் அடிப்படைகளை மாக்சிச லெனினிசக் கோட்பாட்டு ஒளியில் கற்றுக் கொள்வது பயன் மிக்கதாகும்.

(இக் கட்டுரை நவம்பர் 3இல் எழுதப்பட்டதாகும். அதன் பின்பு. கிரேக்க "சோஷலிசப்" பிரதமர் பதவிவிலகிப் புதிய கூட்டரசாங்கம் பதவியேற்றுள்ளது. சொல்லப்பட்ட வாக்கெடுப்பு நடைபெறாமலே சிக்கன நடிவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.)

"**கம்யூனிசத்தின்** தோல்வி மேற்கத்தைய தாராளமய, ஜனநாக முதலாளித்துவத்தில் எல்லாமே நன்றாக இருக்கிறதென்று அர்த்தப்படாது. தற்போதைய சமூக அமைப்பை விமர்சனம் செய்வதற்குகந்த மிகக் கூர்மையான கருவிகளை கார்ல் மார்க்ஸ் இன்னமும் நமக்குத் தந்துதவிக் கொண்டிருக்கிறார். இன்றைய முதலாளித்துவ எதிர்ப்பு இயக்கத்தின் பாட்டனாக மார்க்ஸை எம்மால் நினைக்க முடியும். அவரின் பெரிய கோட்பாடுகள் நனவாக்கப்படவில்லை. ஆய்வறிவு மரபில் இருக்ககூடிய அதி ஆற்றல் கொண்டதும் செல்வாக்குடையதுமான படைப்புகளுள் அவரின் எழுத்துக்கள் அடங்கும். சரியோ, பிழையோ அவை மதித்துப் பாராட்டப்பட வேண்டியவையாகும். உண்மை யானதும் எழுச்சியூட்டுவதுமான பல விடயங்களை மாக்ஸ் கூறியிருக்கிறார். அவருடைய படைப்புகள் நுண்ணறிவுத் திறனுடையவையாகவும் அறிவொளியூ ட்டுபவையாகவும் இருக்கின்றன. முதலாளித்துவத்தின் மிகவும் ஆழமான, கூர்மையான விமர்சகராக மாக்ஸ் விளங்குகிறார். இன்றைய முதலாளித்துவத்தை விமர் சிக்கவும் அவருடைய கருவிகள் பயனுடையனவாகவே விளங்குகின்றன. முதலாளித்துவ சமுதாயத்தில் உள்ள பிரச்சினைகளுக்கு மார்க்ஸ் முன்வைத்திருக்ககூடிய தீர்வுகளில் எமக்கு நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். அதனால் அப் பிரச்சினைகள் இல்லாமற் போய்விடுவதாக அர்த்தப்பட்டுவிடாது."

)மேற்கூப்பட்டவை, சில வருடங்கள் முன்னர் லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரி மெய்யியல் பேராசிரியர் ஜொனதன் வூல்.'.வ் (*Jonathan Wolff*) எழுதி ஒக்ஸ்.'. போர்ட் பல்கலைக்கழக அச்சக வெளியீடாக வெளிவந்த "மார்க்ஸை ஏன் படிக்க வேண்டும்?" (*Why Read Marx theory*) என்ற நூலின் முகவுரையிலுள்ள வாசகங்களாகும்.)

# முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளும் தலைமைகளின் இயலாமைகளும்



நாம் இலங்கையில் இஸ்லாத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு தேசிய இனமாக வாழ்ந்து வருகின்றோம். சிங்கள, தமிழ், மலையக தமிழ்த் தேசிய இனங்கள் போல நமக்கான தேசிய இனத் தனித்துவங்களுடன் வாழ்ந்து வருகின்றோம். இஸ்லாமிய மார்க்கத்தை முதன்மைப்படுத்திய வாழ்வு முறையின் கீழ் நமது பொருளாதார அரசியல் சமூகப் பண்பாட்டுத் துறைகளில் வழிநடந்து வருகின்றோம். அதில் ஏனைய தேசிய இன மக்களோடு இணைந்து செயலாற்றி வந்த வரலாறே எமது வரலாறாகும். எமது தாய் மொழியாகத் தமிழே நீடித்து வந்திருக்கிறது. இஸ்லாமியத் தமிழ் இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் நம்மவர்களால் வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது. மதத்தாலும் மதப் பண்பாட்டாலும் வேறுபட்ட தனித்துவ அடையாளங்களைக் கொண்டிருந்த அதேவேளை, மொழியாலும் வாழும் பிரதேசங்களாலும் தமிழ் மக்களுடனான நமது உறவும் பிணைப்பும் வலுவானவை. தலைநகரிலும் தென்னிலங்கையிலும் சிங்கள மக்களோடு வாழ்ந்து வருகின்றமை அவர்களுடனான பிணைப்பைக் கொண்டிருக்கிறது. அங்கு கூடத் தாய் மொழியாகத் தமிழே சமூக உறவுகளிலும் அன்றாட வாழ்விலும் கலந்து நிற்கிறது. இஸ்லாம் எவ்வளவிற்குச் சமூக சமத்துவத்தை போதித்த போதிலும் நம் மக்களின் வாழ்வில் ஏற்றத்தாழ்வுகளும் சமத்துவமின்மையும் நிறையவே இருந்து வருகின்றன. அவற்றுக்கான பொருளாதார, அரசியல், சமூக, பண்பாட்டுக் காரணங்களை வரலாற்று வளர்ச்சியினூடாக நோக்குவது அவசியம்.

நிற்க. முஸ்லிம் மக்கள் இன்றைய சமகாலச் சூழலில் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர் கொண்டவர்களாக இருக்கின்றனர். தேசிய இனப்பிரச்சினையால் விளைந்து, முப்பது வருடங்களாக நடந்த யுத்தத்தில் முஸ்லிமகள் பல விதங்களிலும் பாதிக்கப் பட்டார்கள். உயிரிழப் புகளையும் இடப்பெயரவுககளையும் சொத்தழிவுகளையும் தொழில் இழப்புக்களையும் அனுபவித்தார்கள். வடக்குக் கிழக்கிலே வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்களே முக்கியமாக அவற்றுக்கு இலக்காகினர். இராணுவப் பக்கத்தாலும் அதனை விட அதிகமாக ஆயுதமேந்திய தமிழ் இளைஞர் இயக்கங்களாலும் அவர்கள் கடும் பாதிப்புக்களைப் பெற்றனர். கிழக்கில் அவ்வப்போதான படுகொலைகளுக்கு முஸ்லிம் மக்கள் ஆளாகிய அதேவேளை, வடக்கின் சகல மாவட்டங்களில் இருந்தும் புலிகள் இயக்கத்தினால் பாரிய இடப்பெயர்விற்கு உள்ளாகினர். இதனால் தமது பாரம்பரியத் தாயகத்தையும் வீடுவாசல்களையும் சொத்துக்களையும் தொழில்களையும் கைவிடும்படி கட்டாயப்படுத்தப்பட்ட அவல நிலையில் இடம்பெயர்ந்து தூர இடங்களில் அகதிகளாகி நிர்க்கதிக்கு ஆளாகினர். 1990 ஒக்டோபரில் புலிகள் இயக்கம் முஸ்லிம் மக்களுக்கு எதிராக இழைத்த கொடுமை வரலாற்றில் என்றும் மறக்க முடியாதது.

இப்பொழுது யுத்தம் முடிந்து வடக்கு கிழக்கில் அரசாங்க ஆட்சி நடக்கிறது. தமிழ் மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அவற்றைப்பற்றி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அடிக்கடி பேசப்படுகிறது. அது நியாயமானதே. ஆனால் வடக்கு கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறுவது பற்றிப் பெரிய அளவில் பேசப்படவும் இல்லை அது தொடர்பாக எதிர்நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

யுத்தம் முடிந்த பின்பு வடக்கு கிழக்கில் மீள் குடியேற்றம், வீட்டு உரிமைப் பிரச்சினை, காணித் தகராறு, புனரமைப்பு போன்ற விடயங்களை முஸ்லிம் மக்கள் எதிர் நோக்குகின்றனர். அதேவேளை அரசாங்கத்தின் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளால் முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வந்த பகுதிகள் அபகரிக்கப்படும் அபாயநிலை தோன்றியுள்ளது. கரையோரப் பகுதிக ளான கிழக்கிலும் மன்னாரிலும் முஸ்லிம் மக்களது வாழ்விடங்களில் ராணுவக் கடற்படை முகாம்களை அமைக்கும வேலைகள் நடக்கின்றன. இதனால் முஸ்லிம்கள் தமது பாரம்பரிய வாழ்விடங்களில் இருந்து அகற்றப்படுகின்றனர். அதேவேளை போரால் இடம் பெயர்ந்தவர்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்ப டவில்லை. யாழ் குடாநாட்டிலும்

வன்னிப் பகுதிகளிலும் இதே நிலை தான் காணப்படுகிறது. அரசாங்கம் தமிழ் முஸ்லிம் மக்களின் பிரதேசங்களைத் திட்டமிட்டுச் சிதைத்தும் தனது விருப்பப்படியான குடியேற்றங்களையும் ராணுவ கடற்படை முகாம்களையும் அமைப்பதில் அக்கறை காட்டி வருகிறதே தவிர மக்களைப் பற்றி அக்கறைப் படுவதாக இல்லை. வடபிரதேசத்தில் யாழ்ப்பா ணத்திலும் ஏனைய இடங்களில் இருந்தும் 1990ல் புலிகள் இயக்கத்தால் துரத்தப்பட்ட முஸ்லிம் மக்கள் இப்போது தமது சொந்த இடங்களுக்குத் திரும்புகின்றனர். ஆனால் மீள்குடியேற்றத்தில் அவர்கள் கடுமையான பிரச்சினை களை எதிர்நோக்குகின்றனர்.

மீள் குடியேற்றத்திற்கான அரசாங்க நிவாரணமும் அரச சார்பற்ற நிறுவனங்களது உதவியும் கிடைத்து வருகின்றன என்றே கூறப்படுகிறது. ஆனால் அவை மீள் குடியேறிய மக்களுக்கு நேரான வழியிலும் நேர்மையான வகையிலும் சென்றடைகிறதா என்பதற்கு முறையான பதில் இல்லை. முற்றாக அழிந்த வீடுகளும் அரைகுறையாக அழிந்த வீடுகளும் ஓரளவு திருத்த வேண்டிய வீடுகளும் என வீடுகள் பலதரத்திலும் உள்ளன. அவற்றைக் கையாள்வதில் அரசாங்க உயர் அதிகாரிகள் முஸ்லிம் மக்களுடன் பாரபட்சமாக நடந்துக் கொள்வதாகவும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.


மேற்படி நிலைமைகள் முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை யில் வடக்கிலும் கிழக்கிலும் தொடரும் துயரங்களாகவும் இடர்ப்பாடுகளாகவுமே காணப்படுகின்றன. இவற்றைப் பற்றி முஸ்லிம் தலைமைகள் உருப்படியாக எதையும் செய்வதாக இல்லை. நீயா நானா எனத் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு ஆளும் மஹிந்த சிந்தனை அரசாங்கத்தின் பதவி நாற்காலிகளை இறுகப் பிடித்தவாறு இருக்கிறார்கள். இதில் குறிப்பிடக் கூடிய விடயம் ஏதெனில், அமைச்சர்களுடன் நெருக்கமாகவும் தலைமைகளுடன் நட்பாகவும் இருக்கும் வசதிவாய்ப்புள்ள முஸ்லிம்கள் தமக்கானவற்றைப் பெற்றுக் கொள்கின்றனர். சாதாரண முஸ்லிம்களின் நிலை பட்டகாலிலேயேபடுகிற கதையாக இருந்து வருகிறது.

அரசாங்கத்துடன் இணைந்து நின்று தான் தமது சமூகத்துக்குச் சேவை செய்ய முடியும் என்பது முஸ்லிம் தலைமைகளின் நம்பிக்கையும் நிலைப்பாடுமாகும். ஆனால் அவ்வாறு பதவிகள் மேலிருந்து கீழ் வரை பெற்றும் அவற்றால் சாதாரண உழைக்கும் முஸ்லிம் மக்களுக்கு எவற்றைப் பெற்றுக் கொடுத்து சாதிக்க முடிந்தது? நேற்று ஐ.தே. கட்சி ஆட்சி என்றால் அதில் அமைச்சர் பதவிகள். பின்பு மாறி ஐ.ம.சு. முன்னணி ஆட்சி என்றால் அதிலும் அமைச்சர் பதவிகள். இவ்வாறு இடம்மாறுவது முஸ்லிம் தலைமைகளுக்கு ஒரு பிரச்சினை யல்ல. எல்லாம் முஸ்லிம் மக்களின் நன்மைக்காகவே என்று உரத்துக் கூற எந்தத் தலைமையும் பின் நின்ற தில்லை.

இத்தகைய தலைமைகளால் அவர்களைச் சுற்றியுள்ள ஒரு பிரிவினருக்கு மட்டுமே சலுகைகள் உதவிகள் பெற்றுக் கொடுக்க முடியுமே ஒழியப் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு அல்ல. அரசாங்கத்தின் ராணுவமயப்பட்ட பேரினவாத நடவடிக்கை முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் போது எம் முஸ்லிம் தலைமைகள் தமது இயலாமையை வெளிப்படுத்தி நிற்கின்றனர். அவர்கள் பட்டம் பதவிகளைச் சுமந்து நிற்பதால் முஸ்லிம் மக்களுக்கு என்ன பயன்?

எம். ஆர். இஸ்மாயில்



எந்தவிதமான தொழில்நுட்பமும் அதன் பயன்களுடன் சேர்த்துச் சில அபாயங்களையும் கொண்டு.வர இடமுண்டு. சில வேளைகளில் அபாயங்கள் உடனடியாகவே விளங்குகின்றன. வேறு வேளைகளில் அவற்றை அறிய நீண்ட காலமெடுக்கிறது. சில அபாயங்களைக் குறைப்பதும் தவிர்ப்பதும் எளிதில் இயலுமாகின்றது. வேறு சில கையாளச் சிரமமானவை. அணுசக்தியின் பிரச்சினைகளைச் சரிவர விளங்கிக் கொள்ள நீண்டகாலம் எடுத்தது. அதன் அபாயங்கள் அணுசக்தி நிலையங்களில் வேலை பார்ப்போர் நேரடியான கதிரியக்கப் பாதிப்புக்குட்படுவது முதல் கழிவுப் பொருட்களிலிருந்து வெளிப்படும் கதிரியக்கம் வரையிலானவை. கழிவுப் பொருட்களை மனிதரின் வாழ்க்கைச் சுற்றாடலிலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டியுள்ளது. இவற்றை விட, அணு உலைகளின் இயக்கத்தின் போது நிகழக்கூடிய விபத்துக்கள் பாரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

அணுசக்தி இயக்கத்தின் போது மூன்று முக்கியமான விபத்துக்கள் நேர்ந்துள்ளன முதலாவது பிரித்தானியாவின் செலா.ஃபீல்டில். அடுத்தது அமெரிக்காவின் 3-மைல் தீவில். மற்றது சோவியத் யூனியனின் சேர்னோபிலில். இவை தொழில்நுட்பப் பிரச்சினைகளின் விளைவானவை. புதிய அணு உலைகளில் அவ்வாறு நிகழாமல் தடுக்கலாம். ஆனால் வேறொரு விதமான விபத்து நிகழாது என்பதற்கு உத்தரவாதமில்லை. அவற்றைவிடப் போரின் போதோ பயங்கரவாதத் தாக்குதலின் போதோ அணு உலைகள் சேதப்படலாம். நில நடுக்கமும் சுனாமியும், சென்ற ஆண்டு வரை யாரும் நினைத்திராதபடி, பாரிய சேதத்தை உண்டாக்கலாம்.

சேதத்தின் விளைவுகள் உடனடியான அயலுடன் நிற்க அவசியமில்லை. காற் றின் திசையும் கடல் நீரோட்டமும் ஆற்றின் பாய்ச்சலும் ஆபத்தான கதிரியக்கத்தை நீண்ட தொலைக்குக் கொண்டு செல்லலாம். அவ்வாறு பரவும் அக் கதிரியக் கத்தால் உயிருக்குக் கேடில்லாவிடினும் உடல் நலனுக்குப் பெருங்கேடு விளையாலாம் என்பது இப்போது அறியப்பட்ட உண்மை.

எவ்வாறாயினும் விபத்திற்குள்ளான ஒரு அணு உலையின் சில நூறு கிலோ மீற்றர் வரையிலான அயலில் வாழும் மக்கள் உயிராபத்தையோ நிச்சயமாக உடல் நலக் கேட்டையோ எதிர்பார்க்கலாம். எனவே அணுவலு உற்பத்தி நிலையங்கள் மக்கள் நெருக்கமாக வாழுகிற குடியிருப்புக்களுக்கு அருகே அமைவது உகந்ததல்ல.

அணுசக்தியின் துணை விளைவுகள் பற்றிய எச்சரிக்கை உணர்வினாலேயே ஜேர்மனி போன்ற முன்னேறிய நாடுகள் அணுசக்தி உற்பத்தியை மட்டுப்படுத்தியதுடன், இவ்வாண்டின் ஜப்பானிய விபத்திற்குப் பின்பு முற்றாகவே நிறுத்துகிற திட்டத்தை அறிவித்துள்ளன. எனினும் மூன்றாம் உலகின் புதிய முதலாளித்துவ எழுச்சி அவ்வாறான நோக்கத்துடன் இல்லை. குறைந்தபட்சம், அணு மின் நிலையங்களை மக்கள் செறிவாக வாழாத பகுதிகளில் அப் பகுதியில் வாழும் மக்களுக்கு மாற்று வதிவிடங்களையும் வாழ்வாதாரங்களையும் உறுதிப்படுத்திய பின்பு நிறுவுகிற யோசனை கூடச் சில ஆட்சியாளர்களிடம் இல்லை.

இப் பின்னணியிலேயே தமிழகத்தின் தென்பகுதியில் கூடங்குளம் எனும் கடலை அண்டைய கிராமப்பகுதியில் நிறுவப்பட்டு நீண்டகாலம் இயங்காமலிருந்த மின் உலைகளை மீளவும் செயற்படுத்துகிற திட்டத்திற்கு மக்களின் பகிரங்க எதிர்ப்பு வெளிப்பட்டது. கூடங்குள அயலிலுள்ள மக்கள் நீண்ட காலமாகவே அணு மின் நிலையத்தைப் பற்றி விருப்பமின்றி இருந்த போதும் ஜப்பானிய ஃபுக்குஷிமா விபத்தின் பின்னணியில் மக்கள் துணிந்து தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்த முற்பட்டனர்.

மக்களின் கடும் எதிர்ப்பின் விளைவாகத் தமிழக அரசு அணுமின்நிலைய வேலைகளை நிறுத்துமாறு மத்திய அரசைக் கேட்பதாக செப்டம்பர் 22ஆம் திகதி சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியதையடுத்துச் சிலகாலம் இடைநிறுத்தப்பட்ட போராட்டம் கூடங்குள அயலிலுள்ள கிராமங்களின் மக்களது ஆதரவைப் பெற்றதாக மட்டுமில்லாமல் அனைத்துத் தமிழக மக்களதும் ஆதரவைப் பெற்றுத் தொடருகிறது.

அதற்கு எதிராக மத்திய அரசு பலவகையான தந்திரங்களைப் பயன்படுத்திய போதும் அதன் உத்தரவாதங்களையோ மிரட்டல்களையோ எதிர்ப்பாளர்கள் ஏற்க ஆயத்தமாக இல்லை. கூடங்குளம் போராட்டம் இந்தியாவின் பிற பகுதிகளில் ஏற்கனவே பொருளாதார அபிவிருத்தி என்ற பேரில் பழங்குடிகளதும் கிராமப் பகுதிகளதும் மக்களின் வாழ்வாதாரங்களைச் சிதைத்து நாட்டின் மூல வளங்களை மூர்க்கத்தனமாக வற்றடிக்கும் முயற்சிகட்கெதிரான போராட்டங்களுடன் சேர்த்து நோக்க வேண்டியதாகும்.

பழங்குடி மக்களின் போராட்டங்களை மாஓவாதிகளின் பயங்கரவாதம் என்று தட்டிக்கழித்த இந்திய ஆட்சியாளர்கள் கூடங்குளப் போராட்டத்திற்கு வெவ்வேறு நோக்கங்களை கற்பிக்க முயல்கின்றார்கள். தமிழக மக்கள் இலங்கையில் நடந்த பேரினவாதப் போரின் போது அணிதிரண்டதன் பின்பு இப்போது தான் தங்கள் பிரச்சினை ஒன்றுக்காகப் பெருமளவில் அணிதிரண்டு போராடுகின்றனர். அதை நாம் ஆதரிக்க வேண்டும்.

நமக்குத் தமிழக மக்களின் அதரவு வேண்டும் என்று பேசுகின்ற தமிழ்த் தலைவர்கள் ஏன் தமிழக மக்களின் நியாயமான போராட்டமொன்றை ஆதரிக்க தயங்குகின்றார்கள்.

கூடங்குளத்தில் பெரு விபத்து ஏற்பட்டால் அதில் தென் தமிழகத்திற்கு அடுத்தபடியாகப் பெரிதும் பாதிக்கப்படப் போவது இலங்கையின் வடபிரதேசமாகத் தான் அமையும். அதற்காகவேனும் இப் பிரச்சினை பற்றி வாய்த்திறக்க மாட்டார்களா?

இனப்பற்றையும் தமது சமூகத்தைப் பற்றிய அக்கறையையும் விட டில்லி எசமான விசுவாசம் முக்கியமானதல்லவா.

இலங்கை அரசாங்கமும் இதைப் பற்றிக் கண்டுக்கொள்ளுவதாக தெரியவில்லை. அதற்கான காரணங்கள் விளங்க கடினமானவையல்ல. ஒரு பெரு விபத்து நிகழுமாயின் அது இலங்கையின் தென் பகுதியையும் பாதிக்கலாம் என்பதை ஆட்சியாளர்களினால் ஏன் முன்னுணர்ந்து கொள்ள முடியவில்லை? ஏனெனில் அவர்களில் எவரும் மக்களை நேசிப்போராகவோ மக்களைப் பற்றிய அக்கறை உள்ளவர்களாகவோ இல்லாதிருப்பதால் தான்.

# அடுத்த குறி ஈரான்?

லிபியாவிற்கு அடுத்து என்ன? அடுத்து எந்த நாட்டில் அவசரமாக அமெரிக்கப் பாணி ஜனநாயகத்தை உருவாக்கவேண்டும்? எண்ணெய்க்கான புதிய களம் எது? "பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்தை" எவ்வாறும் தொடர்ந்தாகவேண்டிய கட்டாயத்தில் அமெரிக்கா இருக்கிறது. அமெரிக்காவின் சரிகின்ற பொருளாதாரம், வால் ஸ்ற்றீட் முற்றுகை என உள்நாட்டில் ஏராளமான அழுத்தங்களை அமெரிக்கா சந்தித்துவரும் நிலையில் "எல்லாவற்றுக்கும் பொறுப்பாளியாகக்கூடிய" ஒரு நாட்டைத் தெரிவுசெய்து போரிடுவது அவசியமானதும் அவசரமானதுமாகும். அதே வேளை அவ்வாறான ஒரு "நியாயப்படுத்தும்" போரை ஒரு சிறந்த திசைதிருப்பும் உத்தியாகவும் பயன்படுத்த முடியும்.

அமெரிக்காவுக்கு இப்போது இருப்பன இரண்டு தெரிவுகள்: ஒன்று ஈரான், மற்றது வெனசுவேலா. இரண்டும் எண்ணெய்வளம் மிக்க நாடுகள். அடுத்து, இரண்டு நாட்டுத் தலைவர்களையும் ஊடகங்களின் புண்ணியத்தில் 'சாத்தான்களாகவும்', உலகின் பெரிய அச்சுறுத்தல் எனவும் உருவகித்துள்ளமை என்றளவில் இரண்டும் பொருத்தமானவையே. எண்ணெய் வளம் அதிகம் உள்ள நாடென்ற வகையிலும், அமெரிக்காவின் கொல்லைப்புறம் என்ற வகையிலும் வெனசுவேலா வாய்பானது. ஆனால் வெனசுவேலாவின் அண்டைநாடுகள் அமெரிக்காவிற்கு வாய்ப்பாக இல்லை. அதே வேளை, முழுக் கொல்லைப்புறமுமே அமெரிக்கப் பிடியிலிருந்து விலகிவருகிறது. அமெரிக்காவால் முன்புபோல் நினைத்ததை நினைத்தவுடன் செய்யமுடிவதில்லை. இப்போதுள்ள நிலையில் தமக்கு பக்கத்தில் உள்ளவொரு நாட்டில் அமெரிக்கா யுத்தம் செய்வதை அமெரிக்க மக்கள் விரும்ப மாட்டார்கள். இப்போதைக்கு வெனசுவேலா மீது நேரடி யுத்தமொன்றை அமெரிக்கா மேற்கொள்ளாது. ஆனால் தனது வழமையான பாணியில் ஆட்சிக் கவிழ்ப்புக்குத் தொடர்ந்தும் முயலும் என்று மட்டும் உறுதியாக நம்பலாம்.

இப்போதைக்கு வசதியான எதிரி, ஈரான் மட்டுமே. அமெரிக்காவின் "பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்தின்" ஆதாரங்களில் ஒன்றான "நாகரிகங்களிடையிலான மோதல்" என்று கருத்தாக்கத்தை பயன்படுத்தி ஈரான் மீதான தாக்குதலை நியாயப்படுத்த இயலாமலா போகும்! "அரபு எழுச்சியை" அடுத்த கட்டத்திற்கு நகர்த்த அமெரிக்காவுக்கும் மேற்குலகுக்கும் ஈரான் பொருத்தமானதாக இருக்கும். அதேவேளை ஈரான் அணு குண்டுகளைத் தயாரிக்க ஆயத்தமாகி வருவதாக ஐ.நா.வின் சர்வதேச அணுசக்தி அதிகாரமையம் இப்போது சொல்லத் தொடங்குகிறது. உலக அமைதிக்கு ஆபத்து என்று சொல்லி தாக்குதல் தொடங்க இது போதாதா.

இதற்கிடையில் இஸ்ரேலிய அதிபர் ஷிமொன் பெரெஸ் தமது நாட்டுத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தும் காலம் நெருங்குவதாக மிரட்டல் விடுத்திருந்தார். ரஷ்யாவும் சீனாவும் இதனைக் கடுமையாகக் கண்டித்து எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. லிபியா விடயத்தில் ஒதுங்கி இருந்து வேடிக்கை பார்த்தது போல ஈரான் விடயத்தில் ரஷ்யாவும் சீனாவும் ஒதுங்கி இரா என உறுதியாக நம்பலாம். ஈரான் மீதான தாக்குதல் ரஷ் யாவுக்கும் சீனாவுக்கும் பூகோளரீதியில் பாரிய அச்சுறுத்தலை உருவாக்கக்கூடியது. இப் பின்னணியிலேயே அங்கு போர் உருவாகக்கூடிய சாத்தியம் பற்றி எதிர்வுகூறவேண்டியுள்ளது. அமெரிக்க அதிபர் ஒபாமைப் பொறுத்தவரை ஈரான் மீதான தாக்குதல் தனது 2012இல் இரண்டாவது முறையாக ஜனாதிபதியாக வருவதை பாதிக்காதவரை பிரச்சனையற்றது. ஆனால் அவர் எதிர்பார்ப்பது போன்றதொரு குறுகிய காலத்தில் முடிவுக்குக்கொண்டுவரக்கூடிய ஒரு போரை அமெரிக்காவால் நடாத்த முடியுமா என்பது ஐயமே. எனவேதான் அமெரிக்கா ஈரான் மீது மேலும் பொருளாதாரத் தடைகளை விதிப்பது குறித்து யோசிப்பதாக அறிவிக்கிறது.

ஈரானின் புஸார் நகரம் உட்பட பல இடங்களில் அணுசக்தி உலைகள் போன்ற பல அணுசக்தி மையங்களை ரஷ்யா அமைக்க உதவ இருப்பதாக கிரெம்ளின் அறிவிக்கிறது. இது குறித்து கருத்துவெளியிட்ட மேற்கத்திய ஊடகங்கள் விளாடிமிர் புட்டின் தன்னைச் சாகசக்காரனாக நினைத்துக்கொண்டிருக்கிறார் என்று எழுதி ஈரான் மீதான தாக்குதலுக்கு தூபம் போடுகின்றன. முதலாளித்துவத்தின் நெருக்கடி தவிர்க்கவியலாது புதிய களங்களைத் தேடுகிறது. புதிய போர்களைத் தொடுக்கிறது. புதிய எதிரிகளை உருவாக்குகிறது.

## பாடசாலைகளிற் பெறப்படும் நிதி உதவி புதிய சுற்றுநிரூபத்திற்கு இலஞ்ச ஊழல்கள் விசாரணை ஆணைக்குழு பரிந்துரை

ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் 60% முறைப்பாடுகள் அதிபர்களின் ஊழல் மோசடிகள் தொடர்பானவை

புாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது பாடசாலை அபிவிருத்தி சபை, பழைய மாணவர் சங்கம் என்பன பல இலட்சம் ரூபாய்களை பெற்றுக் கொள்ளும் போதும் தற்போதுள்ள சுற்று நிருபத்தின்படி அந்தப் பணத் திற்கு என்ன நடக்கிறது என்பது பற்றி கல்வி அமைச்சுக்கோ பணம் வழங்கிய பெற்றோருக்கோ அறிவிக்க அவைக்கு எந் தக் கடப்பாடும் இல்லாத நிலை நீடிக்கிறது.

எனவே இதனைச் சரி செய்யப் புதிய சுற்று நிருபம் ஒன்றை வெளியிட கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக இலஞ்ச ஊழல்கள் விசார ணை ஆணை க்குழுவின் தலைவர் ஜகத் பாலபட்டபெந்தி அவர்கள் குறிப்பிட்டார். கல்வி அமைச்சின் உத்தியோகத் தர்களுடன் நடந்த பேச்சுவார்த்தையில் தற்போதுள்ள சிக்கலான சுற்றுநிருபத்தை நீக்கிவிட்டு நடைபெறும் ஊழல் மோசடிகளை நிவர்த்தி செய்ய தெளிவான சுற்று நிருபம் ஒன்றை டிசம்பர் மாதத்திற்கு முன்னர் தயாரித்து அதன் பிரதியை ஆணைக்குழுவிற்கு அனுப்பக் கல்வி அமைச்சு ஒத்துக் கொண்டுள்ளது.

பாடசாலையின் அபிவிருத்திக்காகப் பாடசாலை அபிவிருத்தி சபை, பழைய மாணவர் சங்கம் என்பன அறவிடும் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக பல முறைப்பாடுகள் கிடைக்கபெற்றுள்ளதாக இலஞ்ச ஊழல்கள் விசாரணை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. ஆணைக்குழுவிற்குகிடைக்கும் முறைப்பாடுகளில் 60 சதவீதமானவை அதிபர்களின் ஊழல் மோசடிகள் பற்றியதாக இருக்கும் நிலையில், குறித்த பணத்தை அதிபர்கள் கையாளும் முறையும் கல்வி அமைச்சின் பரிசீலனைக்கு உட்பட வேண்டும் என இலஞ்ச ஊழல்கள் விசாரணை ஆணைக்குழு ஆலோசனை வழங்கியுள்ளது.

---

இலங்கையில் தேசிய நலனனுக்கு அவசரம் என்று கொண்டுவரப்பட்ட அனேகமான சட்டமூலங்களுக்குப் பின்னால் இருந்துவரும் நோக்கம் மக்களின் ஜனநாயக ரீதியான உரிமைகளை மிதித்து நசுக்குவதாகவே இருந்துள்ளது.

இலங்கையின் அடிப்படைச் சட்டமான அரசியலமைப்பு மக்கள் விரோதப் பண்புகள் பல கொண்டது என்பது அரசியலமைப்பு விற்பன்னர்களின் கருத்து. அதில் 122ம் உறுப்புரையின் தேசிய நலனுக்கு அவசரமான சட்டமூலம் பற்றிய ஏற்பாடும் ஒன்றாகும். அடிப்படைச் சட்டத்தில் இருக்கும் ஜனநாயக விரோத ஏற்பாடுகள் பல மக்கள் விரோதச் சட்டங்கள் தோன்றுவதற்கும் ஆதாரமாக இருக்கும். ஆளும் கட்சி பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையை பெற்று ஜனாதிபதியும் அதே கட்சியைச் சார்ந்துள்ள நிலையில் இவ்வாறான சட்ட ஏற்பாடுகளை மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு வசதியாகப் பயன்படுத்தப்படுவது தவிர்க்கமுடியாது. இதனையே நமது கட்சி 1978 யாப்பு அமுலுக்கு வந்த காலத்தில் இருந்து அழுத்தமாய்க் கூறிவந்துள்ளது. சட்டங்களும் சட்டத்திருத்தங்களும் முதலாளித்துவச் சொத்துச் சுகம் கொண்டோருக்கும் அவற்றை பாதுகாக்கும் போலி ஜனநாயக வேடத்திற்கும் அவசியமானவையாகும். அவற்றையே நாம் கண் முன்னே காண்கிறோம்.

வி.விஜயன்

---

# உலக அரங்கின் நாட்குறிப்பு



உலகோன்

## அபத்தங்களும் ஆபத்துகளும்

தமிழ்த் தலைவர்களாகட்டும் அவர்களது வாரிசுகளாட்டும் தமிழ்தேசியர்களாகட்டும் இஸ்ரேல் பற்றிய மாயையில் இருந்து வெளியே வருவதாக இல்லை. இன்னமும் இஸ்ரேல் போல தமிழீழம் அமையும் என்றும் அதற்காகவே சர்வதேசச் சமூகம் காத்துக் கிடப்பதாகவும் சொல்கிறார்கள். சர்வதேசம் தமிழ் மக்களின் பிரச்சனை யைத் தீர்த்துவைக்கத் தயாராகவிருப்பதாக சொல்லும் தமிழ்த் தலை மைகள் இவ்வளவு காலமும் ஏன் அந்தச் சர்வதேசச் சமூகம் பலஸ்தீன மக்களின் பிரச்சனையைத் தீர்த்துவைக்கவில்லை என்றோ ஏன் அதற்கு இன்னமும் தயாராக இல்லை என்றோ சொல்வார்களா? தமிழ் மக்கள் போல, உண்மையில் அவர்களிலும் நீண்ட காலமாகக், கிட்டத்தட்ட அறுபது ஆண்டுகளாகத் தங்கள் உரிமைக்காகவும் தங்களது நாட்டுக்காகவும் அவர்கள் போராடி வருகிறார்கள். அவர்கள் தங்கள் உரிமைகளை வெல்வது உலகில் உரிமைகளுக்காக போராடிவரும் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் கிடைக்கும் வெற்றியாகும்.

பலஸ்தீனம் இப்போது ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர உறுப்புரிமையைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அண்மையில் ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோவில் முழு உறுப்புரிமையைப் பலஸ்தீனம் பெற்றுக் கொண்டதை அமெரிக்காவும் இஸ்ரேலும் வன்மையாகக் கண்டித்துள்ளன. அதற்குப் பதிலடியாக மேற்குக்கரையிலும் கிழக்கு ஜெருசலேமிலும் யூதக் குடியேற்றங்களை விரைவுபடுத்தப் போவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. மேலும், பாலஸ்தீன அதிகார சபைக்கான நிதிப் பரிமாற்றங்க ளையும் தற்காலிகமாக முடக்கப்போவதாக அது தெரிவித்துள்ளது. இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன நிலப்பரப்பில் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான யூதர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். காஸா மீது இஸ்ரேல் விதித்திருக்கும் தடை கடல்வழியாக உதவிப்பொருட்கள் வருவதைத் தடுக்கிறது. தொடர்ந்தும் பொருளாதாரத் தடைகளினால் பலஸ்தீன மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதற்கிடையில், பலஸ்தீனத்திற்கு உறுப்புறிமை வழங்கியதற்காக யுனெஸ்கோவைத் தண்டிக்குமுகமாக, அமெரிக்கா யுனெஸ்கோவிலிருந்து விலகியுள்ளதோடு யுனெஸ்கோவிற்கு வழங்கும் நிதி உதவியை நிறுத்துதாகவும் அறிவித்துள்ளது. தனது சொந்த மக்களின் அன்றாடப் பிரச்சனைகளையே தீர்க்க வக்கில்லாத அமெரிக்கா இப்போது தனது நிதி வலிமையின் மூலம் யுனெஸ்கோவை மிரட்டிப் பணியவைக்க முயலுகிறது. அமெரிக்கா யுனெஸ்கோவின் மொத்த நிதியில் 22%ஐ வழங்குகிறது. அதன் மூலம் யுனெஸ்கோவைக் கட்டுப்படுத்த முயலுகிறது. ஐ.நா.வின் அமைப்பொன்றுக்கு அத்தகைய பெரிய தொகையை அமெரிக்கா செலவிடுவதன் பின்னணியில் பெரியதொரு கதை இருக்கிறது.

1984 இல் அமெரிக்க அதிபராக இருந்த ரீகன் யுனெஸ்கோ அமெரிக்காவுக்குப் பகைமையான நிலைப்பாடுகளை எடுப்பதாகவும் "தீய சக்திகளால்" யுனெஸ்கோ மிகையாக அரசியல்மயப்பட்டுள்ளதா கவுங் கூறி யுனெஸ்கோ உறுப்புறுமையிலிருந்து விலகிக் கொண்டது. கல்வி, அறிவியல், பண்பாடு, தொடர்பாடல் ஆகிய துறைகள் மனித மனங்களில் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்தை அடைவதற்கான வழியாக இருக்கின்றன என்ற அடிப்படையில், யுனெஸ்கோ, அத் துறைகளில் உறுப்பு நாடுகளிடையே ஒத்துழைப்பை ஊக்குவித்து இயங்கி வருகின்றது. இன, மொழி, மத, பால் வேறுபாடின்றி, உலக மக்கள் அனைவருக்குமான நீதி, சட்ட விதிமுறைகள், மனித உரிமைகள், ஐக்கிய நாடுகள் உரிமை ஆவணத்தில் அறிவிக்கப்பட்டிருக்கும் அடிப்படைச் சுதந்திரம் ஆகியவற்றிற்கு உலகளாவிய முறையில் கிடைகக்கவேண்டிய மதிப்பை உறுதி செய்வதே இவ்வமைப்பின் நோக்கம் ஆகும். 2001இல் ஜோர்ஜ் புஷ் பயங்கரவாதத்திறகு எதிரான யுத்தத்தைத் தொடங்கிய பின்னணியில் யுனெஸ்கோ உறுப்புரிமையைக் கொண்டிருப்பதும் அதனைக் கட்டுப்படுத்துவதும் முக்கியமெனக் கருதினார். 2002இல் அமெரிக்கா யுனெஸ்கோவில் மீண்டும் இணைந்து அதைக் கட்டுப்படுத்தியது. அதன் பயனாகவே, ஈராக் மீதான அமெரிக்க யுத்தத்தின் விளைவாக ஈராக்கின் தேசிய அருங்காட்சியம் சூறையாடப்பட்ட போதும், யுனெஸ்கோ பாதுகாக்கப்படவேண்டியவை என இனங்காணப்பட்ட இடங்கள் நேட்டோப் படைகளின் தாக்குதல்களில் அழிக்கப்பட்டபோதும் யுனெஸ்கோ எவ்விதமான கண்டனத்தையும் தெரிவிக்காது அமைதி காத்தது.

பலஸ்தீனத்தின் தனிநாட்டு அங்கீகாரத்துக்கான பாதை கடினமானது. பூகோள அரசியலின் முக்கிய பாத்திரங்களின் சொந்த நலன்களினால் அது மேலும் சிக்கலாக்கப்பட்டுள்ளது. ஆனாற் பயணம் தொடங்கி விட்டது. இன்றைய சூழலில், இஸ்ரேல்-பலஸ்தீனப் பிரச்சனை இரண்டும் இரு வெவ்வேறு நாடுகள் என்ற அங்கீகாரம் வழங்கப்படுவதன் மூலமே தீர்க்கப்படமுடியும். இந்த இடத்திலே தான், தாம் யாருடைய தரப்பில் நிற்பது என்ற முடிவைத் தமிழ் மக்கள் எடுத்தாக வேண்டும். அந்த முடிவு தமிழ் மக்களின் தலைவிதியையும் எழுதவல்லது. தமிழ்த் தலைவர்கள் வேண்டுமானால் இஸ்ரேலை ஆதரிக்கட்டும். அவர்கள் இதுவரை தமிழ் மக்கள் போல் பாதிக்கப்பட்டவர்கள் அல்ல. அவர்களுடைய தவறான முடிவுகள் அவர்களை என்றும் பாதித்ததில்லை. விடுதலைப் புலிகளே ஏகப் பிரதிநிதிகள் என்று சொல்லிவிட்டுப், புலிகளின் அழிவின் பின், புலிகளை ஏகப் பிரதிநிதிகளாகத் தாங்கள் ஒருகாலும் கொள்ளவில்லை எனவும் தாங்களே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் எனவும் அரசுடன் பேசும்போது சொல்ல அவர்கட்கு முடிகிறது.

பாதிக்கப்பட்டோரும் முட்கம்பி வேலிகளின் பின்னிருந்தோரும் கூடாரங்களில் வாழ்ந்தோரும் தலைவர்கள் அல்ல. மக்கள் தான். மக்கள் தங்களுக்கான விதியைத் தாமே எழுதவேண்டும். அது இன்றைய நிலையிற் தவிர்க்கவியலாதது. தவறின் அபத்தங்களின் ஆபத்துக்களில் சிக்கிச் சீரழிவதும் கூட தவிர்க்கவியலாததே.

# "காலம் மாறுது" நாட்டார் பாடல்கள்

## இறுவட்டு தொடர்பான பகிர்வு



**சை. கிங்ஸ்லி கோமஸ்**

மலையகத்தில் இருந்து தோற்றம் பெற்றுள்ள நாட்டார் பாடல்கள் தொடர்பாக பலர் பல ஆய்வுகளை செய்திருப்பது மலையகத்திற்கு பெருமை சேர்த்துள்ளது. மலையக நாட்டார் பாடல்களைப் பொருத்த மட்டில் முதல் தடவையாக மக்களுக்காய் மக்கள் பாடல்கள் இறு வெட்டாக காவத்தை மண்ணில் இருந்து வெளிவந்துள்ளது இதற்கு முன் தேசிய கலை இலக்கியப் பேரவையின் குன்றத்து குமுறல் கவிதை நூலில் இருந்து தேர்ந்தெடுத்த சில கவிதைகள் பாடல்களாக்கப்பட்டு ஒலிநாடாவாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. புதிய மலையகம் அமைப்பினரும் தேசிய கலை இலக்கிய பேரவையும் இணைந்து வெளியிட்டுள்ள காலம் மாறுது நாட்டார் பாடல் இறுவெட்டு மக்களால் பேசப்பட போகும் பாடல்களை தாங்கி வந்துள்ளமை குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

நாட்டார் இலக்கியம் என்பது உழைக்கும் மக்களின் இலக்கியமாகவும் ஒடுக்கப்பட்டவர்களின் இலக்கியமாகவும் காணப்பட்டது வரலாற்று உண்மையாகும் இதற்கமைய புதிய மலையகம் அமைப்பினரும் தேசிய கலை இலக்கியப் பேரவையும் இணைந்து ஒடுக்கப்படும் மலையக மக்களின் இலக்கிய வெளிப்பாடுகளாக கொண்டு வந்துள்ள காலம் மாறுது இறுவட்டில் முதலாவது பாடலான "இந்த மலை நாட்டினிலே உழைக்கும் மக்கள் நாங்க" என்னும் பாடலின் வரிகள் மலையக மக்கள் ஐக்கியப்பட வேண்டிய காலம் வந்துள்ளது என்பதனையும் வெறும் சலுகைகள் அல்ல எமக்கும் இந்த நாட்டிலே உரிமையுண்டு என்பதனால்

இந்த மலை நாட்டினிலே உழகைக்கும் மக்கள் நாங்க<br>
உயர்வே இல்லாம வீழ்ந்து கிடக்கிறோங்க<br>
பாட்டன் பூட்டன் காலம் தொட்டே இதே நிலைமை தாங்க<br>
பாட்டாளி வர்க்கம் இணைந்து போராடுவோங்க<br>
தேயிலையும் ரப்பரும் எங்க ஒழைப்பு தாங்க<br>
இந்த நாட்டின் பொருளாதாரத்தின்முதுகெலும்பு நாங்க<br>
நம்ம வீட்டு அடுப்பில் எல்லாம் பூன தூங்குதுங்க இந்த பூமியையே புரட்டிப் போட எழுந்து வாங்க நீங்க<br>
இங்கு உழைப்பவர்க்கே நிலங்கள் சொந்தம் எழுதி கேட்போம் வாங்க

என்று பாடப்பட்டுள்ளது இந்தவரிகளை கேட்கும் போது மலையக மக்கள் ஐக்கியப்பட வேண்டிய காலம் வந்துள்ளது என்பதனை மட்டும் அல்ல மலையக மக்களின் உரிமைகளை இது வரைக்கும் எவரும் பெற்று கொடுக்க. முயற்சிக்கவே இல்லை முயற்சிக்கவும் மாட்டார்கள் எனவே மக்கள் விடியலை நோக்கி பயணிகக் ஒன்று சேர வேண்டும் என்பதனை அடையாளப்படுத்தி நிற்கின்றது

இரண்டாவது பாடலை கேட்கும் அனைவருக்கும் கண்களில் நீர் ஊற்றெடுக்க செய்யும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை

அம்மா வெளிநாட்டு வேல தேடி போனீங்களே எங்க<br>
மனசெல்லாம் நெனவாக நெறஞ்சனீங்களே

என்னும் பாடல் வரிகள் மலையக கலாச்சாரப் பண்பாடுகள் மோசமாக சிதைவடைந்து போவதற்கு பிரதானமான காரணங்களாக பல இருந்தபோதும் மத்திய கிழக்கு நாடுகளில் பணிப் பெண்களாக வேலைக்கு போன பெண்களின் சிதைவடைந்து போன குடும்பங்கள் படும் துன்பங்களை எடுத்துக்காட்டுவதாக காணப்படுகின்றது பாடசாலை மாணவி ஒருவர் தனது ஆசிரியரை சந்தித்து உங்களின் இந்த பாடலை போட்டு காட்டியே எனது தாயின் வெளிநாட்டு பயணத்தினைத் தடுத்து நிறுத்தியுள்ளேன் என்று கூறியதாக ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார் இவர்களின் இந்த கடுமையான உழைப்பிற்கு கிடைத்த முதலாவது விருது இதுவே என்று மகிழ்வதனைக் காணும் போது மக்கள் இலக்கியங்கள் மக்களை சென்றடைந்துள்ளமையை காணமுடிகின்றது

மூன்றாவது பாடல் காலத்தின் தேவை கருதி படைக்கப்பட்ட ஒரு பாடலாகும். சமய சாதி நிற கட்சி இன பேதங்களை சாதாரண மக்களின் மனங்களில் பதியச் செய்து பெரும் யுத்தங்களையும் சண்டைகளையும் ஏற்படுத்துபவர்கள் ஏற்படுத்தியவர்கள் ஒன்றாக சேர்நது ஒரே குடையின் கீழ் சல்லாபித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் தொழிலாளர்களும் விவசாயிகளுமே. பணக்கரர்கள் சொகுசாய் வாழ்வதற் காய் மூட்டி விடும் பிரிவினைவாதம் எமக்கு தேவை யில்லை அவற்றை மறந்து ஏழைகள் நாங்கள் ஐக்கியப் படுவோம் என்னும் செய்தியினைத் தாங்கி வருகின்றது இந்தப் பாடல்.

தமிழன் என்னடா சிங்களவன் என்னடா<br>
துணிந்து சொல்லுவோம் நாங்க தொழிலாளியடா<br>
முருகன் கூட புத்தரோட வாழுராரடா கதிர்காமம் போய் பாரடா<br>
பெரும்பான்மை சிறுபான்மைபெருத்த நோயடா தேசத்த எறிச்சத் தீயடா

என்னும் பாடலை கேட்கும் பொழுது நாங்களும் எவ்வளவு மூடர்களாக இனவாதிகளாக வாழ்ந்துள்ளோம் என்பது வெட்கி தலைக் குனிய வைக்கின்றது

மலை நாடு முன்னேறுதுங்குரான் அட மினு மினு மினுக்கா ஜிலு ஜிலு ஜிலுக்கா ஜர்மன் அமேரிக்கா ஜப்பானுக் கணக்கா<br>
டயகம அண்ணனுக்கு நாய் கடிச்சாலும் நாவலபிட்டிப் போயித்தான் நல்ல ஊசி போடனும்

இந்த வரிகள் பல உண்மைகளை பேசியிருப்பது பாடலைக் கேட்கும் அனைவருக்கும் புலப்படும்

இது நான்காவது பாடலாகும்

ஐந்தாவது பாடல் தேயிலைத் தோட்ட தளிர்களே என்னும் பாடலும்-ஆறாவது பாடல் வருகுதடா தேர்தல் வருகுதடா வரும் திருடர்களைத் தெரிந்து கொள்ளடா என்னும் பாடலும் ஏழாவதுப்பாடல் எங்க நாடு போகுது மேல என்னும் பாடலும் காணப்படுகின்றது

கடைசிப் பாடலாக மக்கள் சக்தி சேருகின்றது மாற்று வழித் தேடுகின்றது காலம் காலமாக சிந்திய கண்ணீறின்று ஓயுது என்னும் பாடல் நம்பிக்கையின் தேசிய கீதமாக காணப் படுகின்றது

மக்கள் இலக்கியங்கள் நச்சு இலக்கியங்களையும் நசிவுற்ற இலக்கியங்களையும் வேறோடு பிடுங்கி எறிந்து விடும் என்பதற்கு சான்றாக இந்த எட்டு பாடல்களும் காணப் படுகின்றது. மக்களுக்கு புரியாத இலக்கியங்களைப் படைத்து புலமை பேசும் பின்நவீன படைப்புக்களும் தனக்கு பெருமை சேர்த்துக் கொள்வதற்காக தான் எழுதியதை தானே வாசிக்காத பல படைப்பாளிகளின் படைப்புகளும் தனக்கு பிடிக்காதவர்களை வசைப்பாடுவதற்காய் படைக்கப் படும் மட்டரகமான படைப்புக்களும் தூக்கிப் பிடிக்கப் பட்டு புகழப்பட்டு காணப்படும் இந்தக் காலக் கட்டத்திலே முழுக்க முழுக்க பாமர மக்கள் அனுபவிப்ப தற்காய் படைக்கப்பட்டுள்ள இந்த இலக்கியப் படைப்பு போற்றத் தக்கது.

இந்த படைப்பிற்காக பலரும் தங்களின் மேலான பங்களிப்பினை செய்துள்ள விதத்தைக் கேள்விப் பட்ட பொழுது ஆச்சரியமாக இருந்தது. எந்த மக்களுக்காய் இவை படைக்கப் பட்டனவோ அந்த மக்களிடம் சென்று இந்த பாடல்களைப் பாடிக் காட்டி இதற்காய் நிதி சேர்த்துள்ளார்கள். கூட்டு உழைப்பாய் வெளி வந்துள்ள காலம் மாறுது பாடல்கள் மலையக த்தின் பட்டித் தொட்டி எங்கும் தற்பொழுது கேட்கத் துவங்கி விட்டது எனவே காலம் மாறுவது உறுதி

மலையகத்தில் இருந்து வெளிவரும் இலக்கியப் படைப்புகள் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சிந்தனைக்கு சென்றிருந்தால் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் விலாசம் அற்றவர்களாக வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு இருக்காது என்பதன் காரணத்தினால் தான் இன்று காலம் மாறுது இறுவட்டு அறிமுக நிகழ்வுகள் தோட்டங்களிளும் தொழிலாளர் குடியிருப்புக்களிளும் வெளியிடப் பட்டு வருகின்றது என்று புதிய மலையகம் அமைப்பினர் கூறுகின்றனர் காவத்தையில் முதலாவது இவ் இறு வெட்டு வெளியீட்டு விழாவின் போது 2011.11.13 ஆம் திகதி இதனை வெளியிட்டு வைத்த இலங்கையின் பிரபல இசையமைப்பளரான கருப்பையாபிள்ளை பிரபாகரன் தனது உரையின் போது தான் பல வெளியீட்டு நிகழ்வுகளுக்கு சென்றிருப்ப தாகவும் அவை மிகப் பிரமாண்டமாக பெரும் பொருள் செலவில் ஆடம்பரமான வெளியீடுகளாகக் காணப்ப ட்ட போதும் அவற்றில் மக்கள் வாழ்வியலைப் பேசும் எவையும் இல்லை என்றும் இன்று இங்கு மலையகத்தை நேசிப்பவர்கள் மிக சாதாரண நிகழ்வில் மிகப் பிரமாண்டமான உள்ளடக்கத்தைக் கொண்ட வெளியீட் டைக் கொண்டு வந்துள்ளனர் எனக் கூறியது இங்கு சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

தேசியக் கலை இலக்கியப் பேரவையின் சப்ரகமுவக் கிளையும் புதிய மலையகம் அமைப்பும் இணைந்து தந்துள்ள பாடல் இருவட்டு எல்லோராலும் கேட்கப் பட வேண்டும். காலம் மாறுது என்ற தலைப்பிற்றகேட்ப மலையகம் புதிய மாற்றத்திற்கான பாதையில் பயணிக்க சந்தேகமும் இல்லை வேண்டிய சிந்தனையை ஏற்படுத்தம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை பெரும் கூட்டு உழைப்பில் வெளிவ ந்துள்ள இந்தப் படைப்பு வெற்றி பெற மக்களை நேசிப்ப வர்களின் சார்பில் வாழ்த்துக்கள்

## வறுமையின் ஆசிர்வாதம்

பசியின் கொடுமை தாளாது<br>
அவர்களிடம் - கொஞ்சம்<br>
அரிசி தருமாறு கெஞ்சினேன்:

பசி போக்கும் நெல்மணிகளைவிட<br>
பொருளீட்டும் பயிர்களே முக்கியமென்றும்<br>
அந்நிய செலாவனி<br>
அத்தியாவசியமென்றும்<br>
அவர்கள் உரைத்தார்கள்!

அதீத தாகம் தாளாது<br>
தண்ணீர்க் கிணறொன்றை<br>
ஆக்கித் தருமாறு இரந்தேன்:

முதலில் நகரங்களுக்குத்<br>
தண்ணீர் வசதி வேண்டுமென்றும்<br>
நகரவாசிகளின் நீச்சல் தடாகங்களுக்கும்<br>
பூங்காக்களுக்கும்<br>
நீர் வேண்டுமென்றார்கள்!

மானம் காக்க ஏதேனும்<br>
மேலாடைகளை எனக்குக்<br>
கொடுத்துதவுமாறு வேண்டினேன்;

சற்றே பொறு தோழனே!<br>
ஏற்றுமதிக்கான ஆடைகள்<br>
ஏற்பாடாகிக் கொண்டிருக்கின்றன<br>
என்றார்கள்!

சொந்த நாட்டில் அகதியாகி<br>
அநாதையுமானேன் - ஆயின்<br>
வசிப்பதற்கோர் நிழல்<br>
வேண்டுமென்றேன்:

நண்பா!<br>
இப்போது இடமில்லை என்றார்கள்<br>
நான் சிறைவைக்கப்பட்டேன்!

ஷெட்ரிக் ரெபோலா (இந்தியா)<br>
தமிழில்: மாக்ஸ் பிரபாகர்



**வெளிவந்து விட்டது**

*தாயகம்*<br>
*கலை இலக்கிய*<br>
*சமூக விஞ்ஞான*<br>
*காலாண்டிதழ்*

*எப்ரல் ஓக்ரோபர்*<br>
*2011*




காவத்தையில் காலம் மாறுது நாட்டர் பாடல் இறுவெட்டு வெளியீடு இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்

நவம்பர் ~ டிசம்பர் 2011

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org




எங்களுக்கு
எதுவும் இல்லை
நாங்கள்
90%
நாங்கள் தான்
அமெரிக்கா





San Diego, CA - சான்டிக்கோ




Phoenix, AZ - பொவனக்ஸ்

## முதலாளித்துவப் பெருவணிகக் கொள்ளையர்களை எதிர்த்து அமெரிக்காவில் தொடங்கி உலக நாடுகள் வரை வோல்ஸ்றீட் முற்றுகைப் போராட்டம்



Vancouver, BC வன்கூவர்




அம்மான், ஜோர்தான்



Seattle, WA சீயாற்றல்



சிக்காக்கோ



நியூயோர்க்




தோழர்கள் கே.ஏ.சுப்பிரமணியம் சி.நவரட்ணம் ஆகியோரின் 22வது 7வது ஆண்டு நினைவாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நினைவு தினக் கூட்டத்தில் தோழர்கள் க.தணிகாசலம் செல்வம் கதிர்காமநாதன் கா.பஞ்சலிங்கம் ஆகியோர் உரையாற்றுவதையும் தோழர் அ.சீவரட்ணம் தலைமை தாங்குவதையும் படத்தில் காணலாம்.

வெளியிடுபவர் : இ.தம்பையா, மேல்மாடி இல 06, 571/15 காலி வீதி, கொழும்பு 06. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.